2 SEP 1981

# செங்குந்தமித்திரன்



தென்னிந்திய

செங்குந்த மகாஜன சங்கத்தின்

மாத வெளியீடு

காரியாலயம்:-

பவழக்காரத் தெரு, சென்னை.

எங்கள் மருந்துச்சாலை கடந்த 25 வருடகாலமாய் உள்ளூரிலும், வெளியூரிலும் அநேக வைத்தியர்களும் நோயாளிகளுக்கும் மருந்துகள் செய்து அனுப்பி அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று வருகிறது. அநேக நண்பர்கள் இவ்வளவு சிறந்த மருந்துகள் வெளியூர்களிலுள்ள நண்பர்களுக்குப் பயனளிக்காமல் போய்விடுகிறதென்பதை உணர்ந்து வற்புறுத்திச் சொன்னதின்மேல்விளம்பரம் செய்யமுன்வந்தோம். நண்பர்கள் பலரும் எங்களுடைய மருந்துகளை யாதொரு பயமுமில்லாமல் வாங்கியுண்டு நலனமைந்து எங்களை மேன்மேலும் ஊக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

முதலாவதாக நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் திடகாத்திர முள்ளவர்களாக விளங்க வேண்டுவது அவசியம். தற்கால இளைஞர்கள் பாலிய சேஷ்டையாலும் மிதமிஞ்சிய போகத்தாலும் உடல் நலன் கெட்டுச் செல்லெரித்த மூங்கில்போல் மேலே மனிதராகவும் உள்ளே ஆண்மை இழந்த நிர்ப்பாக்கிய நிலைமையிலும் இருக்கிறார்கள் ; இவர்களுக்கும், ஜுரம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டு ரத்தம் கெட்டுப் பலம் குன்றி இருப்பவர்களும், சாதாரணமாய் பல முள்ளவர்களாய், வீரிய முள்ளவர்களாய் இருக்க விரும்பும் ஒவ்வொரு ஆண் பெண் இருபாலர்க்கும், உலகவாழ்க்கையின் இன்பத்துக்கும், ஆண் சிங்கம் போன்ற பலம் தருவதற்கும்,

## நாராயணசஞ்சீவி லேகியமும் அயத்தங்கச்செந்தூரமும்

மிக்கச் சிறந்தவை என்று உறுதி கூறுகிறோம்.

இந்த லேகியம் செந்தூரம் சித்த வைத்திய முறைப்படி மிக ஜாக்கிரதையாயும் முறைதவறாமலும் செய்து முடிக்கப்பட்டது. வைத்திய முறைப்படி இதைக்காட்டிலும் சிறந்த பலம் தரும் மருந்து வேறென்றில்லை.

### இந்த லேகிய செந்தூரங்களால் தீரும் முக்கிய வியாதிகள்.

தற்காலம் மானிட வர்க்கத்தை நிழல்போல் தொடர்ந்து அரிக்கும் 20 வகை மேகரோகங்கள். குன்மம், பித்த பாண்டு, சூலை, ஓடு வாய்வு, கை கால் முடக்கு. நெஞ்சு தொண்டை எரிச்சல், பித்த எப்பம். அஜீர்ணம். வயிற்றுப்பிசம், பசியின்மை, சோம்பல், நித்திரை வாராமை, நீர் இறங்கும்போது பொறுக்க முடியாத பாதையைத் தரும் தந்திமேகம், தாது நஷ்டம், தேக உளைச்சல், கண்களில் நீர் வடிதல் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். பயங்கரமான மேகவியாதிகளைப் போக்கி தேகத்தைப் புஷ்டியாக்கிச் சப்த நரம்புகளும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியை உண்டாக்கும்.

மனக் கவலையினாலாவது துர் அப்பியாசத்தாலாவது அடிக்கடிவரும் நோயினாலாவது மற்றெந்தக் காரணத்திலாவது பலம் கெட்டவர்கள் நமது லேகிய செந்தூரங்களைச் சாப்பிடுவார்களானால் அழகு தேகாரோக்கியம், தேக வலிவு முதலியவற்றைக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யும். நோயுள்ளவர்கள் தான் இவற்றைச் சாப்பிடவேண்டுமென்பதில்லை. நோயிலாதவர்களும் இவற்றை ஆரோக்கியத்திற்காகச் சாப்பிடலாம். இதற்கு பத்தியமே கிடையாது. காலதேச வர்த்தமானமில்லாமல் எல்லா காலங்களிலும் சாப்பிடலாம். பசிஅதிகமாய் எடுக்குமாகையால் ஜீரணிக்கக்கூடியதும் கொழுமையுள்ளதுமான ஆகாரங்களை வேளை தவறாமல் சாப்பிடவேண்டும். இச்சிறந்த லேகிய செந்தூரங்களை டைரெக்ஷனில் சொல்லியபடி 48 நாள் சாப்பிடுவார்களானால் அவை தேகத்தில் ஊறி மேகங்களை நெருப்புப்பொறி பட்ட பஞ்சுப் பொறியென நாசம் செய்து, புதிய ரத்தத்தை உற்பத்தி செய்து தேகத்தை இளைக்காமலிருக்கச் செய்யும். இவற்றை ஒற்றுமையாய் மனைவியும், கணவனும் ஏககாலத்தில் சாப்பிட்டால் அவர்களுக்கு உற்பத்தியாகும் குழந்தைகள் மிக அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் ஒரு புட்டி செந்தூரமும் ரூ. 2-4-0 தபால்செலவு அணா6. 48-நாள் மருந்து தபால் சார்ஜ் உள்பட ரூ. 4-12-0,

பினாங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலியவெளிநாடுகளுக்கு24-நாள் மருந்து தபால்சார்ஜ் உள்பட ரூ. 3-8-0. 48-நாள்மருந்து ரூ.6-4-0. வெளிநாட்டு அன்பர்கள் பூராவும் முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

**நாராயண சஞ்சீவித்தைலம்**:—பச்சிலை, மூலிகைகளாலும் பசும்பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டது. தேகவரட்சியைப் போக்கி மூளையைக் குளிரச்செய்து புத்தி கூர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25 வருடகாலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள் வாடிக்கையாய் வாங்கி ஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5-பல டின் 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

**நாராயண திராட்சைபழ லேகியம்**:—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நமதுநாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதைச் சரியாய் கவனிக்காமையினால் அநேகவித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கெச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்துக் கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாய் இருக்கும். டப்பி 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகைக்கு V. P. அனுப்பமுடியாது.

(7) **ஸ்ரீ நாராயண மெடிகல் ஹால், காஞ்சீபுரம்.**


327
2 SEP 1931

## உள்ளடக்கம்.


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 274 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை | 275 |
| ஒழுக்கப் பகுதி | 276 |
| குலமுன்னேற்றப் பகுதி—நமது சமூக முன்னேற்றம் | 277 |
| சிதம்பரத்தில் செங்குந்தர்கள் கொடி யேற்றுவதேன் | 280 |
| இரக்கம் இன்றி யமையாதது | 282 |
| சுகாதாரப் பகுதி—குடியால் விளையும் கேடுகள் | 284 |
| மாதர் பகுதி—செங்குந்த மித்திரன் கும்மி | 289 |
| இளைஞர் பக்கம்—ஔவைப் பிராட்டியும், ஆறுமுகனும் | 290 |
| செங்குந்த யாத்திரை வாசி | 292 |
| நிரூபங்கள் | 295 |
| தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் உபகாரச் சம்பளத்தினை 1930—31 ஆண்டில் பெற வேண்டியவர்களின் ஜாபிதா | 289 |
| அனுதாபம் | 300 |
| செங்குந்தர் கிளர்ச்சி | 301 |
| ஆனங்கூர் திருமணவிழா நன்கொடை விபரம் | 303 |
| பஞ்சாங்கம் | 304 |


## தலைச்சங்கத்துக்குத் திருமண நன்கொடை வரவு

### திருவாரூர்

1. திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் குமாரர் திருமணத்தின் போது ரூ. 10
2. திருவாளர் S. K. M. காயாரோகண முதலியார் குமாரர் திருமணத்தின் போது ரூ. 10

### கீழையூர்

3. திரு. சொக்கலிங்க முதலியார் மூலம் ரூ. 2

### திருவார்வுடையார் கோவில்

4. திரு. P. M. வையாபுரி முதலியார் மூலம் ரூ. 5

### பொன்மலை

எனது சகோதரரும், வாழுமங்கலம் செங்குந்த சமரச சங்கத்தின் பிரசாரகருமான S. I. R. னோர்க்கு பிட்டராகிய திரு. வீரபத்திர முதலியாருக்கும், வலங்கைமான் வா. நா. உத்திராபதி முதலியார் குமாரத்தி திருநிறைச் செல்வி அஞ்சலம்மைக்கும் பிரமோதூதஇ ஆனிமீ 23உ இவ்வூர் லோகோ டிபார்ட்மெண்டு செங்குந்தத் தலைவர்களும், மற்றும் பல பிரமுகர்களும் வந்திருந்து முகூர்த்தம் நடைபெற்றது.

அச்சமயம் கிளைச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் ஒற்றுமையின் பயனைப்பற்றியும் ஒர்க்ஸ்மானேஜர் ஆபீஸ் திரு. J. சிவகுருநாத முதலியார் அவர்கள் விளக்கிப் பேசியதின் பயனாய்ச் சங்கம் ஸ்தாபித்து உத்தியோகஸ்தர்களைக் கூடிய சீக்கிரம் ஏற்படுத்த வேண்டுமென தீர்மானிக்கப் பெற்றது. தலைச்சங்கத்திற்கு ஒரு ரூபாய் நன்கொடை அளிக்கப் பெற்றது.

பொன்மலை கா. ம. தரும முதலியார்.

### குறிஞ்சிபாடி குப்பம்

8-7-30-ல் விழுப்புரம் தாலுக்கா, தெ.புதுப்பாளையம் திரு. அருணாசல முதலியார் அவர்கள் குமாரர் திருநிறைச் செல்வர் அ. குப்பசாமி முதலியாருக்கும் கூடலூர் தாலுக்கா குறிஞ்சிபாடி குப்பம் திரு. பா. ப. நாராயணசாமி முதலியார் அவர்கள் குமாரத்தி திருநிறைச் செல்வி கிருஷ்ணவேணி அம்மாளுக்கும் குறிஞ்சிபாடி குப்பத்தில் நடந்தேறிய திருமண விழாவில், கண்டாச்சிபுரம் சைவசித்தாந்தத் தலைவர் திரு. வை. ச. இராமலிங்கமுதலியார் அவர்களால் தம்பதிகளுக்கு வாழ்த்துப்பா கூறி முடிந்ததும், மணமகன் அவர்களால் நமது சங்கத்திற்கு ரூபாய் 1—0—0 நன்கொடை அளிக்கப் பெற்றது. இவர்கள் குலாபிமானம் மிகவும் பாராட்டத் தக்கது. தம்பதிகள்நீடூழி வாழ்ந்திருப்பாராக. சுபம்.

### கலவை

பிரமோதூத. ஆனிமீ 23-தேதிக்குச் சரியான (7-7-30) அன்று. நா. துரைசாமி முதலியார் மகன் திரு. ராஜமுதலியாருக்கு நடந்த திருமணத்தின் நன்கொடை ரூபா 0-8-0

ஷை தேதியில் நா. முருகப்ப முதலியார் திருமகன் அர்ஜுனமுதலியாருக்கு நடைபெற்ற திருமணத்தின் நன்கொடை ரூபா 0-8 0

ஷை தேதியில் கிருஷ்ணசாமி முதலியார் குமாரர் துரைசாமி முதலியாரின் திருமண நன்கொடை ரூபா. 0-8-0

ஆனிமீ 29-ந்தேதி குப்பாத்த முதலியாரின் திருமகன் சின்னகண்ணு முதலியாருக்கு நடந்த திருமணத்தின் வரவு ரூபா 0-8-0

ஆனிமீ 30-ந்தேதி வெங்கிடாசல முதலியாரின் திருமகன் வீரபத்திர முதலியாருக்கும், செ. அப்பாசாமி முதலியார் திருமகள் தனபாக்கியம் அம்மாளுக்கும் நடைபெற்ற திருமண நன்கொடை ரூபா. 1-0-0 A. முனிசாமி, S. அருணகிரி.

குறிப்பு:—கலவை திருமணங்களின் தொகை தலைச்சங்கத்துக்கு இன்னும் செலுத்தப்படவில்லை.

## கடவுள் வணக்கம்.

என்னுளநீ கலந்து கொண்டா யுன்னுள நான் கலந்தேன்
என் செயலுன் செயலுன்ற னிருஞ் செயலென் செயலே
பின்னுள நான் பிதற்றலெலாம் வேறு குறித் தெனோநீ
பிழையேற்ற நினைத்திடிலோ பெருவழக் கிட்டிடுவேன்
அன்னையினுந் தயவுடையா யப்பனெனக் கானாய்
அன்றியுமென் னுருயிருக் காருயிராய் நிறைந்தாய்
மன்னுமணிப் பொதுநடஞ் செய்மன்னவனே கருணை
மாநிதியே யெனக் கருள்வாய் மனக்கலக்கந் தவிர்த்தே (இராமலிங்க சுவாமிகள்.)

## செங்குந்த குலதிலகர்களாகிய இரட்டையர் பாடிய அம்மானை

[திரு. R. V. கருப்பண்ண முதலியார் அனுப்பியவை]

(தொகுதி 4, பகுதி 7, 238-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றியூர்த் தியாகரொரு பெண்பாற் சுந்தரரை
உற்றநீ சத்தியம் பண்ணென் றுரைத்தா ரம்மானை
உற்றநீ சத்தியம் பண்ணென் றுரைத்தாராமாயின்
குற்றமுண்டோ வன்பர்மேற் கோபமோ வம்மானை
கோபமேதோ மகிழ்வாய்க் கொண்டிருந்தா ரம்
[மானை.

அக்கரவம் பூண்டிருந்த வங்கயற்கண் ணம்மைபங்கர்
கைக்கொண்டு செத்தகன்றைக் காவிவந்தா ரம்
[மானை
கைக்கொண்டு செத்தகன்றைக் காவிவந்தா
[ராமாயின்
சொக்கர் மதுரைக்குத் தோட்டியோ வம்மானை
தோட்டியென்றே காமனையுஞ் சுட்டெரித்தா
[ரம்மானை.

பூரவயல் சூழருணை யண்ணுமலை நாதர்
பேருலகில் வண்ணாரப் பெண்கொண்டா ரம்மானை
பேருலகில் வண்ணாரப் பெண்கொண்டா ராமாயின்
சாரும் புடவை யெல்லாந் தப்பினரோ வம்மானை
தப்பினர் தாருவனத்தார் புடவை யம்மானை.

திருப்பா திரிப்புலியூர் செல்வர் சிவக்கொழுந்தர்
கருப்பாஞ் சிறுயானைக் காய்ந்தனர்கா ணம்மானை
கருப்பாஞ் சிறுயானைக் காய்ந்தனரே யாமாயின்
ஒருத்திக் கிருவருடன் கலப்பே னம்மானை
கலவரோ கன்னிவனக்காவல் கொண்ட ம்மானை.

மன்றாடி யாமென்கண் மா மாசிலாமணியார்
நன்றான முல்லைக்கு நாயகர்கா ணம்மானை
நன்றான முல்லைக்கு நாயகரே யாமாயின்
குன்றுமற் பெண்ணங்கே கொண்டனர்கா ணம்
[மானை
கொண்டபெண்ணோ நல்லகொடி யிடைச்சி
[யம்மானை.

நந்தாஞ் சேர்தென் குடந்தைச் சோமநாதப்
[பெருமான்
நந்தரிட மாமிதனைக் கைப்பிடித்தா ரம்மானை
நந்தரிட மாமிதனைக் கைப்பிடித்தா ராமாயின்
இந்த வுலகதனுக் கேற்குமோ வம்மானை
நற்கு மென்றே கையின் மழுவேந்தினர்கா ணம்
[மானை

துட்டதிக்கென் கன்னிவனத் தாரப்பரைக் கடலி
லிட்ட கற்றோணி கரையேறவிட்டா ரம்மானை[ல்
இட்ட கற்றோணி கரையேறவிட்டா ராமாயின்
விட்ட கற்றாணீரின் மிதக்குமோ வம்மானை
மிதவாதோமுன் வளைந்து வில்லானு லம்மானை.

தந்தைபிடித் தறியத் தாயானவள் சமைக்க
வெந்த விடக்குய்ந்து மீண்டதுகா ணம்மானை
வெந்த விடக்குய்ந்து மீண்டதுவே யாமாயின்
மைந்த னுறுப்பு மணத்ததோ வம்மானை
மாதையரன் வல்லபத்தான் மணத்ததுகா ணம்
[மானை.

* நானென்றானஞ் சிருக்கு நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணங்கா ணம்மானை
பாணந்தான் மண்டின்ற பாணமே யாமாயின்
சேணர் புரமெரித்த சேவகமே தம்மானை.
சேவகத்தைச் சொல்லச் சிரிப்பல்லோ வம்மானை.

பொன்றிரளுஞ் சித்திரஞ்சூழ் பூம்புகலூர் தன்
[னில் வளர்
தந்திமுகன் பெருவயிரன் சப்பாணி யம்மானை
தந்திமுகன் பெருவயிரன் சப்பாணி யாமாயின்
இந்த வயிற்றுக் கிரையெங்கே யம்மானை
என்றல்லோ வீசனிரக்கலுற்று னம்மானை

(தொடரும்)

---

*நானென்றானஞ் சிருக்கு நற்சாபங்கற் சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணமே—தா னுவே
சீராரூர் மேவுஞ் சிவனேநீ யெப்படியோ
நேரார்புர மெரித்த நேர்.

இரட்டையர்களாகிய இவர்கள் திருவாரூருக்குச் சென்று சிவதரிசனஞ் செய்து மண்டபத்துக்கு வந்து தங்கி யிருக்குங் காலத்தில் இவருள் ஒருவர் "நானென்றால்" என்று தொடங்கி "பாணந்தான்" என்னுமளவும் பாடிவிட, மற்றொருவருக்கு அவ்விட்டவிடந் தொடங்கி மற்றதைப் பூர்த்தி செய்யத் தோன்றாமையால் இதனை அம்மண்டபச் சுவரில் எழுதி வைத்து மற்றுஞ் சில திருப்பதிகள் சென்று வணங்கி மீண்டு வந்தபோது காளமேகப் புலவரால் "மண்டின்ற" என்று தொடங்கி 'நேர்' என்று மற்றதும் பூர்த்தி செய்து அடியில் காளமேகன் என்று கையெழுத் திட்டிருப்பதைக் கண்டு வியந்தார்கள் என்றும் இருக்கிறது.

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.
துணையாசிரியர்:—பண்டிதர் பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி—ச] பிரமோதூத வருஷம் ஆவணி மாதம் [பகுதி—அ

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### சட்டசபைத் தேர்தல்

சின்னாட்களுள் நடக்க இருக்கும்சட்டசபைத் தேர்தலுக்கு அபேக்ஷகராக நிற்கும் கனவான்களுள் அடியிற்காணும் வண்ணம் வாக்குறுதி செய்து அதன்படி நடக்கக்கூடியவர்களுக்கே செங்குந்தர்கள் தமது வோட்டுகளை அளிப்பது உசிதமாகும்; அதுவே நம்மவர்களது கடமையுமாகுமென ஈண்டு வற்புறுத்திக் கூறுகிறோம்.

### அபேக்ஷகரிடம் செங்குந்த வாக்காளர்கள் பெறவேண்டிய வாக்குறுதி.

நான், "பொதுவில் நெய்தற்றொழிலும் அது சம்பந்தமான இதர தொழில்களும் வியாபாரங்களும் விருத்தி யடையும் முறைகளை அனுசரணைக்குக் கோண்வேரச் சட்டசபையில் உழைப்பதோடு, சிறப்பாகச் செங்குந்தர்கள் முன்னேற்றத்திற்கான எல்லா முயற்சிகளையும் செய்வேன்."

### அனுதாபம்

திருச்செங்கோடு தி. ரா. கந்தப்பமுதலியார் அவர்கள் அகால மரண மடைந்தமைக்கு ஆற்றொணாத் துயரத்தினை வெளியிடுவதோடு, முதலியாரவர்களின் குடும்பத்தினர்க்கும் எமது அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தலைச்சங்கத்தின் அனுதாப தீர்மானமும் முதலியாரவர்களைப்பற்றிய ஒரு கட்டுரையும் மற்றோரிடத்தில் பிரசுரித்துள்ளோம். முதலியாரது நண்பர்களும் அபிமானிகளும் அனுப்பியுள்ள சரமகவிகள் பத்திரிகையிற் பெரும்பாகம் அச்சான பிறகு வந்தமையால் அவற்றை வெளியிட வியலாமைக்கு வருந்துகின்றோம்.

(ம. ச.)

# ஒழுக்கப் பகுதி

## புத்தி தெளிவு

[திரு. ஆ. வெ. முத்தைய்ய முதலியார் அவர்கள் பி. ஏ., பி. எல்., புதுவை]

ஒழுக்கப் பகுதியால் கடைசியாகப் புத்தியைப் பற்றி சொல்ல வந்த விடத்து எடுத்துக் காட்டுவாயி லாகப் புத்தி யென்பது நமக்குள் இன்ன வேலை செய்கிறது, அது இருக்கவேண்டிய உண்மை நிலை யிது வென்பதாகச் சற்றே விவரித்தேன்.

உடல் நலன், மன அமைதி, புத்தி தெளிவு, இவைகளிருந்தால் தான் மானிடவாழ்க்கை நடை பெறுதல் கூடும் என்பதே ஒழுக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

இம்மூன்றில் உடல் நலனைப்பற்றியும், மன அமை தியைப் பற்றியும் கொஞ்சம் விவரமாகத் தெரிந்து கொள்ளலாம். புத்தியைப்பற்றி அதிக விளக்கம் நமக்கில்லை. காரணம்: மனிதர்களுக்குப் புத்தி யானது, புத்தியென்ற . தத்துவம், கருவி, இளம் பருவத்தில்-என்?-குழந்தைப் பருவத்தி லிருக்கிற தென்றே சொல்ல வேண்டும். உடல், மனம், புத்தி இவைகள் மூன்றும் நமது கருவிகளே யெனி னும், முதலிரண்டுமே நமக்குக் கருவிக ளென்ப தாகத் திரம்பட்டு நிற்கக் கூடும். புத்தியும் நமது கருவிதான் என்பது இந்த நமது நிலையில் விளங்குவ தில்லை. சில சமயங்களில் உடம்பையும் மனதை யும் நாமாகப் பாவித்து நடிக்கிறோமல்லவா? எனக் குப் பசிக்கிறது. நான் நோயுற்றேன். எனக்குக் கோபம்வந்தது என்பதாக நாம் சொல்வது, சொல் மாத்திரமல்ல, அது போலவே எண்ணுகிறோம். ஏன்? புத்தியின் தெளிவின்மையால். ஆகவே எதைக் கொண்டு, எந்தக் கருவியின் உதவியால் நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டுமோ, அந்தக் கருவியே (புத்தியே) தெளிவடையாது இருக்கும்போது, மங் கலாக விருக்கும் போது, நாமெப்படி அதை (புத்தியை) வேறுபடுத்திக் கருவியெனத் தெரிந்து கொள்ளப்போகிறோம்? நமது கண்களை நம் கண் களைக்கொண்டே பார்ப்பதை யொக்கும்.

இன்னுமொன்று கவனிக்கற்பாலது: உடலும் மனமும் ஒன்றுக்கொன்று நெருங்கி யிருக்குந் தன் மையால் ஒன்றையொன்று அசைக்கவும் அசையா மல் நிறுத்தவும் முடியும். உடலின் செய்கைகளால் மனதில் ஆசைகளை யெழுப்பலாம். மனதின் கொதிப்பால் உடம்பைக் காந்த வைக்கிறோம். இது போன்ற சம்[illegible] போது அசைப்பிக் கும் கருவி[illegible] அசைப்பிக்கப் படும் க[illegible]தி குறைந்த [illegible]மென்பதைத் தெரி[illegible]ள்வது கடினமல்ல. இவைகளெல் லாம் [illegible] தினசரி வாழ்க்கை[illegible] அனுபவங் களல்[illegible]?

[illegible]வே புத்தியானது [illegible] சத்தியைப் [illegible] அமைதி

யையும் உடலுக்கு நலனையும் தரவல்லதாயாகும். ஆனால் களிம்புள்ளதாக, மயக்கமடைந்ததாக விருக் கும் இந்நிலையில், புத்தியானது மனம், தேகம் இவைகளின் வழியே சென்றுழன்றுகொண்டிருக் கிறது. இம்மூன்று கருவிகளும் (உடல், மனம், புத்தி) நன்னிலை பெறுகிறவரைக்கும் மனிதன் திரி லோக சஞ்சாரியாகவே யிருப்பான். அதாவது, பிறந்திறந்து கொண்டே யிருப்பான். இதுதான் மனிதப்பிறவியின் போர், சமர்; மனித வாழ்க்கைக் கடல். இந்தக் கடலில் நல்யாத்திரை செய்வதற் காகவே, இந்தப் போரில் வெற்றியடைவதற்காக வே, சமயங்கள், ஒழுக்கங்கள், ஏற்பட்டன; ஏற் படுத்தப்பட்டன.

எனவே, மனிதவாழ்க்கையின் இன்பம் நுகர்வ தற்கு இன்றியமையாத உடல் நலம், மன அமைதி, புத்தித்தெளிவு பயக்கக்கூடியது எம்மதமாயினும், எச்சமயமெனினும், எச்சடங்கே யாயினும், எச் சட்டமேனும், எந்நெறியேனும் அவை நன்றே. அன்றேல், உடல்நலம், மன அமைதி, புத்திதெளிவு — இம்மூன்றையும் தரக்கூடிய தின்றேல் - வேண்டா. இன்னும் இவைகளுக்கு இடைஞ்சலா யிருக்குமா னால் அவைகளை விலக்கவேண்டியதே. சீர்திருத் தக் கிளர்ச்சி இம்முறையில் நடைபெற்றால் உண் மைப் பயனளிக்கும்: மானிடவாழ்க்கை மேன்மை யுறும்.

புத்தி தெளிவடைந்தால், உடல் நலனும்மன அமை தியும் குறையாது கிடைக்குமெனினும், அத்தெளி வடைவதற்கும் புத்தியின் மயக்கம் குறைவதற் கும், உடல்நலனும், மன அமைதியும் மிக்க உபகார மாக விருக்குமென்பதை நண்பர்கள் கவனிக்கவும்

ஆகையால், உடல் நலனையும் மன அமைதியையும் ஏற்படுத்திக்கொண்டே, புத்தியின் மயக்கத்தைத் தீர்க்க வழி தேடவேண்டும். அன்றேல் உடல் நலன், மன அமைதி யில்லாவிட்டால், முன் குறிப் பிட்டபடி புத்தியானது மயக்கத்திலே ஈடுபட்டு நிற்கும் "நமக்கும் புத்தியானது ஒருகருவி, இதைச் சீர்படுத்தவேண்டு" மென்கிற வெண்ணம் கனவைப் போலவே நிற்கும், சித்திபெறுகிறதில்லை.

அதாவது, நாம் முதல்படியாகத் தெரிந்து கொள்ள வேண்டியது நமது புத்தி மயக்கத்தி லிருக்கிற தென்பதே. இதை நாம் உணராதவரைக் கும் மயக்கத்தைத் தீர்க்க மருந்து தேடமாட்டோம். தலைநோய் இடிக்கிறதென்பதாக உணராவிட் டால் எதற்காக மருந்து தேடவேண்டும்? என் பதை நன்கு விசாரித்துப் பார்க்கும்படி நண்பர் களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.



# குல முன்னேற்றப் பகுதி

## நமது சமூக முன்னேற்றம்

[திருவாளர். வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

உலகில் சீரும் செல்வமும் சிறப்பும் பெற்றிருக் கும் ஒவ்வொரு சமூகமும், கைத்தொழில், வர்த்த கம், கல்வி இவைகளாலே அத்தகைய மேலான நிலைமையை யடைந்திருக்கிறது. ஒரு நாடோ அல்லது சமூகமோ முன்னேற்ற மடைவதற்கு அதின் தொழின் முயற்சியே முக்கிய காரணமாக விருக்கின்றது. இங்கிலாந்து அமெரிக்கா முத லான மேல்நாடுகளெல்லாம் அவைகளின் தொழின் முயற்சியாலேயே இவ்வுலகத்திற்குக் கண்கள் போன்று மிகச் சிறந்து விளங்குகின்றன. சுமார் ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன் ஜப் பான் தேசம் இருந்த இடம் கூட ஒருவருக்குந் தெரியாது. அப்பேர்ப்பட்ட ஜப்பான் தேசம் அதிக விரைவில் இவ்வளவு மேன்மை யடைந்து இப்பூவுலகிலுள்ள வல்லரசுகளி லொன்றாயதற்கு அதின் தொழின் முயற்சியே யன்றி வேறு எது காரணம்? இத்தொழின் முயற்சியானது சீர்திருத் தம் பெற்று அபிவிருத்தி யடைவதற்குக் கல்வியே பிரதானம். ஆகையின் தொழில் செய்வோருக்குக் கல்வி யளிக்கப்படல் வேண்டும்.

நமது நாட்டில் தொழின் முயற்சி செய்வோருக் கும் வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் போதிய கல்வி யறிவின்மையால் நமது தேசம் மிக்க கேவல மான க்ஷீணதசையை யடைந்து விட்டது. சின் னாக நம் தாய் நாடாகிய இந்திய நாட்டிலும் கூட பல பகுதிகளிலுமுள்ள பல்வேறு ஜாதிமதக் குழாங்களும், சொற்ப தொகையினராயுள்ள ஒவ்வொரு வகுப்பினருங் கூடத் தங்கள் தங் கள் சமூக முன்னேற்றத்தின் பொருட்டு ஆங் காங்கே பல வருடங்களாக மகாநாடுகள் கூட்டியும், பத்திரிகைகளை வெளியிட்டும், துண்டுப் பிரசுரங் கள் வழங்கியும், பல அரிய பெரிய காரியங்களைச் செய்தும் படிப்படியாய் ஸ்தலஸ்தாபனங்களிலும் பிறவகைகளிலும் மேன்மை யடைந்து வருகின் றனர். ஆனால் ஆறு லக்ஷங்களுக்கு மேற்பட்ட பெருந்தொகையினராயுள்ள நமது "செங்குந்த சமூகம்" ஒன்று மட்டில் வாளா வுறங்கிக்கொண் டிருந்துவிட்டது. இதுகாறுந் தங்கள் நிலைமையைக் கவனியாமலேயிருந்துவிட்ட நமது செங்குந்த சமூ கத்தினரும் இப்போது கொஞ்ச காலமாகச் சென்னையில் ஸ்தாபித்திருக்கும் நமது 'தென்னிந் திய செங்குந்த மகா ஜன சங்கத்தினர்' செய்து வரும் அதி தீவிர முயற்சியால், நீண்ட நித்திரையி லிருந்து விழித்துக் கொண்டு, நாமும் முன்னேற்ற மடைந்து நமது சமூகமும் பூருவத்திலிருந்தது போல் சீரும் செல்வமும் சிறப்பும் அடையும் வண் ணம் செய்ய வேண்டுமென்று சிரத்தை யெடுத் துக் கொண் டிருக்கிறார்களென்பது யாவரும் அறி ந்த விஷயமே.

பண்டைக்காலத்தில் நமது முன்னோர்கள் கல்வி, கேள்வி, நாகரீகம், சிற்பம், தொழில் முதலிய பல துறைகளிலும் மேம்பட்டு, சத்தியம், பொறுமை, வீரத்தன்மை யுடையவர்களாய், குறுநிலமன்னர் களிடத்திலும், சேர சோழ பாண்டியாதியரசர் பெருமக்களிடத்திலும் கலந்து நட்பு மிக்கவர்க ளாய்ச் செல்வீகஞ் சிறந்து, கண்ணியமும் மரியா தையுமிக்க ஒரு வகுப்பினராய்த் திகழ்ந்திருந்தன ரென்பது வெளிப்படை. இவ்வித உயரிய நிலை மையிலிருந்த நமது சனசமூகம் தற்போது அவற் றிற்றாழ்வடைந்து தாழ்ந்த நிலையிலுள்ள வகுப்பி னர்களின் (Backward classes) கூட்டத்தில் சேர்ந்ததென அரசாங்கத்தவர்களால் குறிப்பிடும் படியாயுள்ள மிக்க கேவல நிலைமையை யடைந்து விட்டது. அந்தோ! இதற்குக் காரணம், நம்மவர் களுக்குப் போதிய கல்வியின்மை; தொழின் முயற்சி யின்மை; ஜீவகாருண்யங் குலாபிமான மின்மை; பொய், களவு, சூது, புலாலுண்ணல், மதுபானஞ் செய்தல் முதலிய பாதகச் செயல்களைப் புரிதல்; பொறாமை, கட்சிப்பிளவு, துவேஷபுத்தி, சோம்பல் முதலிய தீயகுணங்களை யுடைத்தாயிருத்தல் முத லியவைகளேயாம். இத்தீய குணங்கள் நம்மவரை விட்டொழிந்தாலன்றி நமது சமூகம் ஒருகாலும் முன்னேற்றமடையாது. இவைகள் எப்பொழுது நம்மவரை விட்டொழியுமோ அப்பொழுதே நமக்கு (நமது சமூகத்துக்கு) நல்ல காலம் பிறந்து விட்டது என்னலாம். இவ்வாறு, கல்வி நலனும், அறிவின் மாட்சியும், ஒழுக்க மேம்பாடும், கொடைப் பெருக் கமும், வீரச்செறிவும், அஞ்சாத்தன்மையும் கூடி விளங்கிய நமது சமூகம், தற்காலம் கல்வியிலும் அந்தஸ்திலும், கைத்தொழில் வியாபாரங்களிலும், மிகுந்த எழ்மை நிலையை யடைந்து, நமது கவர் மெண்டாரால் தாழ்ந்த நிலையிலுள்ள வகுப்பினர் களின் வருக்கத்தில் (லிஸ்டில்-list) சேர்க்கப்பட்டு, மிகுந்த க்ஷீணதசையை யடைந்துவிட்டது என்ப தைக் கேட்குந்தோறும் எண்ணுந்தோறும் நமக்கு (நமது சமூகத்தாருக்கு-செங்குந்த குலத்தினருக்கு) வருத்தமும் நாணமும் ஏற்படவில்லையா? நமது உடலில் செங்குந்த ரத்தம் ஓடுவது உண்மையா னால், நம்மவர்கள் ஒவ்வொருவரும் மேல் கண்ட தீயவொழுக்கங்களை யறவே விடுத்துக் கல்வி, வர்த்

தகம், தொழில், விவசாயம் முதலியவைகளில் முன்னேற்ற மடைய முயற்சிக்க வேண்டும்.

இத்துறைகளில் முயற்சிக்க நமது செங்குந்த வாலிபர்களே (இளைஞர்களே) முன்வரவேண்டும். நமது சமூக முன்னேற்றம் நமது வாலிபர்களின் இடையறா முயற்சியையும் ஊக்கத்தையும் குலாபிமானத்தையும் பொருத்ததே. நமது வாலிபர்கள் இது விஷயத்தில் ஊக்கங்காட்டி யுழைக்க முன்வருவார்களென்று அவர்களைப் பெரிதும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மிற்க, ஒரு சமூகம் முன்னேற்றமடைந்து க்ஷேமம் பெற வேண்டுமாயின் அதின் தொழில், வர்த்தகம், விவசாயம், செல்வம் இவைகள் விருத்தியடையவேண்டுமென்று முன்னமே கூறியுள்ளோம். இவைகள் விருத்தி யடைவதற்கு அச்சமூகத்தினர்க்குக் கல்வி நன்கு போதிக்கப்படவேண்டும்.

## நம்மவர்களுக்குக் கல்வியின் அவசியம்.

நமது சமூகம் மேற்கூறிய எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்து மேன்மையுற வேண்டுமாயின் நம்மவர்களுக்குப் பெருவாரியாகக் கல்வி போதிக்கப்படவேண்டும். அதனால் நம்மவரிடைக் கல்வி யறிவு பெருகவேண்டும். இதற்கு நம் குலாபிமானிகளாகிய செல்வச் சீமான்கள் தக்க முயற்சியெடுத்துக் கொள்ளவேண்டும். "கல்வியே கருந்தனம்" என்பதை நம்மவர்கள் அடியோடு மறந்துவிட்டனர். நமது இளைஞர்களுக்கு நாம் தேடி வைக்க வேண்டிய பொருள் கல்வியே. கல்வியே கண்களுக்குச் சமானம். "எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்" என்பது ஔவை வாக்கு. எவ்வித முயற்சியெடுத்தாவது நமது சிறுவர்களைக் கல்வி பயிலவைக்கவேண்டும். "பிச்சைபுக்காயினுங் கற்கை நன்றே" என்று ஒரு பெரியார் கூறியிருக்கிறார். நம்மவர்கள் தம் மக்களைச் சிறு வயதிலேயே தொழில் செய்ய விட்டு விட்டுக் கல்வியறிவில்லா மூடர்களாக்கி விடுகிறார்கள். இச்செய்கையே நமது முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாயிருக்கிறது.

ஆகையால் நம் மரபினர் ஒவ்வொருவரும் கல்வியை அலட்சியம் செய்யாமல் தம்மக்களைக் கூடிய வரையில் கல்வியறிவுள்ளவர்களாக்க முயற்சிக்கவேண்டும். சிலர் மட்டில் கல்வி கற்றிருந்தால் போதாது. யாவருங் கல்வியறிவுடையவர்களாய்த் திகழ்தல் வேண்டும். இது விஷயத்தில் நம்மவர்கள் மிகுந்த ஊக்கங் காட்டி யுழைக்கவேண்டும். அதாவது, நம்மவர்கள் வதியும் ஒவ்வொரு கிராமந்தோறும் பல பாடசாலைகளை நிறுவி, கல்வி இலவசமாகப் போதிக்கப்படல்வேண்டும். கவர்மெண்டாரின் உதவியைக் கொண்டு கட்டாயப் படிப்பு முறையைக் (Compulsory Education) கையாளவேண்டும். கல்வி கற்க அவகாசமில்லாத ஏழைகளுக்காக இலவச இராப்பாடசாலைகளை ஏற்படுத்தி அவர்களையுங் கல்வி யறிவுடையவர்களாக்க முயலல் வேண்டும். நமது சிறுவர்கள் ஆரம்ப கல்வி மட்டும் பயின்றால் தற்காலத்தில் பயனில்லை. இன்னும் கொஞ்சம் செல்வமும் சௌகரியமும் வாய்க்கப்பெற்றவர்கள் தம்மக்களுக்கு உயர்தர கல்வி கற்பிக்கவேண்டும். பி. ஏ., எம். ஏ., பட்டங்கள் பெற்றுப் பலர் உத்தியோகத்திலும் வியாபாரத்திலும் தலை சிறந்து விளங்கினாலொழிய நமது சமூகம் முன்னுக்கு வர இயலாது. இக்குறைபாட்டை யொழிக்க நமது இளைஞர்கள் முயற்சி யெடுத்துக் கல்வியில் தேர்ச்சி பெற்றுப் பட்டதாரிகளாக விளங்க வேண்டும். உத்தியோகத் துறையிலும், தாலுக்கா போர்டு, யூனியன் போர்டு, டிஸ்டிரிக்ட் போர்டு முதலிய ஸ்தலஸ்தாபனங்களிலும் நம்மவர்கள் அங்கத்தினர்களாக வருதல் வேண்டும். இவைகளுக்கெல்லாம் அடிப்படையாயிருப்பது கல்வியே. இக்கல்வி யறிவு போதுமான அளவு இல்லையாயின் முன் கூறிய காரியங்களனைத்தையும் செய்ய வியலாது. ஆகையின் நம்மவர்கள் எல்லோரும் தமது மக்கள் ஆண் பெண் அனைவரையும் கல்வித் துறையில் பயில வைக்கவேண்டும்.

பெண் மக்களுக்குங் கல்வி இன்றியமையாததாகும். தாய்மார்களே சிறுவர்களுக்கு முதல் ஆசிரியர் என்பதை நாம் நன்குணர்ந்து அவர்களைக் கல்வியறிவுள்ளவர்களாகச் செய்தல் வேண்டும். அப்படி செய்தால்தான் அவர்கள் சிறந்த தாய்மார்களாகவும், உண்மை மனைவியர்களாகவும், விளங்கிக் குடும்ப விவகாரங்களை நன்கறிந்து சிக்கன முறையைக் கையாண்டு குடும்பத்தை முன்னேற்றமடையச் செய்வதுடன் நமது சமூக முன்னேற்றத்திற்கும் ஒரு பெருந்துணை யாவார்கள். ஆகையால் செங்குந்த குல சீமான்களே! சீமாட்டிகளே!! இத்தகைய கல்வி யறிவைப் பெருக்க நீங்கள் முன் வந்துழைப்பீர்களாக!

நம்மவரிடைக் கல்வியறிவு பெருகா திருப்பதற்குக் காரணம் வறுமையே. ஆகையால் நமது இளைஞர்களைக் கல்வியில் முன்னேற்ற மடையச் செய்வதற்குத் தனியாகப் படிப்புக்கென ஒரு நிதியைத் திரட்டுதல் வேண்டும். அந்நிதியின் வருமானத்தைக் கொண்டு நமது இளைஞர்களைப் படிப்பிக்கச் செய்தல் வேண்டும். இந்நிதியை ஒவ்வொரு செங்குந்தரும் தமக்கியன்ற வளவு ஏதாவது பொருளுதவி புரிந்து ஆதரிக்கவேண்டும். இம்முறையை நமது "தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்" இப்போது கையாண்டு வருகிறது. கல்விக்கென நியமிக்கப்பட்டிருக்கும் அந்நிதிக்குச் "செங்குந்தர் கல்வி நிதி" என்று பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஏதோ சொற்ப தொகை வசூலாயிருக்கிறது. இதன் வருமானத்தைக் கொண்டு சில ஏழைச் செங்குந்த மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி யளிக்கப்பட்டு வருகிறது. இது மிகுந்த சொற்ப தொகை என்பதை நாம் கூற வேண்டுவதில்லை. இந்நிதியை நம்மவர்கள் ஒவ்வொருவரும் ஆதரிக்க முன் வருவார்களானால் இதனை ஒரு பெரு நிதியாக்கிவிடலாம். அதன் வருமானத்தைக் கொண்டு நம் ஏழை மாணவர்



களின் கல்வி யறிவைப் பெருக்க முடியும். ஆகையால் நமது கல்வி நிதிக்கு ஒவ்வொரு கிராமங்களிலும் மகமை ஏற்பாடு செய்தும், உண்டி வசூலித்தும், சடங்குகளில் கட்டணம் செலுத்தியும், ஊர்ப் பொதுப் பணங்களில் பாகமீந்தும், விசேடங்களில் நன்கொடையீந்தும் பொருளுதவி செய்து அந்நிதியைப் பெருக்கிப் பரிபாலனஞ் செய்ய நமது செங்குந்தர்கள் முன் வருவார்களாக. நம்முள் செல்வ வந்தர்களா யிருக்கக்கூடியவர்கள் குறைந்தது ஒரு ஏழைச் செங்குந்த மாணவனுக்காவது உபகாரச் சம்பளமீந்து கல்வியைப் பெருக்க முன்வந்துதவிசெய்வார்களாக. அல்லது ஏதோ ஒரு சொற்ப தொகையாவது நமது கல்வி நிதிக்கு நன்கொடையாக வழங்க முன் வருவார்களாக. இன்னும் பல விதத்திலும் நமது கல்வி நிதிக்கு வருவாய் ஏற்படுத்தி நம்மவரிடைக் கல்வியை விருத்தி செய்தலே நமது சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படை. நமது கைத்தொழிலியக்கத்திற்கும் கல்வியே அவசியமானது.

## நமது கைத்தொழில்

நமது தேசத்திலே பல வகையான வேறு வேறு கைத்தொழில்கள் நிலவுகின்றன. இவைகளில் நமது சமூகத்தினர் மேற்கொண்டுள்ள நெய்தற்றொழிலே மிகவும் மேலான தொன்றாகும். "செய்புந்தொழிலையெல்லாஞ் சீர்தூக்கிப் பார்க்கினுயர் நெய்புந்தொழிலுக்கு நிகரில்லை" என்று சிறப்பித்துக்கூறும் பெருமையினை வாய்ந்தது. இத்தொழில் நம் இந்திய தேசத்தில் விவசாயத்துக் கடுத்தபடியாகப் பெரும்பான்மையான ஜனங்களால் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. நமது தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் தமது நுண்ணிய அறிவால் ஆராய்ந்து கைக்கொண்டு இல்லறம் நடாத்திய புனிதமான தொழிலுமிதுவேயாமென்க. இது பண்டைக் காலத்திலிருந்து பூருவீகமாக நம்மவர்களால் உரிமையாகக் கைக்கொள்ளப்பட்ட மேலான தொழில். இன்றும் நம்மவர்களில் பெரும்பான்மையான ஜனங்களால் இத்தொழில் கையாளப்பட்டு வருகின்றது. "நெய்வதை விட்டு நினைத்துக்கொண்டான் கைக்கொள்வன்" என்ற உலக வழக்கில் வழங்கும் முதுமொழியே இத்தொழில் நம்மவர்களுக்கே மிக்க வுரித் தென்பதையும், நமது முன்னோர்களால் இது பூருவந்தொட்டுக் கையாளப்பட்டு வருகின்றதென்பதையும் நன்கு விளக்குகின்றது. கைக்கொள்வர் என்னும் பதத்திற்கு நெசவுத்தொழில் செய்வோர் என்பதே பொது ஜனங்களின் அபிப்பிராயம். அதற்கு நம்மவர்கள் பூருவந்தொட்டு வெகு காலமாக அத்தொழிலைத் தமக்குரிய குலத்தொழிலாகக் கொண்டு வந்தமையே காரணம். இத்தொழில் மிகுந்த அநுபவத்தாலும், அறிவாலும், முதிர்ந்த தேக பலத்தாலும் செய்யக் கூடிய தொன்றாம். இதனை மேற்கொண்டுள்ளவர்களின் குடும்பங்களிலுள்ள பெண்களும், சிறுவர் சிறுமிகளுங்கூட இத்தொழிலுக் குபயோகமான நூல் நூற்றல், நூலிழைத்தல், பாவு பிணைத்தல் முதலிய வேலைகளில் ஈடுபட வேண்டியவர்களாகின்றனர். இத்தொழில் ஒரு குடும்பத்திலுள்ளவர்களைச் சோம்பலினின்று நீக்கிச் சுறுசுறுப்பும் உழைப்புமிக்குடையவர்களாய்ச் செய்கின்றது. இதனைத் தற்காலத்திய சிறந்த தேசாபிமானிகள் குடிசைத்தொழில் (Cottage Industry) என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். இது ஒரு தேச முன்னேற்றத்திற்கே சிறந்த தொழிலாக அமைந்திருக்கின்றதென்று கூறுவது மிகையாகாது.

இவ்வித சிறந்த தொழிலைக் கைக்கொண்ட நமது சமூகம்பல்லாண்டுகளாக வறுமை வாய்ப்பட்டு மெலிகின்றது. ஏனெனில், நமது நாட்டில் மேல் நாட்டு ஆலைத்தொழில் பிரபலப்பட்டு, அவ்வாடைகள் பலவிதத்திலும் நம்மவர்கள் நெய்யும் ஆடையைவிடப் பதின்மடங்கு சிறப்புடைத்தாய் மிகவும் மலிந்து அதனோடு போட்டிபோட நம்மவர்களால் முடியாமல் நமது தொழில் வர வர க்ஷீணதசையடைந்து நமது நாட்டுத்துணிகள் நம் தேசத்தவர்களாலேயே அலட்சயஞ் செய்யப்பட்டு மிகுந்த செல்வாக்கில்லாமல் போய்விட்டதே முக்கிய காரணம். இப்படி நம் தொழில் க்ஷீணித்துப் போனமைக்குக் காரணம் நம்மவர்களுக்குப் போதிய கல்வியில்லாக் குறைவே. நெசவுத் தொழில் செய்வோர்கள் கற்று அத்தொழிலை நவீன காலத்திற் கேற்ப நல்ல சீர்திருத்த முறையில் செவ்வனே செய்வார்களானால் நம் நாட்டுத்துணிகள் நல்ல விலையோடு மிகுந்த கிராக்கியாக விலைபடும். அதனால் நல்ல இலாபம், ஊதியம் கிடைக்கும். அதனால் வறுமையொழிந்து செல்வீகஞ் சிறந்து நமது நாடு தழைக்கும். நமது சமூகமும் முன்னேற்ற மடையும். நம்மவர்கள் கல்வி கற்றிருந்தால் தான் நம் தொழிலுக்கு வேண்டிய இயற்கைப் பொருளாகிய பஞ்சில் எத்தனை விதங்களிருக்கின்றன வென்றும், அவைகளின் தார தன்மிய மித்தன்மைத் தென்பதும், எந்தெந்த விடங்களில் எந்தெந்த விதமான பருத்தி யுற்பத்தியாகிற தென்பதும், எவ்வெவ்விடங்களில் குறைந்த விலைக்குப் பஞ்சுகள்கிடைக்கு மென்பதும், துணிகள் எவ்வித முறையில் நெய்யப்பட்டால் தற்காலத்தில் செலாமணி யாகுமென்பதும், இன்னும் இது போன்ற அரிய விஷயங்களையும் செவ்வனே தெரிந்து சீரியமுறையில் நமது கைத்தொழிலை நடத்துவதற்கு ஏதுவாயிருக்கும். தவிர, பாவோடல், நூல் நூற்றல், நூலிழைத்தல், முதலியவைகளைக் கல்வியறிவினால் நூதன முறையிலமைக்கப்பட்ட ஆலைகள், இராட்டினங்கள், விசைத் தறிகள் முதலிய நூதன முறை இயந்திரக் கருவிகளால் மிக்க சீர்திருத்தமுடன் குறைந்த கால அளவையில் அதிகப் படித்தரமான துணிகளை ஏராளமாக வுற்பத்திசெய்து தொழிலைப் பெருக்கச் செய்யவும் கூடும். இதற் கெல்லாங் கல்வியறிவே அவசியமாய் வேண்டற் பாலது. அந்தோ! கல்வியில்லாக் குறைவாலன்றோ நமது சமூகம் பூர்வகாலத்தில் தமது முன்னோர்கள் எந்த மாதிரியில் எத்தகைய ஆயுதங்களைக் கொண்டு தொழிலை நடத்திக்கொண்டு வந்தார்களோ அதே

# சிதம்பரத்தில் செங்குந்தர்கள் கொடியேற்றுவதேன்?

[உமாபதி சிவாசாரியர்]

[22-7-30 'திராவிட'னில் வெளிவந்தது.]

தில்லைவாழ் அந்தணர்கள் என்னப்பட்ட தீட்சதர்கள் குலத்தில் சுமார் 5, 6 நூற்றாண்டுகளுக்கு முன்பு உமாபதி சிவாசாரியார் என்ற பெரியார் ஒருவர் தோன்றினார். இவர் பதினான்கு வயதனில் பெரும் பாண்டித்தியமடைந்து ஞானோதயம் பெற்று ஸ்ரீ நடேசப் பெருமானுடைய பெருமைகள், சிதம்பர ரகசியம், பதஞ்சலி வியாக்கிரபாதர் வரலாறு, ஆலயப் பிரதிஷ்டை, இரண்யவர்ம சக்ரவர்த்தியின் சரித்திரம் முதலியவைகள் அடங்கிய கோயிற் புராணம் என்ற ஒரு புத்தகத்தை இயற்றினார். அந்தக் காலத்தில் ஸ்ரீ நடராஜருக்குப் பூஜை செய்து வீட்டுக்குப் போகும் தீட்சதர்கள் மேளவாத்தியங்கள் முழங்கச் சகல விருதுகளுடன் வீதி வலமாக முத்துச் சிவிகையில் ஏறிச் செல்வது வழக்கம். இந்த வழக்கம் சோழ மகாராஜன் ஒருவரால் ஏற்படுத்தப்பட்டது. ஒரு தினம் உமாபதி சிவாசாரியார் தன் முறைப்படி நடராஜருக்குப் பூஜை செய்துவிட்டு மேளவாத்தியம் பகல்தீவர்த்தியுடன் ஆடம்பரமாக முத்துச்சிவிகையில் நகர்வலம் வருகையில் மறைஞான சம்பந்தர் என்ற பெரியார் ஒருவர் ஓர் வீட்டுத் திண்ணையில் தனது மாணாக்கர்களுக்குப் பாடம் கற்பித்துக் கொடுத்துக்கொண்டிருந்தார். அச்சமயம் இந்த ஊர்வல வைபவத்தைக் கண்ட ஒரு மாணாக்கன் 'சுவாமி, இவ்வளவு ஆடம்பரமாகப் பகலில் தீவர்த்திபிடித்துக்கொண்டு இந்த தீட்சதர் வருகிறதைப் பாருங்கள்' என்று சொன்ன மாத்திரத்தில், மறைஞான சம்பந்தர் 'அப்பா, இது பகல்குருடு' என்று அலட்சியமாகப் பதிலளித்தார். பல்லக்கிலிருந்த உமாபதி சிவாசாரியார் இதைக் கேட்டமாத்திரத்தில் பல்லக்கிலிருந்து திடீரெனக் குதித்து மறைஞான சம்பந்தர் முன்னிலையில் பயபக்தியுடனிருந்து அவர் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரிக்க எத்தனிக்கையில், சூத்திர வம்சத்தில் பிறந்தவர் என்று கருதப்படும் மறைஞான சம்பந்தர் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குப் பூஜைசெய்யும் தில்லைவாழ் அந்தணர் குலத்திலுதித்த உத்தமர் ஒருவர் நம்மைப் பணிய விடுவது அபசாரமல்லவா என்று நடுநடுங்கி, தம் இருக்கையைவிட்டு எழுந்து ஓட எத்தனித்தார். உமாபதி சிவாசாரியாரும் பின் தொடர்ந்தார். முன்னும் பின்னுமாக இருவரும் ஓடக் கடைசியாக செங்குந்தர் வசிக்கும் வீதியில் வருகையில் களைப்புற்றனர். அவ்விடம் பாவு தோய்த்துக் கொண்டிருந்த செங்குந்தர்களைப் பார்த்து மறைஞான சம்பந்தர், "அப்பா! வெயிலின் உக்கிரத்தாலும் ஓடி வந்ததாலும் களைப்பாயிருக்கிறது. சிறிது கஞ்சி வாருங்கள்" என்று கேட்கலானார். அதன்படி செங்குந்தர்களிலொருவர் சிறிது கஞ்சி வார்க்க மறைஞான சம்பந்தர் அதை இரு கைகளையும் சேர்த்து வாயில் வைத்துப் பருகுகையில், முழங்கை வழியாக மிஞ்சி ஒழுகிய கஞ்சியை உமாபதி சிவாசாரியார் குருப்பிரசாதமென்று பயபக்தியுடன் தன் கைகளில் ஏற்றுப் புசித்துவிட்டார். இதைக் கண்ட மறைஞான சம்பந்தர் உமாபதி சிவாசாரியாருக்கு ஞானானுக்கிரகம் செய்து பிரிந்து விட்டார்.

இதைக் கேள்விப்பட்ட தில்லைவாழ் அந்தணர்கள் வழக்கம்போல் ஆயிரக்கால் மண்டபத்தில் "பொதுவார்" கூட்டங்கூடி உமாபதி சிவாசாரியார் சூத்திர பானம் செய்தமையால் தீட்டடைந்தார் என்று தீர்மானித்து அவரை ஜாதிப் பிரஷ்டம் செய்தனர். அத்துடன் அவரால் இயற்றப்பட்ட கோயிற் புராணத்தை ஸ்ரீ நடராஜர் சபையில் அரங்கேற்றக் கூடாதெனத் தடை செய்துவிட்டார்கள். இதை யறிந்துகொண்ட உமாபதி சிவாசாரியார் தில்லைக்குக் கீழ்புறத்திலுள்ள கொற்றவன்குடியென்னும் நகரத்திலுள்ள ஒரு மடத்தில் பிரவேசித்து அங்கே தமது கோயிற் புராணத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜித்துக் கொண்டும் தமது மாணாக்கர்கட்கு இதோபதேசம் செய்து கொண்டும் இன்பமாகக் காலங்கழித்து வரலானார்.

வழக்கப்படி ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு உற்சவம் வந்தது. அந்த வருஷம் கொடியேற்றுவிழா உமாபதி சிவாசாரியாருடைய பூஜாமுறையாகையால் அவருக்குப் பதிலாக மற்றொரு தீட்சதர் அம்முறையை ஏற்றுக்கொண்டு கொடியேற்ற ஆரம்பிக்கையில், கொடியேறவில்லை; அறுந்தறுந்து கீழே விழுந்து கொண்டிருந்தது. இதைக் கண்ட தீட்சதர்களும் கொடியேற்று விழாவைத் தெரிசிக்க வந்த புண்ணியவான்களும் திகைத்துப்போனார்கள். இந்நிலையில் "எமது தொண்டனாகிய உமாபதி சிவாசாரியனை யழைத்து வந்தாலன்றி இக்கொடி யேறாது" என்று அசரீரிவாக்கு எழும்பியது. உடனே அனைவரும் கொற்றவன்குடி சென்று உமாபதி சிவாசாரியாரைக் கண்டு பணிந்து அவரிடம் விஷயத்தை அறிவித்துப் பயபக்தியுடன் அவரைக் கொடியேற்று விழாவுக்கு அழைத்து வந்தனர்.

## செங்குந்தர்களுக்குள் கொடி யேற்றுதல்

தமது ஆசான் களைப்புற்ற காலத்தில் கஞ்சியளித்த செங்குந்தர்களை உடனே அழைத்து வரு

மாதிரி இன்னும் செய்துகொண்டிருக்கிறார்கள். நவீன முறையிலமைத்துக் கொள்வதற்கு இவர்களிடம் கல்வி யறிவு போதாது. ஆகையால் நமது கைத்தொழிலியக்கத்துக்கும் கல்வி யவசியமென்பதை இங்கு நாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.

(தொடரும்)



படி உமாபதி சிவாசாரியார் அக்ஞாபித்தார். செங்குந்தர்கள் சன்னிதானத்தில் வந்து வணங்கி நிற்க உமாபதி சிவாசாரியார் ரிஷபக்கொடியை அவர்கள் கையில் கொடுத்து வீதிப்பிரதக்ஷணம் செய்துவரும்படி ஆக்ஞாபித்தார். வீதிவலம் வந்த பின் துவஜாரோகணம்செய்யவேண்டிய ஆகமவிதிகளனைத்தும் செய்து முடிந்தான பின்பு உமாபதி சிவாசாரியார் பஞ்சாட்சர மந்திரத்தை ஜெபித்தவுடன் கொடி தானாகவே ஏறிவிட்டது. பக்தர்கள் பரவசமானார்கள். தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதியாரிடம் தங்கள் குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். கொடியேற்றுவிழா இனிது முடிந்தது.

"சிவஞான மூர்த்தியாகிய திருவள்ளுவர் இல்லற தருமத்தை உலகத்தாருக்கு நடத்திக் காண்பிக்கும் பொருட்டு மணஞ்செய்துகொண்டு தமது மனைவியுடன் வாழ்ந்திருக்கையில், பாவமில்லாத தொழில் நெசவுத் தொழிலென மதித்து அதையே தமது ஜீவனோபாயமாக மேற்கொண்டார். ஆகையால், அத்தகைய மேன்மையான தொழிலை நடத்திவரும் செங்குந்தர்களே இன்று முதல் ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய கொடியேற்று விழாவை நடத்தி வைக்கட்டும்" என்று சிவாசாரியாரால் நியமிக்கப்பட்டபடி நாளது வரையில் செங்குந்தர் மரபினர்களே கொடியேற்று விழாவை நடத்தி வருகின்றார்கள். இதற்காக நாட்டிலுள்ள செங்குந்தத் தலைவர்கள், ஸ்ரீ நடராஜப்பெருமான் மீது தரிக்கு இவ்வளவு என்று வரி விதித்துச் சிதம்பரத்துக்கு அனுப்புகின்றார்கள்.

ஸ்ரீ நடராஜர் ஆலயத்திற்குள் எவரும் மேளவாத்தியங்களுடனும் விருதுகளுடனும் பிரவேசிக்க இன்றும் தீட்சதர்கள் அனுமதிக்கமாட்டார்கள். எத்தகைய செல்வந்தர்கட்கும் அத்தகைய வரவேற்பு கிடையாது. ஆனால் கொடியேற்று விழவை நடத்திவைக்கும் செங்குந்தர்கள் மட்டில் சூரசம்மாரத்தன்று நவவீரர் வேடம் தரித்துச் சகல விருதுகளுடன் தமது இனத்தார் புடைசூழ மேளவாத்திய கோஷத்துடன் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு எதிர் முகமாகத் தெற்குச் சன்னதி வழியாக ஆலயத்தில் பிரவேசிக்கலாம். இந்த விசேஷ உரிமை சிதம்பரம் ஆலயம் சம்பந்தப் பட்டவரையில் செங்குந்தர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது மாமூல் வழக்கமாக இன்றும் செங்குந்தர்களால் அநுசரிக்கப்பட்டுவருகின்றது.


# மகா நாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள், தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
40-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்

இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணு 8 தபாற் செலவு அணு 3

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
கீழ்ப்பாக்கம், சென்னை.

# இரக்கம் இன்றியமையாதது

[திரு. சோக்கநாதன்பேட்டை மு. த. வேலாயுதம், செமினரி காலேஜ், புதுவை.]

சாகரஞ் சூழ்ந்த இத்தரணிமிசை செய்தவப் பேற்ருல் பெறற்கரிய மானிட வுடலையெடுத்த மாண்புடையோராம் நம்மில், ஒவ்வொருவருக்கும் ஈகை, இரக்கம், தயவு, தாட்சண்யம் முதலிய குணங்கள் அமைந்திருத்தல் வேண்டும். இன்றேல் ஆறறிவு பெற்ற ஓர் ஆண்மைதா னென்னே?

ஈகை யென்பது இல்லையென் றிரப்பார் யாவர்க்கும் கோருது கொடுத்தலே. ஈகை யென்னும் இவ் வரும் பொருளொன்றே நின்றுலவுமாயின், மற்றைய இரக்கம், தயவு, தாட்சண்யம் முதலாங் குணங்கள் முற்படுமென்று மொழிவது மாணுகாது.

எவன் ஒருவன் உதாரகுணமுடன் ஈகையெனும் மகப்பேற்றை வளர்த்துச் செழிக்கச் செய்கின்றனனே, அன்னவனிடத்துப் பாலில் நெய்யும் பூவில் மணமும் பொருந்தி யிருப்பதுபோல் இரக்கம் பொருந்தி யிருப்பது உள்ளங்கை நெல்லிக் கனியாம்.

நாம் இங்கு எடுத்துக்கூறப் புகுவது "இரக்கம் இன்றியமையாதது" ஆகையான், அதைப்பற்றி நோக்குவாம்.

பெரும்பாலும் எல்லா ஜீவன்களிடத்தும் இயற்கையாய் இரக்கமென்னும் இவ்வருங்குண முண்டு. எனினும், மானுடவுருத் தாங்கியோர்க்கே, மனத்தாலும் அறிவாலும் உய்த்துணர்வதற்கேற்ற அநுபவ முற்றிலு முண்டு. ஆனல், அஃதை அநுட்டிப்பதே சாலச் சிறப்புடைத்தாம்.

இரக்கம் என்பது எல்லா வுயிரிடத்தும் பச்சாதாபங் கொள்ளுந் தன்மையே. உதாரணமாக, உறுப்புக்கள் குறைந்து வேதனைப்படும் ஒருவனை நாம் எப்பொழுதாவது பார்க்க நேரிடின், 'அந்தோ! இவன் படுங்கஷ்ட மென்னே! பாவம்! இந்நிற்பாக்கியவான் உய்ய எத்தகைய உதவி செய்தல் வேண்டும்" என் நினைக்கின்ருே மன்ருே? அவ்விதம் கருதிப் பச்சாதாபப் படுவதே இரக்கமாம்.

இவ்விரக்கம் மக்கள் மாட்டுமல்ல, ஓரறி வுயிர் முதல் மற்றேனைய உயிர்களிடத்தும் காட்டல் வேண்டும். அஃதே பக்ஷபாதமின்றிப் பரமன் நம்மைப் படைத்ததின் இன்றியமையாத் தன்மையாம்.

இரக்கமே உருவா யமைந்தவரும் 'அஹிம்ஸா பரமோ தர்மம்' என்பதை மேற்கொண்டொழுகினவருமாகிய புத்தர்பிரான் புவனியில் இரக்கமெனுங் குணத்தைக் காட்டிப் போந்ததே இதற்குப் போதிய சான்ரும்.

உயிர்களிடத்து இரக்கமே மேற்கொண்டொழுகினவராம் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பாக்களை உய்த்துணர்ந்தார்க்கு, சுவாமிகளுக்கு ஜீவன்களிடத்திருந்த இரக்கம் தெற்றென விளங்காமற் போகாது.

ஒரு கால் திலீபன் என்னும் மன்னன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றனன். ஆண்டு, ஒரு அரிமா ஆ ஒன்றைப் பிடித்துக் கொல்லச் சென்றது. இரக்கமே குடிகொண்ட இம்மன்னன் ஆவை மீட்பான் வேண்டித் தன் அரிய வுடலைப் பொருட்படுத்தாது அக்கோளரிக்குத் தானே இறையாகச் சென்றனன். இதையே,

"கோவதைப் பிடித்த கோளரிக்குத் தன்னுடலை
ஈவனென்றுனே திலீபனென்னு மன்னன்."

என்று ஆத்திசூடி புராணங் கூறும். இஃதன்ருே உயிரின்மாட்டுள்ள இரக்கம்!

ஏசுநாதருக்கு எதிரிகள் இழைத்த இன்னல்கள் பல. சிரத்திற்கு முள்ளாற் செய்த முடியிட்டனர். சிலுவையில் பொருந்தச் செய்து கட்டினர். பின் உதிரம் பெருகியோடத் தேக முழுதும் ஆணியையடித்துச் சித்திரவதை செய்தனர். அங்ஙனம் செய்வதைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டு, இரக்கத்துடன், உபத்திரவம் செய்யும் துட்டர்களைப் பார்த்து, "என் பிதாவே! இப்பாதகர்களை மன்னிப்பாயாக" என்று சொல்லி அவர்கள் அறியாத் தன்மைக்கு இரக்கங் கொண்டு தேவனிடம் முறையிட்டனர். இதன்ருே இரக்கம்!

நம் நாட்டுப் பெரியோ ரொவ்வொருவரும் இரக்கமே அடிப்படையாகக் கொண்டு வந்தனர். ஸ்ரீலஸ்ரீ திருப்புகழ் தண்டபாணி சுவாமிகள் உயிரின் மாட்டு உவப்புடன் கொண்ட இரக்கத்திற்கொரு வரையின்ரும். இவர் இரக்கமென்னும் அரும்பெரும் பொருளை இயற்கையில் கங்கணமாகக் கொண்டவர். சுவாமிகள் தாம் செய்யப் புகுந்த பற்பல காவியத்திலும் ஜீவன்களிடத்து இரக்கங்கொள்ளுதல் வேண்டுமென்றே வற்புறுத்துவர்.

"மேடமருந்தத் தமிழ்வேதத் தோதலிலை"
என உயிரின் மாட்டிருக்க வேண்டிய இரக்கத்தைத் தெளிவித்திருக்கின்றனர்.

பண்டைக் காலத்தில் நம்முன்னோர்களாம் செங்குந்த குலாபிமானிகள் வாழ்ந்த நிலைமையைக் கண்ணுறின், அவர்கள் பிற உயிரிடத்துக் கொண்டவிரக்கம் தென்றென விளங்குகின்றது. அந்நாட்களில், இவர்கள் பிறர்க்கு நேர்ந்த ஆபத்தைக் கேட்ட மாத்திரத்தே, உடல், பொருள், ஆவி மூன்றையுந் தந்தாகிலும் அவ்விடுக்கணை அன்றே அகலுமாறு இரக்கங் கொண்டு நீக்கி வந்தனர்.

வல்லாளை வென்றதும், அக்கினியினின்றெழுந்த ஆட்டுக்கிடாவைக் கட்டிக் கொணர்ந்ததும், இன்னும் பற்பலவும் செய்து காட்டியவற்றை நோக்கி



டின் அவர்கள் மற்றவர்களிடம் கொண்ட இரக்கம் நன்கு புலனுகும்.

நாம் இத்தகைய அரிய குணத்தை வகித்த அயர்களின் சந்ததியார்களென்பது உண்மையேயாயின் அக்குணத்தை என்றும் நிலைநிறுத்தல் வேண்டும். இன்றேல் அப்பெரியார்களின் சந்ததியார் நாம் என்பதை மறத்தல் வேண்டும்.

அவ்விரக்க மென்னு மயிர்தம் ஒவ்வொருவரிடமும் இருந்ததினுலேயே உயிர்களிடத்துக் கருணை கூர்ந்து வந்தனர். அக்கருணையே அவர்களை உய்வித்தது.

இன்னும் நம்மில் அநேகர் இரக்கம் ஒரு சிறிதுமின்றி, கோழி, ஆடு முதலியவைகளைக் கொன்று தின்று வயிறுவளர்த்துக் கொண்டு வருகின்றனர். இவர்கள் நவவீரர்களின் சந்ததியார்களெனவுங் கருதுவ தழகோ? ஒருயிரைக் கொன்று தின்றிடின் இரக்கமென்னுங் குணம் எங்கே மிளிரும்? இரக்கமில்லா மனிதனை என்னென்றழைப்பது? இரக்கமில்லான் மேன்மை யடையான். அப்படி மேன்மை யடையினும் பல்லோராலும் பழிக்கப் படுவான் என்பது நிறைமொழி.

இதற்கு மாருக, பிற உயிரின்மீதிரக்கங் கொண்டு நடப்போமாயின், நன்மையே எஞ்ஞான்று மடைவோம். பிற உயிரின்மீ திரக்கங்கொள்ளும் வழக்கம் நமக்கிருக்குமாயின் நம் உயிர்க்கும் பிற ஜந்துக்களின் உயிர்க்கும் ஒருவித வித்தியாசமில்லையென வறிகின்ருேம். அவ்வாறறிவது நாம் பிற ஜந்துக்களுக் கிடுக்கண் செய்வதைத் தடுக்கின்றது. அங்ஙனம் ஒரு உயிர்க்கும் இன்னல் விளைவிக்காத தொன்றே பெரும் புண்ணியமன்ருே? அதினுல் மனது தூயவழியில் நடக்கத் தொடங்குகின்றன. அம்மாபெருந்துறையே அந்தகனுக்குக்கிடைத்த ஓர் கோலன்ன, தீயவழியை இதுவெனக் காட்டி தூய வழியைத் தோன்றிடச் செய்கின்றது. அங்ஙனம் செய்யின், மனதின் மாட்டுள்ள டம்பம், செருக்கு முதலியன கதிரவனைக்கண்ட பனித்திவலையே போல் எளிதில் மாறி, சிறந்த குணத்தைச் சிறப்புடன் தருகின்றன. இச்சீரிய சிறப்பையே உலகம் புகழ்ந்து உறவாடுமெனக் கூறிடின் மிகையாகாது. அதனுல் இம்மை மறுமைகளில் இன்பமும் உண்டாம்.

ஆகையான் நாம் ஈண்டறியக் கிடக்கின்ற தியாதெனின், மேற்சொன்ன தூய குணங்களைத் தரும் "இரக்கம்" என்னும் வித்தாம்.

இக்குணம் நம்மிடம் பாவுமாறு முத்திக்கு வித்தாம் முருகனை நித்தமும் போற்றுதும்.

சுபம்!

---


## மகம்மேரு தைலம்.



கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகளுக்கெல்லாம் இந்தத்தைலமானது மிகவும் கைகண்டது. சிரசைப்பற்றிய வாதநீர்சாலேநீர் மேகநீர் பித்தசுரத்தைக் கண்டித்துநேத்திரத்தில் பித்தநீராவது, மேகநீராவது, கபாலத்தைப்பற்றியிருக்குமாகில் தலைமுழுதும்நமைச்சல், ஊரல், எரிச்சல், தலைமயிர் உதிரல், தலையில் சுண்டுகள், தலையில் ரணங்கள் இப்பேர்க்கொத்த கபால ரோகங்களை கைக்கு மெய்யாய் கண்டிப்பதினுல் மகம்மேரு தைலமென்று பேர் வைக்கப்பட்டது. மேலும் மேக வெட்டையினுலாவது பித்தச் சூட்டினுலாவது உதிரம் கெட்டுப்போய் திரேகமுழுதும் ஊரல், நமைச்சல், சொரி, சிரங்கு, அழுக்குத்தேமல், தேகவரட்சி, தேகவெளுப்பு கண்களில் முகத்தில் இரத்தமில்லாமல் வெளுத்துப்போதல் இப்பேர்க்கொத்த வரட்சிகளெல்லாம் தணித்து நல்ல இரத்த ஓட்டமுண்டாக்கும்.

இந்த தைலத்தை நாலுநாளைக்கொரு முறை அதிகாலையில் தலைமுழுகவேண்டியது. அன்றையதினம் பகல் நித்திரையும் தயிர் மோர் குளுமையான பதார்த்தம் இதுகள் மட்டும் ஆகாது. மற்றபடி வேறே யாதொரு பத்தியமும் கிடையாது.

ஆழாக்கு தைலம் புட்டி ரூ. 1 8 0

## விஷ ஹரி,

தேள், பாம்பு, இதர விஷ ஜந்துக்களின் கடியின் விஷ வேதனையை உடனே நீக்கும்.

ஆயிரக்கணக்கான ஜனங்களின் உயிர்களைப் பல கிராமாந்திரங்களிலும் வயல்களிலும் காப்பாற்றிப் பிரசித்தியடைந்து இருக்கிறது. ஒரு புட்டி உம்மிடமிருந்தால் சமயத்தில் ஒருயிரைக் காப்பாற்றலாமென்று உண்மையாய் நம்புங்கள்.

விலை புட்டி 1-க்கு ரூ. 1 0 0
புட்டி 3-க்கு ரூ. 2 8 0

---

ஆனந்தா வைத்திய சாலை,
தபாற் பெட்டி நெ. 288,
சென்னை.




# குடியால் விளையும் கேடுகள்.*

[திரு. சோ. சு. பொன்னுசாமி, வேலநத்தம் பூதூர்.]

கடந்த கார்த்திகைத் திங்கள் வெளிவந்த மித்திரனில், குடியால் விளையும் கேடுகள் என்னும் வியாசத்தை நான்கு பக்கத்திற்கு ஏற்றுக் கொள்ளக்கருதினது நமது செங்குந்த சமூக முன்னேற்றத்திற்கும், நாம் இன்னல மெய்தும் பொருட்டும் என்பது செவ்விதிற் புலனும். என்னே நம் மித்திரனின் நன்னேக்கு! ஆயினும் குடியென்பது அறிவிற்குறைந்த நா மறியும் வண்ணம், காப்பிக் குடியா, சாராயக் குடியா, புகைக் குடியா, பிராந்திக் குடியா, பீர் குடியா, எந்தக்குடியென்பதை நம் மித்திரன் விளக்கமாகப் பாமரருமறியப் பகர்ந்திலன். ஆயினும் மேற்கண்ட குடிகளெல்லாம் பணம் கையிலுள்ள புண்ணியவான்களுக்கே அன்றி யேனையோர்களுக் கமையா. ஆறு லெக் குடி யென்றாயில் அரும் பாடுபட்டு உழைத்த அற்ப வூதியத்தைக் கொண்டு, தம் அருமை மக்கள் பசிப்பிணி யாற்றுதழ, கொண்ட மனைவி தன் புதல்வாழுமுகங் கண்டேங்கி இடைக்கமைந்த உடையின்றி கண்ணீர் வடிக்க, தன் ஆப்த சிநேகிதருடனே சென்று வறுமைப் பிணியை வரவேற்கும் பாழும் மது என்னும் உலகம் எள்ளுங் கள் குடியையே, நம் மித்திரன் ஏழைகட் கிரங்கி இம்பரியம்பி யிருக்கலா மென்பது துணிபு.

இனி, ஒரு பொருளை ஆராயவேண்டின் அதின் உற்பத்தி, குண முதலியவற்றை அறியவேண்டிய தவசியம். இப்பொழுது நாம் எடுத்துக் கொண்ட கள்ளென்பது, மட்டு, மது, சொல்விளம்பி, அரிட்டம்,அறிவிழி என்னும் இன்னுமநேக நாமங்களாகப் பெரியோர்களால் அதன் குணத்தை குறித்து உரைக்கப்பட்டிருக்கிறது. விசேஷமாகக் கள், தென்னை மரம், பனை மரம் முதலியவற்றிலுற்பத்தியாகிறது. அதாவது, மரமேறிகள் பாளைகளைத் தருண மோர்ந்து (வெடிக்கு முன்) அறுத்துத் தட்டி கட்டி மட்சட்டியை கவிழ்த்து விடுகின்றனர். பிறகு அறுவாயின் வழியாக கள் சொட்டுகிறது. என்னே, கள்ளினுற்பவக் கொடுமை. தன் உற்பத்தியிலேயே மரமேறிகளை இக்கொற்ற காரியங்களுக்கு ஆளாக்குகிறது.

இதன்றி, தோட்டக்காரர்கள் தென்னிளங் கன்றுகளைத் தங்கள் தோட்டங்களில் வரிசை பெற வைத்து, தம் விருத்தாப்பிய திசையிலுதவும் இளஞ்சிறுர்களை விடப் பன்மடங்கு அதே தொழிலாகப் பாதுகாத்து அழகுற வளர்த்து வானுற வோங்கிய அதனியற்கை அமைப்பை (என்னே எழுதுவது) அவர்களே கண்டகமகிழ்கின்றனர். கண்டும், அவர்கள் அறியாமையால்,

“அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்”

அதாவது, நல்வழியில் தேடிய பொருள் நெடு நாள் நிலவித்தேடியவர்க்;கிடையரு இன்பத்தை ஈய்ந்து தர்ம வழியில் சென்று அறத்தை வளர்க்கு மென்பதும், தீ வழியில் தேடிய செல்வமோ அதிவிரைவில் தீ வழியிலேயே அழிந்து தேடியவருக்கு தேக கஷ்டத்தையும் தரும் என்பதும் ஆன்றோர் அமுத மொழி. அதாவது, அறம், பொருள், இன்பம், வீடென்னும் புருஷார்த்தம் நான்கினுள் “தீவினை விட்டீட்டல்” பொருளென்று செல்வத்தின் றன்மையை ஔவைப்பிராட்டி செவ்வையாகக்குறித்தனர். இவற்றினைக் கிஞ்சித்து நெஞ்சத்திற் கொள்ளாமலும், தென்னையிலுற்பத்தி யாகும் முற்றுத இளநீர்கள் மனிதருக்குக்கோடைகாலதாக சாந்திக்கு இன்றியமையாத வென்பதையும், காய்கள் திருவிக்ரகாராதனைக்கு நிவேதனப் பொருளாகவும், இன்னுமநேக சுப விசேஷ காரியங்களுக்கும் புராணேதிகாசங்களால் புகழத்தகுந்ததென்பதையும், தேங்காய்மட்டையிலுற்பத்தியாகும் நார், அநேக காரியங்களுக்கு உதவுகின்ற தென்பதையும், அதன் மூலமாக வரும் செல்வத்தை யிச்சியாமலும், (குளிக்கப் போய் சேறு பூசிக்கொண்ட) வாக்கியத்தின்படி, ஒரே தருவாயில் வரும் அற்ப பணத்தின்மீ தாசைகொண்டு, செழிப்புற்றோங்கியதென்னைமரங்களைப் பாழ்படச் செய்கின்றனர். என்ன கொடுமை, சன்மார்க்கச் செந்தண்மை பூண்டொழுகு மறிஞர்கள், சகல அறத்தையும் பயப்பதாகிய ஒப்புயர்வற்ற

* இதுவும் போட்டிப் பரீக்ஷைக்கு எழுதியனுப்பப்பெற்ற இனிமையான வியாசங்களுள் ஒன்றாகும். ப-ர்.



கல்வி யறத்தினை வூக்கப் போதனு சாலைகள் ஏற்படுத்துதற் போன்று, சர்வ துன்மார்க்கங்களுக்கும் பிறவிப் பீஜமாகிய கள்ளினை வளர்க்கும் போதனுகழகமாகத் தம் நிலங்களைப் பயன் படுத்துகிறார்கள். என்னே அறியாமையின் பெருமை!

இனி, கள்ளின் தூய்மையை உணர்வாம். அதாவது, மரத்தின்மீது மட் பாத்திரத்தில் நிறைந்த மதுவை மனிதர் தாம் உயிருக்குச் சமானமாக விரும்பினுர்கள் எனில், பறவையாதி யூர்வன வரை தம்முயிராகவே எண்ணிவிடுகின்றன. அதாவது, ஓணன், பல்லி, அட்டை, தும்பி, ஈ, எறும்பு, வண்டு என்னு மநேக ஜந்துககள் மரத்தின் மீதிலேயே, கள்ளில் வீழ்ந்து அகமகிழ வுண்டு, அளவிலா ஆனந்தங் கொண்டு அதிலேயே மிதந்து சிறு நேரத்தில் உடலை மறந்து உயிரைத் துறந்துவிடுகின்றன. அக்கொற்ற கள்ளை மரமேறிகள் அன்றுடமிறக்கிக்குடங்களில் நிறைத்து,கடைக்குக்கொண்டு போய்ச் சேர்த்து அழுக்கெலாந் திரண்ட பெரிய மட் பானைகளில் நிறைத்து விற்கின்றனர். ஏறக்குறைய ஒரு குடங் கள்ளில் ஒரு படி உயிர் நீத்த பிரேதங்கள் கிடக்கும். ஆஹா, கள்ளின் சுத்தமளவற்ற அசுத்தந்தான். இதன் சுத்தத்தை அநேகமாக விளக்க விரிவிற் கஞ்சுகிறேன்.

இப்பேற் கொற்ற மதுவை, உயிர்த் தோற்றங்களிலே சீருஞ்சிறப்புமுற்ற முதன்மையான மானிட தேகத்தைப் பண்டுசெய்த புண்ய விசேஷத்தால் பெற்றுப் பகுத்தறிவுற்ற நாம் பருகுவது என்ன அறியாமை!

அந்தோ, இந்தப் பாழும் மதுவை மனிதர் முதலில் பழகுவது குடியர் நேசத்தினுலேயே என்பது குடியர்களுக்குந் தெரியும். அதை ஒருவாறு சம்பாஷணையாகச் சுருக்கி விளக்குவாம்:—

குடியனுகிய வீரன் நண்பனுகிய கருப்பனை:— இன்று பண்டிகை நாளாச்சே தம்பி நாம் மதுர பிள்ளை தோட்டத்திற்கு போய் வருவோம்.

கரு:—என்ன வீரா, என்ன விசேஷம்?

வீரன்:—ஒன்றுமில்லை, பொழுது போக்கத்தான்.

கரு:—ஆனுல், வருகிறேன். (இருவரும் போகிறார்கள்).

வீர:—தம்பி அதோ பார்த்தாயா? நாம் வந்த நேரம் நல்ல நேரம்.

கரு:—என்ன அண்ணு?

வீர:—அதோ, இப்போதுதான் கள்ளிறக்குகிறார்கள். நாம் ஆளுக்கு ஒரு குடுவை குடிக்கலாம்.

கரு:—அண்ணு, நான் குடிக்கமாட்டேனே. குடித்தால் பாவமல்லவா?

வீர:—அடடா! என்டா தம்பீ, என்னடா பாவம்? நாம் கைக்காசைப் போட்டு குடிக்கிறோம். இதன்றி நாம்தானு குடிக்கிறோம்? நமது பாட்டன் முப்பாட்டன் எல்லோருந்தானே குடித்தார்களாம்.

கரு:—என்னு? அவர்கள் குடித்தால் நாமும் குடிக்க வேணுமா? அதனுல் என்ன பிரயோசனம்?

வீர:—கருப்பா, நீ சிறுவனுதலால் உனக்கு அதனுடைய மகிமை, குணமுதலியவை தெரியாது. அதைக் கொஞ்சம் சொல்கிறேன் பார்.

“உதித்திடுந் துயரம் வீணும்
உடம்பினைப் பெருக்கச் செய்யும்
கதித்திடும் பகைக் கஞ்சாது
சமழ்ந்திடும் மதுவை யுண்டால்
சிதைத்திடு நோய் சேராது
திகழ்ந்திடும் பொருள் பல்லோர்கள்
மதித்திடக் குடியா வீடு
விடியா தென்றறைபுதாலே”

என்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்கள். முதலில் பகவானே கள்ளை மனிதருக்காக! உற்பத்தி செய்தாராம். அதை நமது குலதெய்வமாகிய காளி, துர்க்கை, மதுரைவீரன் முதலிய இன்னுமநேக தெய்வங்களுக்கு வைத்துப் பூசை செய்திருக்கிறார்கள். இதன்றி, அக்காலத்தில் ரிஷிகள், ராஜாக்கள், இன்னுமநேக பெரியவர்களெல்லாம் குடித்ததாக நான் கதை கேட்டிருக்கிறேன். இந்த மதுவை நித்தம் குடித்தாலோ, உடம்புக்குப் பலமும், சுறுசுறுப்பும், ஒருவித சந்தோஷமும். இப்படியெல்லா மில்லாமலா பெரியவர்களெல்லாம் குடித்திருப்பார்கள்?

கருப்பன் சிநேக பான்மையாய் மறுக்க முடியாமல் கொஞ்சம் குடிக்கின்றான்.

கரு:—ஆமண்ணு? நான், இத்தனை நாளாக என்னமோ என்றிருந்தேன். இதில் ஒரு குத்தமுமில்லவே இல்லை. இப்ப ரம்ப தெம்பாயிருக்கிறது?

வீர:—பார்த்தாயா தம்பீ அதனுடைய குணத்தை? இவ்வாறு பேசிக்கொண்டே தள்ளாடித் தள்ளாடி வீடு சேர்கின்றனர். இப்படி அநேகமாக குடியர்கள் சேர்க்கையினுலேயே முதலில் கள்ளைக் கையாளுகிறார்கள் என்பது திண்ணம்.

இதற்குதாரணமாக:—ஆன்றோர் கனியெனச் செந்தமிழ்ப் பாவலர் போற்றுந் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தமது நீதிப் பொக்கிஷமாம் திருக்குறளின்கண்,

“நிலத்தியல்பானீர் திரிந்தற்றாகு மாந்தர்க்
கினத்தியல் பதாகுமறிவு” என்றும்,

“நல்லினத்தினூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லர் படுப்பது மில்” என்றும்,

நாலடியார்

“நுண்ணுணர்வினுரொடுகூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்று—வண்ண

லுணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்தனி ரயத்து ளொன்று"

என்றும் இன்னுமநேக பெரியோரு மநேகவிதமாகத் தீயோர் சிநேகத்தின் தீமையை விளக்கி இருக்கின்றனர். புல்லர் சிநேகத்தா லிலவசமாக முதலில் குடித்துச் சின்னாளின் பழக்க மிகுதியால் தாமே கடைக்குப் போய்த் தாராளமாகக் குடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அன்னவர் 'தேடாதழிக்கின் பாடாய் முடியு'மென்பதைச் சிறிது மோராது, மூதாதைகள் தேடிய சொத்தைக் கொஞ்ச நாளில் பஞ்செனப் பறக்கச்செய்து, இகவாழ்வென்னும் சுகவாழ்வாகிய செழிப்புறு மரத்திற்குச் சதா வைரியாகிய 'நல்குர வென்னும்' தரித்திரமாய புழுவைச் சேர்க்கின்றனர். இத்தகைய தரித்திரத்தை ஆன்றோர்கள் எத்தன்மைத்தாக விளக்கினார்களென்பதை ஒருவா றுணர்வாம்.

" தரித்திரம் மிக்க வனப்பினை ஒடுக்கிச்
சரீரத்தை உலர்தர வாட்டும்,
தரித்திரம் அளவிலாச் சோம்பலை எழுப்பும்
சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்,
தரித்திரம் தலைவன் தலைவியர்க்கிடையே
தடுப்பருங்கலாம் பல விளைக்கும்,
தரித்திரம் அவமானம் பொய் பேராசை தரும்,
இதிற்கொடிய தொன்றிலையே.

என்றும்,

"இன்மையி னின்னாத தியாதெனினின்மையி
னின்மையே இன்னாதது" என்றும்,

"பிறந்த குலமாயும் பேராண்மை மாயுஞ்
சிறந்த தங்கல்வியு மாயுங்—கறங்கருவி
கன்மேற்கழூஉங் கணமலை நன்னாட
இன்மை தழுவப்பட் டார்க்கு" என்றும் வறுமைப் பிணியின் கொடுமையைப் பலவாறு பெரியோர்கள் புகன்றிருக்கின்றனர்.

நிற்க, இவ்வரிய நல்குர வென்னும் தீவாய்ப் பட்டுழன்றும் கள்குடியை ஒழிக்கக் கனவிலுங் கருதினாரில்லை. இவர்களோ, கமலங்கள் முகையவிழ்க்குங் காலைப்பொழுதிலிருந்து பற்றற்ற சீவன் முத்தர் சிந்தை சதா ப்ரஹ்ம பாவனையில் நிலைத்திருப்பது போன்று "எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப்பட்டாலு முத்தர் மனமிருக்கு மோனத்தே" என்பதாகச் சதா கட்காதல் கொண்டு உடல் வருந்த உழைத்து ஆறு எட்டணா கூலியைப் பெற்று மேல்திசைச் செவ்வானத்திடையே தோன்றும் மாலைப்பொழுதைக் கண்டு தம் அகமுகத்தாமரை அலர்ந்திட, வறுமைப் பிணியில் வாடும் தன் குடும்பத்திற்குச் சிறிது முதவி செய்யாமல், சிநேகிதருடனே சேர்ந்து கசடர் கூடிக் களிக்கும் கள்ளுக் கடைக்குச் சென்றுவிடுகின்றனர்.

கடையோ, அநேக சிங்காரமும் சிறப்பு முள்ளதாகத் திகழ்கின்றது. அதாவது, கடையினிருமருங்கிலும், மரங்களிலும், செடிகளிலும், பந்தல்களிலும் ஆங்கிலேயர் சிர அணி போன்ற ஆயிரக்கணக்கான மட்குடுவைகள் கவிழ்க்கப்பட்டுப் பார்ப்போருக்கு இதுதான் துன்மார்க்க போதனாசாலை யென்பதாகவும், மதுவை மனமகிழக் குடிப்பவர் தரித்திரமாய் சலதியில் எங்களைப் போன்று கவிழ்ந்து கரை காணாதுழலுவா ரென்பதையும், அன்றி இப்பாழுங் கள்ளைப் பருகுவோரின் குடியானது பல துன்பத்திற் கேதுவாய் எங்களைப் போல் நிலை தாழ நேரிடு மென்பதையும் அறிமின்! அறிமின் ! என்று அறிவுறுத்தும் வண்ணம் அமைந்திலங்குகிறது. என்ன அலங்காரம்!

நிற்க, அவ்விடத்திற் கூடு மன்பர்களைச் சிறிதுணர்வோம். அதாவது, பாவத் தொழிலுக்குத் துவஜங் கட்டி அட்வான்ஸ் பெற்ற பாவிகளும், கள்ளத் தொழிலைக் கைத்தொழிலாய்க் கொண்ட கசடரும், அடக்கம், பொறை, மானமென்ப தகற்றிய அசடரும், ஜீவதயை சிறிது மில்லாச் சிதடரும், பொய்யினைப் பொக்கிஷமாயுடைய புலையரும், ஒழுங்கையும், ஆசாரத்தையு மொருங்கே ஓட்டி, அநாசாரத்தைக் கையாளு மறிவிலிகளுமாய அங்கத்தினர் கூடும் அதர்ம பரிபாலன சங்கத்திற் சேர்ந்து அங்கே கவிழ்த்திருக்கும் ஒரு மட் குடுவையை எடுத்து, ஈக்கூட்டங்கள் இடைவிடாது மொய்த்திருக்கும் துர்நாற்ற மிகுந்த மதுவை வாங்கி வாங்கிக் கார நிறைந்த கறித்துண்டின் உதவியால் கண்ணை யிறுக மூடிக் கொண்டே மனமகிழ வயிறு திமிரக் குடித்துவிட்டு, மீதியுள்ள பணத்தைக் கொண்டு தள்ளாடிக் கொண்டே, கடையினருகிலுள்ள காசாட்ட மென்னும் சூதாட்டம் பயிலும் சுமடர் கூட்டத்தைச் சேர்ந்து தானுமாடித் தோல்வியுற்றுப் பணத்தை விடுத்துக் கையில் காசின்றித் தலையிற் சுற்றியிருந்த வேஷ்டியை நாலைந்தணாவிற்கு விற்று அதையும் வைத்து ஆடித் தோற்றுவிட்டு, சூதாட்டத்தின் விருப்பால் அரையிற் புனைந்த ஆடையையும் பார்க்கிறான். அதுவோ, இயற்கை வெள்ளை யென்பது சிறிது மின்றி, அநேகம் பொத்தலுடையதாகவு மிருக்கிறது. என்ன செய்வான்? விற்க வழியில்லை? பிறகு பணம் போனாலும் போகட்டும் என்று மெல்ல எழுந்து, தட்டுக் கெட்டுத் தடமாடித் தலைவிரி கோலமாய் இடுப்பின் வேஷ்டியை தொடைக்குமேல் தூக்கிச் சுருட்டிக் கொண்டு,

"நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்
பேணாப் பெருங் குற்றத்தார்க்கு" [னும்

என்பதாகவும் "நலம் வேண்டான் நாணுடைமை வேண்டான்" என்பதாக வெட்க மென்பதோரணுவு மின்றி, எப்பங் கொண்டிறுமாப்புண்டு எண்ணங் கழலக் கண்ணுஞ் சுழல ஏதுமில்லாப் பாவியாய் வீதியில் வீழ்ந்து வாயைத் திறந்து வாந்தியெடுக்க, மொளமொளவென நாய்கள் முடுக்க யிருங்கல்லென்று பெரு நாயெல்லாம் வாலையுங் காலையு மேலே யெடுத்துப் பாத்திர மென்றது மூத்திரஞ் சொரிய ஓதிது வென்று தூதுது வென்று எழுந்து வென்று எழுந்து விழுந்து அரண்டு புரண்டு எட்டி



முட்டித் தட்டுப்பட்டுக் கெட்டலைந்து நல்லோரேசப் பொல்லார் பேசக் கண்டோர் பதைக்க வாதாடிச் சூதாடி வண்டைப் பாட்டுப் பாடிச் சண்டைக் கோர்ட்டுத் தேடி மயங்கி முயங்கித் தியங்கிப் புலையன் போலக் கொலைகள் புரிந்து எல்லாப் பாதக வல்லோனுக்கும் பொல்லாக்கள்ளைத் தள்ளா தருந்தும் புல்லன் வண்டைப் பாட்டாகிய தெம்மாங்கு நாடக மென வாய்க்கு வந்தபடி யெல்லாம் போதை வெறியால் பாடிக் கொண்டே வருகிறான்.

வரும்போது அருகிலுள்ளவன், 'அண்ணா, அதோ போலீஸ்காரன் வருகின்றான் பேசாமல் வா'.

குடியன் 'போடா டேய். நானாருடைத் தெரியுமா? அவங் கெட்டான், போ' என்கிறான் உடனே பளீர் பளீரென இரண்டறை விட்டு, 'ஆரடா பாட்டையி லச்சமின்றிக் கூச்சலிடுகிறது? உன் பெயரென்ன ? சொல்' 'ஐயா, எம் பேருத் தெரியாதா? பழைய கருப்பன் தான்' என, உடனே எழுதிக் கொண்டு 'ஜாக்கிரதையாகப் போய்ச் சேர்' என்று செல்ல, இவனோ, பிறகு அதை மறந்து மெல்ல மெல்ல இரவு எட்டு மணிக்கு வீடு வந்து சேர்கிறான்.

இனி, அவன் வீட்டையும், மனைவி மக்களையும் சிறிதுணர்வோம். வீடோ, மட்டமாகிய மண் சுவரும், பழைய கூறையும், மழைக்காலத்திற்கு நிற்க விடமின்றியதாயும், அதில் எரியும் விளக்கோ, தரித்திரத்தால் விழுங்கப்பட்டு ஒளியின்றி மின்மினி போன்று, பொளுக், பொளுக் கென்று, அணையுந் தருவாயில் இருக்கும். மனைவியோ, உத்தமர்க்கு வாய்க்கும் அதமப் பெண்டுகள் போலன்று. உத்தம மத்திம பெண்டுகளாக ஒருவாறு அமைகின்றனர். அவளோ, மக்கள் பசியாற்றக் காலையிலிருந்து மாலை எழு மணிவரையிலுங் கஷ்டப்பட்டுக் கூலி வேலை செய்து கிடைத்த வருவாயைக் கொண்டு ஒரு படி நொய்யரிசி வாங்கி அதைக் கூழாகச் சமைத்துக் கொண்டு இருக்கிறாள். பிள்ளைகள் அதற்குள்ளாகப் பசி தாளாது, அம்மா சோறு சோறென்று அலறுகின்றன. அச்சமயம், கடைக்குச் சென்ற கணவன் வந்து விடுகிறான். வந்ததும், 'எண்டி இன்னமா சோறாகிறது?' என்று, போதை வெறியால், அவளை மயிரைப் பிடித்து இழுத்து அடித்து விட்டு, நல்லோரேசப் பொல்லா தெல்லாம் பிதற்றிக்கொண்டே, கையைச் சுத்தம்செய்யாமலே சமைத்த கூழைப் பாதிக்குமேல் குடித்துவிட்டு, அப்படியே படுத்துவிடுகிறான். அதன்பிறகு, மனைவி, "பெற்றவளுக்கே தெரியும் பிள்ளையினருமை" என்பதாக, மீதியுள்ள கூழைப் பிள்ளைகளுக்கிட்டு, தன் பசி தணிக்க மீதியின்றி சிவ சிவா என்று பட்டினி கிடக்க நேரிடுகின்றது. இவ்வளவோ? பல நாள் பட்டினிகிடந்த பாவையருமுளர். இப்படிச் சிறுநாட் சென்று ஒரு நாள் தம் வீட்டின் வாயிலில் நின்று 'யார் பழைய கருப்பன்?' என்று ஒரு கான்ஸ்டேபில் சம்மன் சப்ளை செய்து, 'நீ இன்று சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஆஜராக வேண்டு'மெனச் சொல்கிறான். உடனே இவன் நியாய மன்றத்திற்குச் சென்று, ஸப்மாஜிஸ்ட்ரேட்டால் குற்றஞ் சாற்றப்பட்டு இரண்டு ரூபாய் அபராதத்துடன் வீடு வந்து மனைவியின் முகத்தைப் பார்க்கிறான். அவளோ அச்சம், மடம், பயிர்ப்பு, நாணம் என்னு மணிகளன்றி, பொன்னாற் செய்த பணியினைப் படைத்தவளல்லள். என்ன செய்வாள்? பணத்திற்கு உடனே மீதியுள்ள உண்ணுங் கலத்தையும் நீருந்தும் பாத்திரத்தையும் அரை குறையாக விற்று, 2 ரூபாயையும் செலுத்தி விடுகிறான். இப்படிப் பல நாட் கழியக் கடன் பட்டு, பழைய கூறையையும் விற்று, சோற்றுக்குத் திண்டாடிப் பெண்டு பிள்ளைகளோடு கண்டிக்குப் போக வண்டி யேறி விடுகிறான். ஆஹா! என்னே குடியால் விளையு மளவற்ற கொடுமை ! கொடுமை !!

'நமதன்பர்கள் இப்பேர்க் கொற்ற குடும்பங்களை நேரில் கண்டும் கேட்டு மிருப்பார்களென்பது உண்மை. இனி நம் குலத்தவரைச் சிறிதாராய்வோம். அதாவது கவிச்சக்கரவர்த்தியால் வியாப் புகழ் பெற்றதும், நாவினால் மழுவெடுத்த ஞானப்ரகாசஸ்வாமிகளால் மூவாயிரஞ் செய்யுளையேற்றதும், செங்குந்தப் படையுடைத் தேசிகற் கடிமை இயற்றியதும், கசடறக்கற்ற பெரியோர்களால் புகழப்பட்டதுமாய செங்குந்த குலத்திற் பிறந்தும் மதுவைக் கையாளுவது மதியீனமன்றோ? நம் குலத்தவருள் 100-க்கு 80-பேர் குடிக்கிறார்களாம். என்ன அறியாமை ! உதாரணமாக 400 500-குடிகளுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பாவாய்தல் அணைத்தல் முதலிய தொழில்களால் கிடைக்கும் 80-ரூபாயில் 75-ரூபாய். கள்ளுக் கடைக்கேபோய்ச் சேர்கிறது. நிற்க நம் கல்வி நிதிச்சீட்டுக்கு 8-அணா கொடுக்கச் சக்தியற்றவன் நாளொன்றுக்கு 10-அணாவுக்குக் குடிக்கிறான். என்ன விந்தை ! எக்குடியிற் பிறந்தாலுங் கட்குடியைக் கருதினவன் கடையனுமன்றோ?

இனி, கள் குடித்து வெறிகொண்டு, செய்யுந் தீய காரியங்களால் மறுமைக் கின்னலாம் நரகவேதனை புறுகின்றனர் என்பது திண்ணம். உதாரணமாக, நம் பெரியோர்கள்,

"கள்விலை பகர்வோர் கள்ளினை நுகர்வோர்
கள்ளருந்துதற் குடன்படுவோர்
கள்ளருந்தினரை மகிழுனர் நரகில்
கற்பகாலங் கிடந்தழுந்தி
எள்ளருந் திய மலப்புழுவாகி
மலத்தினை நுகர்ந்து பின் இறந்து
விள்ளருங் கொடிய ரௌரவ நரகில்
மீட்டு மீட்டுழன்றுநாள் கழிப்பர்"

என்றும்,

" தீமைபயக்குஞ் சுராபானம்
செய்த பாவி மலம் புசித்துத்

துய்மை அடையா உடல் வீக்கித்
துன்பத்துழலு முயிர்களாய்
காமதடையும் பறவை களாய்
கலயில் கிருமிக் கீடமாய்த்
தோமதுறு பல் பவமெடுத்துச்
சுழன்று திரிவான் பற்பல நாள்"

என்று, நரகதுன்பத்தைத் தெளிவாகச் சொல்லி இருக்கின்றனர்.

நிற்க, சிலர் அசுத்தம் நிறைந்த கள்தானே இழிவானது என்று சாராயம் பிராந்தி முதலியவற்றைக் குடிக்கிறார்கள். இதென்ன அறியாமை! போதை தரக்கூடிய வஸ்துவெல்லாம் கெட்டதென்பது அறிவிற் சிறந்த ஆன்றோர்களின் அபிப்பிராயமல்லவா?

இனி குடியால் விளையும் கேடுகளைத் தனியே சுருக்கி விளக்குவாம்.

கள் மனிதருக்குப் பிறவி சாகரத்தைக் கடக்க ஓர் தெப்பமாகவும், உலக போகத்திற் குதவியாகவும் சர்வேசனுலளிக்கப்பட்ட அறிவையே முதலில் கெடுக்கிறது. (1)

கள் அருந்தும் மனிதன் இரைப்பையானது கெட்டு, இருதயங்கெட்டு, இரத்த அபிவிர்த்திக் கேதுவாகிய ஜீவ அணுக்கள் நசித்து அதன் மூலமாக அளவிலா நோய் தொடருமென்பது வைத்திய நிபுணர் துணிபு. (2)

கள் நம்பரத கண்டத்திலே சாஸ்திரங்களாலே தொகுக்கப்பட்ட பஞ்சமா பாதகமாகிய, கொலைகளவு, கள், காமம், பொய், என்னுமற்ற நான்கையுந் தடையின்றி வளர்க்குந் தருவாம். (3)

கள் புகழையோட்டி இழிவைநாட்டும். (4)

கள் அருந்துவோனுக்குநாளுக்குநாள் இரத்தம் குன்றித்தேகம்வெளுத்து மூளை உணர்ச்சியற்றுக் கெடும். அவர்களுக்குக் கிடைக்கும் மக்கட் பேற்றைச் சொல்லவேண்டியதில்லை. அதன் காரணமும், "தந்தையைப்போல் பிள்ளை" யென்பதும் வாசகர்களுக்குத் தெரியும். (5)

கள் இன்னுதிலெல்லாம் இன்னுதது. (6)

கள் அருந்தும் ஒரு குடியோ சமூகமோ முன்னேற்ற மடைதல் அருமையினும் அருமை யாகும். (7)

கள் சோம்பல், நித்திரை, மயக்கம், துக்கமிவற்றை நந்து, சோர்விலா மிடியை நிலை நிறுத்தும். (8)

கள் சகல மதத்தினராலும் கெட்டதென்று நீக்கப்பட்டதாகும். (9)

கள் செல்வமாய திருவாலும் கமலத்திருவாலும் புறக்கணிக்கப்பட்டவருடைய நட்பாகும். "இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந் திரு நீக்கப்பட்டார் தொடர்பு." (10)

கள் க்ஷயரோகத்திற்குத் தூண்டுகோல் (11)

கள் அருந்து மக்கள் உலகில் நல்லோரெனப் படுவோரால், சிறிதும் மதிக்கப்படாது, மாக்களெனக் கருதப்படுகின்றனர். "உண்ணற்கள்ளை யுணிலுண்க சான்றோரா லெண்ணப்பட வேண்டாதார்" (12)

கள் வியாதிகளுக் கேதுவாகிய விஷக்கிருமிகளை யுண்டாக்கும் வித்து. (13)

கள் இம்மை, மறுமை ஆகிய இருவிடத்தும் அளவிலாத் துன்பத்தைத் தரக்கூடிய சிநேகனாகும். (14)

கள் குடிப்பவன், செல்வ வானுயினும், கல்வியாளனுயினும் அஞ்ஞான வயத்தனாய் ஆத்ம விசாரணையின்றி அழிய நேருமென்பது நிச்சயம், நிச்சயம், நிச்சயம். (15)

கள் சொல்லுகிறதாம்:—நான் பிறந்ததோ உன்னத இடம் அப்படியிருந்தும், நான் குடியர் நேசத்தால் கொடும்பாவியெனப் பேர்படைத்தேன். இனி சின்னுளில் இப்பெயரை மாற்ற இந்நாட்டை விட்டகல்வதே நலம்.

நம் தேச முன்னேற்றத்திற்கு உழைத்தவரும், பத்திரிகா நிபுணத்வம் வாய்ந்தவருமாகிய பாரதியார் குடியின் கொடுமையை

" பெருமை வாய்ந்த பாரதமக்கள்
யாவருக்கும் விடுதலை
வறுமை வலையிலலையு மேழை
எங்களுக்கும் விடுதலை
தருங் கெட்டு நாகந்தள்ளும் தீய
கள்ளை யாவரும்
தூரத்தள்ளி நன்கு வாழ்வம் நாமுமிந்த
நாட்டிலே (1)

" நீசனென்றுங் குடியனென்றும்
எவனுமில்லை சாதியில்
மோசஞ் செய்யுங் கள் பிசாசை நாட்
டினின்றும் ஓட்டுவாம்
காசு சேர்த்துக் கவலை யின்றி மக்க
ளோடு வீட்டிலே
மனமகிழ்ந்து சோறும் பாலும் மோரு
முண்டு வாழ்வமே" (2)

என்பதாகச் சொல்லி யிருக்கிறார்.

குடியால் விளையும் கேடுகள் இன்னும் அநேகமிருப்பினும், நம்மித்திரன் நோக்கத்தின்படி இத்துடனிறுத்திக் குடிக்கு முக்கியகாரணமாகிய கல்வியின்மை, தீயோர் நட்பு இவற்றைக் களைந்து, நம் மக்களிடையே கல்வி வளரவும், கயவர் கேண்மை யகலவும் எல்லாம் வல்ல பெருமானும் வாரணத் துவஜவள்ளலை இடையருதேத்தி அவனதின்னருள் எய்துவாம்.

---






## செங்குந்தமித்திரன் கும்மி

### காப்பு.

சீரமருஞ் செங்குந்தத் திண்மையுறு மித்திரன்மேல்
நாரமருங் கும்மிதனை நாம்பாட—ஏரமரும்
ஐயானனக் கடவுள் அன்போ டமர்ந்ததுதிக்
கையானை யன்றியுண்டே காப்பு.

### கும்மி.

(1) கும்மியடியுங்கள் கும்மியடியுங்கள்
கும்மியடியுங்கள் கும்மியடி
நம்மிறை செங்குந்த மித்திரன் தன்னையே
நாடிக்கும்மி யடியுங்கடி. (கும்மி)

(2) வாட்டமில்லாத மனத்தவராய் மிகு
வண்மை சேர் செங்குந்த மித்திரனை
நாட்டினில் கண்டு நலம் பெறுவோ மென்று
நம்பியே கும்மி யடியுங்கடி. (கும்மி)

(3) வஞ்சமில்லாத மனத்தவரா யிதோ
வந்தாரே செங்குந்த மித்திரனும்
கொஞ்சிக் குலாவியே கும்மாளம் போட்டினிக்
கூட்டமாய்க் கும்மி யடியுங்கடி. (கும்மி)

(4) வட்டமதிமுக மாதரசே கவி
வாணரா மொட்டக் கூத்தருக்குத்
திட்டம தாய்ச்சிரம் வெட்டிக் கொடுத்திட்ட
செங்குந்த மித்திரன் பாருங்கடி. (கும்மி)

(5) பார்க்கமுடியுமோ வென்றிருந்தே சென்னை
மார்க்க மிருந்தவர் வந்து விட்டார்
நோக்கமதாகவே கீர்த்திப்ரதாபனை
வாழ்த்தியே கும்மி யடியுங்கடி. (கும்மி)

(6) வந்தவர் தம்மைநாம் கண்டுகளிப்பெய்தி
வாலிபர் சங்கத்தைச் சேர்ந்தோமே
சிங்கத்தை யொத்தோர் செங்குந்த மித்ரனை
சேர்ந்துநாம் காணுவோம் வாருங்கடி (கும்மி)

(7) பாம்பின் வாய்ப்பட்டுப் பதைத்திடுந்தேரை
தேம்பி யழுகின்ற பிள்ளைகளைத் [போல்
தாங்கி யழைத்திடும் செங்குந்த மித்திரன்
தன்மையைப்பாடி யடியுங்கடி. (கும்மி)

(8) பட்டபாடெல்லா நாம்பார்த் திருந்தாரினிக்
கட்டமொரு கணம் கூடாதென்று
இட்டமித்ரபந்து வானவர் தம்மொடும்
ஈண்டு வருகிறார் பாருங்கடி. (கும்மி)

(9) அந்தரங்க விசுவாசிகள் தம்முடன்
சொந்தமாய்ப் பாடிப் படிப்பவராம்
கந்தனருள் சிறந்தோங்கிய செங்குந்தர்
கருத்தைப் பாடி யடியுங்கடி. (கும்மி)

(10) அம்புவி தன்னிலே செங்குந்த மித்திரன்
அங்கத்தினரொலா மொன்று கூடி
கெம்பீரமாக வித்திங்களில் பேசிடும்
சங்கத்தைக் கேட்க வாருங்கடி. (கும்மி)

(11) சப்பலிலேறிய செங்குந்த மித்திரன்
எப்ப வருவாரோ என்றிருந்தேன்
ஒப்புயர் வற்றதோர் கல்விசரக்குடன்
செப்பிய நாளிலே வந்தாரடி. (கும்மி)

(12) நாடெழுபத்திரண்டாவதற்குக் கொடி
நாட்டிய வீரப்ரதாபமுண்டு
எடெழுதாப் பல க்ராமத்தைச் சேர்ந்தவர்
இன்னிசைப் பாடி யடியுங்கடி (கும்மி)

(13) சின்னவயதுள்ள கன்னியரே யிந்த
செங்குந்த மித்திரன் ஆபீசில்
சண்முகசுந்தர மாமுகத் தைக்கண்டு
தாட்டிகமாய்க் கும்மி யடியுங்கடி. (கும்மி)

(14) தங்கும் புகழ்பெற்ற சண்முகவேலனும்
சாது சபாபதி வள்ளலாரும்
செங்குந்த லோகமும் மித்திரன் சங்கமும்
சிறந்து வாழவே பாடுங்கடி. (கும்மி)

கா. சி. இரத்தினசாமி,
அம்மாபேட்டை, தஞ்சை ஜில்லா.




# ஔவைப் பிராட்டியும் ஆறுமுகனும்

[திருவாளர் வை. த. இராமலிங்க முதலியார், கண்டாச்சிபுரம்]

சீருற்றுச் சிறந்து விளங்கும் நம் தமிழகத்துள் கலைமகளம்சமாய்த் திருவவதாரஞ்செய்து, கண பதி பூஜையைக் கடைப்பிடித் தொழுகும் நெறி யினராய், சேர சோழபாண்டியாதியரசர் பெருமக் களுடன் நிகழ்ந்து, லோகோபகாரமாய் ஆத்தி சூடி கொன்றைவேந்தன் நல்வழி முதலிய எண்ணி றந்த பல அரிய நீதிநூல்களை நந்தமிழ்மக்களபி விருத்தியின் பொருட்டு அறிவு வளர்ச்சிக்காக வெளியிட்டுதவிய தமிழ்ப்பெருஞ் செல்வியாகிய நம் ஔவைப் பிராட்டியாரைப்பற்றி யறியாதார் மிகச் சிலரே. அவ்வம்மையார் நந் தமிழகத்துக்குச் செய்த பேருபகாரத்திற்காக நாமெல்லோரும் மிக வும் நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். இவர் தெய்வப்புலமை மிக்குக் கவிபாடுவதில் நிரம்பவும் சாமர்த்தியம் வாய்ந்தவர்.

கல்வியறிவின் மிக்க அறிஞர்களைக் "கல்விச் செருக்கு" என்னுங் காட்டானை தொடர்வ துண்டு. ஒருகால் இது நம் ஔவையாரையும் பீடித் தது. அதனால் விகற்பமுற்று அரச சமஸ்தானத் தைவிட்டு நீங்கி, புலவர்களை வெறுத்து, கல்வியிற் றமக்கு நிகராவார் யாரு மிலரென் றெண்ணி யகங் காரமேலீட்டால் காட்டுவழியாகத் தனித்துவருவா ராயினர். இஃதுணர்ந்த நஞ் செந்தமிழ்ப் பரமா சாரிய மூர்த்தியாகிய அறுமுகப் பெருமான், அவ் வம்மையாரின் அகங்காரத்தை யொழித்தல் காரணமாகவோ, அல்லது மனைவியாகிய வள்ளி நாச்சியாரின் உடன் பிறந்தாளாதலால், மைத்துனி யென்கிற முறையில் பரிகாசமாய் ஏமாற்றஞ் செய் வான் கருதியோ, அறியேம், விநோதமாய் அவர் வருகின்ற வழியில் தந் திருவுருக் கரந்து ஒருகால் எருமை மேய்க்குமோர் ஆயச் சிறுவன் வடிவேற்று ஒரு சிறு கந்தையை யுடுத்திக் கையிற் பிடித்த கோலுடன் சில எருமைகளை மடக்கிக் கொண்டு தளிர்த்துப் பூத்துக் காய்த்த வோர் நாவன் மரத் தின் மீதேறிப் பழம் பறித்துத் தின்பவர்களைப் போல் நடித்து நின்றனர்.

பசியினாலும் வெயிலில் வழி நடந்த இளைப்பி னாலும் வாட்டமுற்று நின்ற ஔவையார் அச் சிறுவனை யணுகி, "ஏ பிள்ளாய்,

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்

என்றபடி பசியென்னும் பிணி யென்னை வருத்துவ தால் அது தணியுமாறு எனக்குச் சில பழங்கள் போடுவாயாக" என்று கேட்டனர். அதற்குச் சங்கத் தமிழின் தலைமைப் புலவராகிய பெருமான், 'ஏ! அம்மே! நிற்குச் சுடும்பழம் வேண்டுமோ அல்லது சுடாப்பழம் வேண்டுமோ? எது தேவை? அதைக் கேள் போடுகிறேன்" என்று சொற்றனர். இதனைச் செவியேற்ற நம் ஔவையார் மிகவும் ஆச் சரியங் கொண்டவராய்த் திகிலடைந்து, நாவற் கனிகளிற் சுடும்பழமும் உளதோ என்னுஞ் சந்தேகசித்தராய் 'சுடாத கனிகளே யாண்டு மிருப் பக் கண்டுங் கேட்டுமுளோம், இதென்ன புதுமை' யென்றெண்ணி, அதனை யறிகுவான் வேண்டி, 'மைந்தனே, சுடுகனியே போடுவாயாக' என்ற னர். அதற்குச் செவ்வேற் பெருமானாகிய சிறு வன் நன்கு கனிந்த சில பழங்களைப் பறித்து மண லின்மீது வீசி யெறிந்தனர். அவைகளை ஔவை யார் பொறுக்கி யெடுத்துப் பசியின் கொடுமையால் விரைவிற் றின்ன விரும்பிப் பழங்களி லொட்டி யிருந்த மணல் நீங்குமாறு தமது வாயினா லூதினார். அதனைப் பார்த்த நம் அறுமுகக் குமரன் "கிழவி யே, பழஞ் சுட்டது கொல்? நிரம்பவுஞ் சுடுகின் றனவோ?" என்று கைகொட்டி நகைத்தனர். அதனைக் கேட்ட நம் மூதாட்டி பெரிதும் நாணி, "அன்னோ! இச்சிறுவன் என்னை யேய்த்து விட் டானே. அறிவின் முதிர்ந் திணையிலாச் சிறந்த நுண்ணறிவுடைப் பண்டிதை யென்றல்லோ வெண்ணி இறுமாந்திருந்தேன். சிற்றுளியால் பெரிய மலையுந் தகர்ந் தொழிதல் கண்கூடே. அகன்ற பெரிய கடலும் கலசயோனியாகிய குறு முனியின் கையால் உழுந்தளவாய் எடுத்துப் பரு கப்பட்டதன்றோ! அறிவு யாரிடத் தடங்கிற்றம்ம! அறிவுக்கு மவதி யுண்டோ!! இதுகாறு மெவரா னும் வெல்லப்படாமல், எத்தனை கூறிய மதி கொண்ட கல்விசைப் புலவர்களை யெல்லாம்



வென்று சிறந்து விளங்கிய வென்னை வெள்கச் செய்து, இற்றைஞான்றோர் மாட்டிடைப் பையன் வெற்றி கொண்டு மேன்மை யுற்றனனன்றோ!" என்று கூறி,

"கருங்காலிக் கட்டைக்கு வாய்நாணக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணுமே—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கியான் தோற்ற
தீரிரவு துஞ்சாதென் கண்"

என்னும் வெண்பாவைப் பாடித் துக்கத்துளாழ்ந் தனர். அது கண்ட கருணைத் தடங்கடலாகிய பெருமான், "முதியாய்!

"நுண்ணறி வுடையராய் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும் பேதமைத்தே'

என்பதறிந்திலரையோ. பேதமை யென்பது மாதர்க் கணிகலனல்லோ. ஆதலின் வருத்த மடையற்க" என்று கூறு முழுமதியன்னவாறு முகங்களும், மூன் நான்காகும் விழிகளினருளும், வேலும் வேறுள படையின்சீருந் தோன்றத் தமது சுயவடிவத்துடன் காட்சிகொடுத்தருளினர். இவ்வற்புதத் திருக் கோலத்தைக் கண்ட ஔவையார் தம்மை மறந்து ஆனந்த பரவச வெள்ளத்துளாழ்ந்து "எங்கள் செந்தமிழ்த் துரையே இச்சிறியேனை யாட்கொள்ள இத்திவ்ய திருக்கோலங் கொண் டது! என்னே என் தவம்!" என்று பலவாறு துதித்துப் பணிந்து போற்றி நின்றனர். அதற்குக் கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியாம் வெற்றி வேற் பெருமான் மகிழ்ந்து, "பண்டிதையே! கவ லற்க! நின்னுடனோர் கலாவிநோதஞ் செய்வான் கருதி வந்தனம். ஆகையின் இவ்வுலகில் இனிய தியா துரைத்தி" என வினவியருளினார். அதற்கு நம்பிராட்டியார்,

"இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிதவினிது வேகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுத
லதனினு மினிது அறிவினர்ச் சேர்த
லதனினு மினிது அறிவுள்ளோரைக்
கனவினு நனவினுங் காண்பதுதானே"

என்று விடை பகர்ந்தனர். அதற்குச் செவிசாய்த்த பெருமானார், 'தமிழ்க்கலைவல்லாய்! நன்றுநன்று. இனியன கூறினை. கொடியனவற்றையுங் கூறுவா யாக' என்றனர். அதற்குத்தரமாக

"கொடியது கேட்கினெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
யதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோ
யதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிதின் கறையி
னின்புறவ வன்கையி லுண்பதுதானே"

என்ற கவியை ஔவையார் சொல்லி யருளினர். அதனாற் பெரிதும் உவகை யுற்ற புள்ளிமயிலேறும் வள்ளிமணாளன் மீண்டும் "முத்தமிழ்த் துறையுங் கற்றுணர்ந் தான்ற கேள்வியின் வல்ல முதியாய்! அரியவற்றுளெல்லாம் அரியவை யாது?" என்று கேட்டனர். அதற்கப்புலமை மிக்காள்,

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிடரா தலரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடுநீ ங்கிப் பிறந்த காலையு
ஞானமுங் கல்வியு நயத்தலரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையுந்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே'

என்று விரைவாக உத்தரங் கூறினர். அதற்குச்சங் கத்திருந்து தமிழாராய்ச்சி செய்த தனிப்பெருந் தகையாகிய பெருமான், தன் மைத்துனியை நோக்கிப் "பண்டிதாய்! நின் சீரிய மதியால் கூறி யது கேட் டகமகிழ்ந்தனம். பெரியவற்றுளெல் லாம் பெரியது யாது? அதனையும் நின் கனிவாயாற் புகன்றருள்வாயாக" என்று மொழிந்தனர். அதற்கு நம் ஔவைப் பிராட்டியார் அறுமுகப் பெருமான் றிருவடிகளை வணங்கி நமஸ்கரித்து, "எங்கள் குல தெய்வமே! செந்தமிழ்ப் பரமகுருவே! தேவரீ ரறியாததொன் றுண்டோ! எல்லாவறிவு முடைத் தேவரீர் நாயினுங் கடைப்பட்ட புன்மை யாளா கிய இப்பேதையை வினவல், மக்களைப் பெற் றோர் தங்கள் மதலையின் மொழி கேட் டின்புறுதல் போல ஆகும்" என்று நம் நரைமூதாட்டியார் கூறுவாராயினர்.

"பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
"பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின்றோ
னலைகடல் குறுமுனி யங்கையி லடக்கங்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரல் மோதிர
முமையோ இறைவர் பாகத் தொடுக்க
மிறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கந்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும
[பெரிதே"

என்று கூறியது கேட்டுச் சர்வ லோகாதிபதியாகிய சண்முகப் பெருமான் ஔவாயாரின் அறிவின் மாட்சியை வியந்து உவகை மிக்குளனாய் அவரை நோக்கி,' செல்வியே! நம்வினாக்களுக்கேற்றபதிலே நன்கு நவின்றனை. நின்மதியே நன்மதி. மற்றோர் மதியெலாம் புன்மதியே. நின்பாற் பெரிதும் மகிழ் வுற்றனம். பசிபிணி நரைதிரை முதலியனவின்றி நெடுங்காலம் வாழ்வா னினைவையேல், சேர நாட் டிலே பெருமலையின் முழையிடத்தே அமிழ்தின்

# செங்குந்த யாத்திரைவாசி

## நறுமண மாப்பிள்ளையின் சம்பாஷணை தொடர்ச்சி

யான்:—அப்படி யிருக்க, கல்வியிலும், செல்வத்தி லும் மேம்பட்ட அவர்கள் கல்வி வாசனையும் தகுந்த செல்வமுமில்லாத உமக்கு எப்படிப் பெண் கொடுத்தார்கள்?

நறு மா:—பின்னர் எங்கே கொடுப்பார்கள்! பந் துக்களுக்குள்ளே தானே கொடுத்தாக வேண் டும். ஆமாம், சுவாமி, அவர்களுக்கு மாத்திரம் அந்த எண்ணம் உண்டு. அடுத்த ஊரிலுள்ள ஒரு பணக்காரர் வீட்டில் சம்பந்தம் செய்ய இஷ்டப்பட்டார்கள். ஆனால் முடியவில்லை. நாங்கள் ஜாதிக்கட்டு செய்து விடமாட் டோமா? அந்த வீட்டுப் பிள்ளைகள் படித்த வர்கள்தான். சைவாசாரமு முடையவர்கள் தான். என்றாலும் வேறு வகையார். அந்த சம்பந்தம் நடந்திருக்குமானால், அந்த குடும் பத்தாரையும் அந்த வகையார் தள்ளி விட்டி ருப்பார்கள். கடைசியில் இந்த இரண்டு குடும்பத்தார்பாடும் திண்டாட்டந்தான். அந்த வம்புக்குப் பயந்தல்லவோ எனக்குக் கொடுத் தார்கள். நாங்களும் மாமா வீட்டாரும் பழைய சம்பந்திகள். எனக்குக் கொடுத்த பெண்ணிற்கு நன்றாய் எழுதப் படிக்கத் தெரி யும். என்னென்ன புத்தகங்களோ படிக்கி றாள். நல்ல புத்திசாலிதான். பிரயோஜன மென்ன? கடைசியில் படிப்பு வாசனை யில் லாத என்னைத் தானே கட்டிக் கொண் டாள். பெரியவர்கள் தெரியாமலா பெண் களுக்குப் படிப்பு வேண்டா மென்றார்கள். அதனதன் தலையில் போட்டபடிதானே நடக் கும். சாமி! எப்போதும் பழைய வழக்கத்தை மாற்றுவது தப்பல்லவா? சாமிக்குத் தெரி யாததல்ல.

யான்:—ஐயா! விளங்கிவிட்டது. சிறுத்தும் தயவு செய்து. நெடுங்காலமாக நீங்கள் குடிப்பதற் கும், சமைப்பதற்கும் உபயோகித்து வந்த ஒரு கிணற்றின் நீரானது நீரோட்ட மாறுத லால் உப்பு நீராகி விடுமானால் அப்போதும் வழக்கப்படி அந்தக் கிணற்றின் நீரையே (உப்பு நீரை) தான் உபயோகிப்பீர்களா? அல்லது வேறு நல்ல நீருள்ள கிணற்றைத் தேடிச் செல்வீர்களா! உங்கள் சம்பந்தத்திற் கு யான் இதைச்சொல்ல வரவில்லை. வழக் கத்தை மாற்றக் கூடா தென்றீர்களே அதற் காகச் சொல்லுகிறேன் (எனச் சொல்லி பல உதாரணங்கள் எடுத்துக் காட்டினேன்).

நறு-மா:—சுவாமிகளை நான் எதிர்த்துப் பேசுவ தாக நினைக்கக் கூடாது. பேச்சில் தாக்ஷண் யம் பார்த்து உண்மையை மறைக்கக்கூடாது. இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் பேச்சை விட்டுக் கொடுத்தால் காரியம் கெட்டுப் போகும். சுவாமிகளைப் போன்ற தெரிந்த வர்களிடத்தில் தான் சந்தேகம் தெளிந்து கொள்ள வேண்டும். நான் படிப்பில்லாதவ னானாலும் கொஞ்சம் கேள்வி யுண்டு. கேள்வி படிப்பைக் காட்டிலும் விசேஷமான தென்று திருவள்ளுவர் நயினார் கூடச்சொல்லி இருக்கி றாராம்: கேள்வியினால்தான் கண்ணப்ப நாய

(291-வது பக்கத் தொடர்ச்சி)

நன்மையை யுடையக் கருநெல்லிப் பழமொன் றனது. ஆங்கு சென்று அதிகமான் நெடுமான்வஞ்சி யைப் புகழ்ந்து பாடிக் கேட்பையே லீவான். அஃ துண்டு நெடுநாள் வாழ்ந்திருந்து, ஈற்றி லெமது பதமடைவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளி யந்தர்த்தானமாயினர்.

இதனால் கல்விச்செருக் ககன்ற ஔவையார் அவ் வாறே கொங்கு நாட்டுக் கருவூர் சென்று அரசிளங் கோமானாகிய அதிகமான் நெடுமான் வஞ்சியைப் புகழ்ந்து பாடி நெல்லியங் கனி பெற்றுண்டு நெடு நாள் வாழ்ந்திருந்தனர். ஆதலால் சகோதர சகோ தரிகளே!

"கடலே யனையம்யாங் கல்வியா லென்னு
மடலே றனைய செருக்காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப்படும்"

என்னுஞ் செய்யுளைச் சிந்தித்து கல்விச் செருக் கின்றி நஞ் சீரிய தமிழை யாதரித்து,

"தம்மிற் கற்றாரை நோக்கிக் கருத்தழிற் கற்ற
எற்றே யிவர்க்கு நாமென்று" [தெலாம்

என்னும் பெரியோர் வாக்கைப் பேணி மென் மேலுங் கல்வியை விழைந்து கற்றுத் தமிழ்க் கலை நிரம்பிய புலவர்சிகாமணிகளாய்த் திகழ்ந்து நமது பாரத தேசத்தில் நம் தாய் மொழியாகிய தமிழ் பண்டுபோல் தலை யெடுத்தோங்குமாறு முயற்சிக்க முன் வருவீர்களாக. இதற்கு நம் முருகப்பெரு மான் திருவருள் துணைபுரிவதாக.

சுபம்! சுபம்!!



ஞர்கூட 6-நாளில் மோக்ஷம் அடைந்தாராம். இதெல்லாம் சுவாமிக்கு நான் சொல்லவேண் டியதில்லை. இது எல்லோருக்கும் அநுபவந் தானே. எங்கள் ஊரில் சங்கம் வைத்த காலத்தில் ஒரு வாசக சாலையும் வைத்தோம்: நாலைந்து பத்திரிகைகள் வருகின்றன. நான் சாயந்திரம் ஒவ்வொரு நாளும் தவறாமல் வாசகசாலைக்குப் போவதுண்டு. என்னைப் போலவே படிக்கத் தெரியாதவர்கள் சிலரும் வருவார்கள். பொது விஷயத்திலும் குல முன்னேற்றத்திலும்மிகுந்த ஊக்கங்கொண்ட ஒரு சிறு பிள்ளை எங்களை வாசகசாலையின் ஒரு மூலையில் தன்னைச் சுற்றி உட்கார வைத் துக் கொண்டு பேபரைப் படித்து எங்கள் புத் தியில் ஏறும்படி விளக்கிச் சொல்லுவார். இதனால் ஒன்றுந் தெரியாத எனக்கும் நாள டைவில் எவ்வளவோ அறிவு உண்டாயிருக் கிறது.

யான்:—(கையமர்த்தி) ஐயா! நீட்டிக் கொண்டே போகவேண்டா. சொல்ல வந்ததைச் சொல்லும்.

நறு மா:—இதோ வந்து விட்டது, சுவாமி; ஒரே நிமிஷம். எதற்காக இவ்வளவு சொல்ல வந்தே னென்றால், சாதாரணமாய்க் கிணற்றுத் தவளைகளாகக் கிடக்கும் நம்மவர்கள், பாவடி யும், வீடும், ஜவுளிக்கடையுமே உலகமென்று நினைத்துக்கொண்டு, உலக அனுபவம், பொது நோக்கம், பெருநோக்கம் முதலியவை இன்றி எல்லாவிதத்திலும் பிற இனத்தாரைக் காட்டி லும் மிகத் தாழ்ந்திருந்தும், தாங்களே கைலாயத்திலிருந்து வந்தவர்கள் என்றும், ஏனையோரைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்றும் நினைத்துக் கொண்டு 'நமக் குப் பேபர் என்? ஊர் சங்கதி நமக் கேன்? நாம் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போவோம்' என அறியாமையால் பேசுகிறார்களே! அதற்காகத்தான் சொல்ல வந்தேன்.

அந்தப் பேபரில் ஒருநாள், சுவாமி! சீர்திருத்தக் காரருள் ஒரு கூட்டத்தாராகிய ஆரிய சமாஜத்தார் கலியாணத்தைப் பற்றி எழுதி இருந்தது. நம்மவர் களுக்குள் கலப்பு (ஒற்றுமை) மணத்தை ஆதரித் துப் பேசுகிறீர்களே! இந்தக் கதையைக் கேளுங் கள். இவ்விதமான இழிவுகள் உண்டாகு மென்று தானே மொரட்டுப் பாளையம் கொழந்தையப்ப முதலியார் மகா நாட்டில் ஒற்றுமை மணத்தைக் குறித்து அவ்வளவு தூரம் கண்டித்துப் பேசினார்? இது சுவாமிக்கும் தெரிந்திருக்கலாம். கருவலாய் ஒல்லியாய் இருந்தாரே அந்தப் பெரியவர். ஆரிய சமாஜத்தில் ஜாதி வித்தியாசம் இல்லையாம். இச் சமாஜத்தைச் சேர்ந்த ஒரு வாலிபன் எங்கேயோ போனவிடத்தில் ஒரு அழகிய தோற்றத்தை யுடைய பெண்ணைக் கண்டு அவளைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பினானாம். அவனிஷ்டப் படியே கலியாணம் முடிந்தது. மறுநாள் காலையில் பெண்ணைக் காணோம். நாலாபக்கங்களிலும் தேடி னார்கள். கடைசியாக மணமகளை ஒரு தாசிவீட் டில் கண்டு, வரும்படி அழைத்தார்கள். 'தாசிக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்' எனப் பதிலிறுத் தாள். 'ஐயோ! நாங்கள் போட்ட இரண்டாயிரம் ரூபாய் நகை எப்படியாகிறது' எனக்கேட்க, அப் பெண் 'தாசியினிடம் கொடுத்தபொருள் மறுபடி யும் வருமா? இது உங்களுக்குத் தெரியாதா?' என்றாள். போனவர்கள் குனிந்ததலை குனிந்தபடி யே திரும்பி வந்து விட்டனர். பார்த்தீர்களா சீர் திருத்த மணத்தை!

யான்:—மாப்பிள்ளையாரே! உமக்குள்ள ஆக்ஷே பனை யெல்லாம் இம்மாதிரியாக முன் பின் யோசியாமல் குழியில் விழும் குருடர்கள் செய்யும் சம்பந்தத்தைப் பற்றித்தானே.

நறு-மா:—ஆமாம், அதேதான், சுவாமி.

யான்:—யானும் அதைத்தான் சொல்லுகிறேன். மகாநாட்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானத் தின் கருத்தும் அதுதான். அத்தீர்மானம் செங்குந்தர்களின் நன்மைக்கும் ஒற்றுமைக் குமே தவிர தீமைக்குக் கொண்டுவந்ததல்ல. பொறுப்பற்ற சிலர் கூறுவதைப்போல், தலை கீழாகக் கவிழும்படி—அதாவது, தக்கவிசா ரணையின்றிச் செங்குந்தர் என்று சொன்ன மாத்திரத்தில் சம்பந்தஞ்செய்யும்படி அத்தீர் மானம் ஒருபோதும் கூறவில்லை. தக்க பரம் பரையில் கொள்ளவேண்டும், கொடுக்கவேண் டும் என்பதுதான் அதன் கருத்தாகும். கண்மூடித்தனமாய் செல்வத்தையோ, அழகை யோ, அந்தஸ்தையோ கண்டு மயங்கி மூடத் தனமாய்ச் செய்யலாகாது. 'எண்ணித் துணிக கருமம்' என்ற நாயனார் மொழியை மறக்க வும் இயலுமோ? தற்காலத்தில் சிலர் ஜாதி வித்தியாசமே கூடாதென்கிறார்கள். அதைக் கண்டு நம்மவர்கள் மயங்கலாகாது. எல்லாம் இதுவரையில் சொல்லளவில் இருந்து வரு கிறதே யொழிய நம் நாட்டிலுள்ள பல ஜாதி களும் உண்மையில் ஒன்றானபாடில்லை. நமது சமூகமோ பிற்போக்கில் மேம்பட்டிருக்கிறது. முன்னணியிலிருக்கும் ஜாதிகளே இன்றளவும் வாசா கைங்கரியத்தோடு நிற்கின்றன வென் றால், நமக்கேன் அக்கவலை இப்போது? வான் பார்க்கும் பைங்கூழ்போல் வாளாவிருந்து வதையும் நம்மவர்களைக் கைதூக்கி விடுவார் ஒருவருமில்லை. நமக்கு நாமேதான் சீர்திருத் தம் செய்துகொள்ளவேண்டும். இதுவே தான் நாம் தேசத்திற்கும் உலகத்திற்கும் செய்த நன்மையாகும்.

ஆகையால், ஒற்றுமைச் சம்பந்தம் செய்ய விரும் பிய செங்குந்தர்கள் அவ்வக் குடும்பங்கள் உள்ள ஊரிலோ அல்லது சுற்றுப் பக்கங்களிலுள்ள கிரா மங்களிலோ வதியும் பொறுப்புள்ள செங்குந்தப்

பிரமுகர்களை நன்கு விசாரித்துணர்ந்து செய்வதே நலமாகும். தற்காலத்திய செல்வாக்காலோ, துணைப் பலத்தாலோ பின் விளைவதை எண்ணாது செய்தல் என்றும் இழுக்கையே உண்டாக்கும் என்பது திண்ணம். இதுதான் மகாநாட்டுத் தீர்மானத்தின் அபிப்பிராயமாகும். தீர்மானத்தின் உண்மை அர்த்தத்தை அனர்த்தமாக்கி நமது தலைச் சங்கத்தையும், மகாநாட்டையும் செங்குந்த உலகம் நிந்திக்குமாறு செய்வோர் அறிவிலிகளென்றே கூற வேண்டும்.

நறு-மா:—தாங்கள் சொல்லுவதை நான் பூராவும் ஒத்துக்கொள்ளுகிறேன், சுவாமி. ஆனாலும், 'கொடிது கொடிது பழக்கம் கொடிது'

யான்:—சோறு கொதிப்பதைச் சொந்தக்காரர் பார்த்தாலும் சாப்பிடாத நீர், இம்மூட்டையைத் தூக்கிக்கொண்டு பல்லினத்தவரும் அசுத்தமானவர்களும் பிரயாணம் செய்யும் ரெயிலில் ஏறி இடிபட்டு வந்தீரே, இதிலுள்ள சாதம் மாத்திரம் ஆகுமா? உறவினர் வீட்டில் சாப்பிடாத நீர் காப்பி ஓட்டலுக்குப் போய்ப் பலர்வாயில் வைத்துக்குடித்து எச்சில் செய்யும் பாத்திரத்தில் சாப்பிடலாமா? இரண்டு நாட்களுக்குமுன் நீர் காப்பி ஓட்டலுக்குப் போனதைப்பற்றி உம்முடன் வண்டியில் வந்தவர் உம்மைக் கேலி செய்தார்களல்லவா?

நறு-மா:—இதெல்லாம் பார்த்தால் இந்த காலத்தில் முடியுமா, சுவாமி?

யான்:—(கெடிகாரத்தைப் பார்த்து, இது கல்வி இல்லாது கரம்பேறிய பூமியாகையால் 'வெளியார் முன் வான்சுதை வண்ணங்கொளல்' என்னும் மறைமொழி ஈண்டு பொருத்த முடைத்தாகும் என எண்ணி) மணி 5 ஆய்விட்டது, இனிப் புறப்படலாமே.

நறு-மா:—சுவாமியும், நறுமணந்தானே வருகிறது?

யான்:—இல்லை. அடுத்துள்ள வேறோர் ஊருக்குப் போகிறேன். நீர் போகலாம்.

இவ்வாறு சொல்லி அவரை அனுப்பி விட்டேன். நறுமண மாப்பிள்ளை போன உடனே யான் எழுந்து ரெயிலடிக்கு அடுத்துள்ள ஆற்றிற்குச் சென்று நீராடி அனுஷ்டான முடித்து வாயோடு திருமுறைப் பாராயணம் செய்துவிட்டு, உருத்திராக்கமாலை யாதியவற்றை என்பெட்டியில் வைத்துக்கொண்டு நறுமணத்தை நோக்கிப் புறப்பட்டேன். வழியில் கண்டவற்றைப் பின்னால் கூறுவேன். நறுமண நகரத்தின் நடுத்தெருவில் யான் பிரவேசிக்கும் தருவாயில் எதிரே வந்த ஒருவர் 'ஐயா, எந்த ஊரோ?'. என்றார், என் ஊரைச் சொன்னேன். அதைக்கேட்டு அவர் 'பெரிய முதலியார் தங்களுக்குத் தெரியுமா?' என்றார். 'ஐயா! யான் பெரிய முதலியார் இரண்டாங் குமாரன்' என விடையளித்தேன். என் மறுமொழியைக் கேட்ட அவர் ஆநந்தப் பரவசராய் என்னைச் சேர்த்துத் தழுவிக்கொண்டு, 'எனதரிய நண்பரே, நம்மிரு குடும்ப சிநேகம் என் தமையனாரோடு போய் விட்டதென்று எண்ணினேன். தெய்வம் கூட்டி வைத்தது. வாருங்கள், வாருங்கள்' என்று உபசரித்துத் தமது குதிரைவண்டியில் என்னை அழைத்துக்கொண்டு இரண்டு பர்லாங் தூரத்திலுள்ள தமதில்லத்திற்குச் சென்றார். எனது அருமைத் தந்தையார் விண்ணுல கெய்தியதைக் கேட்டு ஆற்றொணாத் துயரெய்தினார்.

மாலை 4-மணிக்கு அமிர்தலிங்க முதலியாரும் யானும் பேசிக்கொண்டிருக்கையில் சென்னையிலிருந்து தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துப் பிரசாரகர் ஒருவர் வந்திருப்பதாகவும், மாலை 5-மணிக்கு மேல் பூசைக்கார முதலியார் பங்களாவில் நறுமணச் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடுவதாகவும் சொல்லி, என்னையும் வருமாறு கேட்டுக்கொண்டார். யானும் அதற்குச் சம்மதித்தேன். 4-45-மணிக்கு யாங்கள் இருவரும் புறப்பட்டோம். (கூட்டத்தில் என்னை இன்னாரென நறுமண மாப்பிள்ளை கண்டுபிடிக்காவண்ணம்) கூட்டத்தில் எனக்கிஷ்டமான இடத்தில் உட்கார்ந்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென வழியில் அமிர்தலிங்க முதலியாரைக் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவரும் இசைந்தார். கூட்டத்திற்குத் திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். பெண்மணிகளும் இருந்தார்கள். பூசைக்கார முதலியார் அக்ராசனம் வகித்தார். தலைவர் தமது முன்னுரையில் அன்று கூடிய கூட்டத்தின் அவசியத்தைப்பற்றியும், நமது தலைச்சங்கத்தின் குலத்தொண்டைப்பற்றியும் மிகவும் விரிவாகப் பேசினார். இது தலைவருடைய ஆழ்ந்த தெளிந்த தமிழ்நூல் ஆராய்ச்சியையும், வடமொழி ஞானத்தையும், ஆங்கிலமொழித் தேர்ச்சியையும், குலாபிமானத்தையும், விஷயங்களைக் கூர்ந்தறியும் நுண்ணறிவையும் விளக்குகிறது. தலைவர், தமது முன்னுரைக்குப் பின் கோடிலிங்க முதலியார் என்னும் ஒருவயோதிகரை 'நவவீரர் அவதாரம்' என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொண்டார். நறுமண மாப்பிள்ளை கூட்டத்திற்கு வந்திருப்பதை அறிந்த யான் அவர் கண்ணில் தென்படாவண்ணம் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தேன். வயோதிகர் எழுந்தார். அவருக்கு வயது 60-இருக்குமென மதிப்பிட்டேன். உடல் தளர்ந்தும் ஊக்கம் தளராத அப்பெரியாரது முகத்தில் வசீகர சக்தியும் தேஜசும் விளங்கின. ஜனங்கள் மிகுந்த ஊக்கத்தோடு கேட்க ஆரம்பித்தார்கள். கோடிலிங்க முதலியார் 'குணம் பொல்லேன்' என்னும் திருத்தாண்டகத்தை ஓதித் தாம் முன்னரே எழுதிவைத்திருந்த நோட்புத்தகத்தைப் பார்த்து வாசிக்க ஆரம்பித்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு:—

(அடுத்தமாதம் தொடரும்.)



## நிரூபங்கள்

### திருமணச் சீர்திருத்தம்

நமது செங்குந்த மித்திரனில் ஆடி௴ திருமணச் திருத்தத்தைப் பற்றி பவானி திரு. ஐ. க. பெருமாள்சாமி முதலியாரால் எழுதப்பெற்றிருந்த கட்டுரையைப் பார்த்தேன். அதில் கண்டுள்ளவற்றுள் சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியமென்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், அருகம் பொன் எடுப்பது, வெள்ளியும் பொன்னும் எடுத்தல், ஆயிரப்பெருந்திரி விளக்கு வைத்தல் முதலியவைகளும் குற்றமுடையதும் அர்த்தமில்லாததுமான வழக்கம் எனப் பொருள்பட எழுதியதை ஒப்புக்கொள்ள முடியாது. இது தங்களுக்கும் தெரிந்த விஷயம். நமது முன்னோர்கள் இத்தகைய மங்களச் சடங்குகளை ஏற்படுத்தியது நமது நன்மைக்கேயன்றி தீமைக்கல்ல. அருகம்மணை என்று அஷ்டையைக் கொண்டு பெரியோர்கள் மணமக்களை ஆசீர்வதிப்பதற்காகவும்,—இதனைச் சிலர் அருகம் பொன் எடுப்பதென்றும் சொல்லுவதுண்டு—இல்லற வாழ்க்கையில் இறங்கும் மணமகள் சம்சாரபிரபஞ்சத்தில் பெண்மகளாகிய தான் உணவாதிகளைத் தயாரித்து அதனை ஊட்டுவிப்பேன் என்று குறிப்பால் காட்டுவதாகவும்; சங்கு எடுத்தல் என்பது நன்மக்களைப் பெற்றுப் பாலூட்டி வளர்த்துச் சந்ததி விருத்தி செய்வதோடு உலகத்திற்குப் பேருதவி செய்வேன் என்பதைக் காட்டுவதற்காகவும், உலக வாழ்க்கை நன்கு நடைபெறுதற்குப் பிரதானமாய் வேண்டப்படுவது பொன்னாகையால், புருஷன் சாலும் கரகமும் என்பதில் சாலாக இருக்கும் பெரும்பாத்திரத்திலிருந்து பொன்னை எடுப்பது. அத்தகைய பொன்னைத் தேடுவேன் என்பதைக் குறிப்பதற்காகவும் ஏற்படுத்தப் பெற்றுள்ளன.

சிலர் பொன்னும் வெள்ளியும் எடுப்பதானது இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்களுக்கான உதவியைச் செய்வேன் என்பதற்குப் பெண்ணானவள் வெள்ளியையும், இவ்வுலக வாழ்க்கையிலும் முத்திப்பேறாகிய மேலுலக வாழ்க்கையிலும் பரிசுத்தமாகக் குற்றமில்லாமல் நடப்பேன் என்பதைக் காட்டும் வண்ணம் எவ்வகையாலும் களிம்பு ஏறாத தங்கத்தை எடுப்பதென்றும் மேலோர் கூறுவர்.

புற இருளைச் சோம சூரியர்களாகவும், அக இருளை அறிவாகவும் இருந்து கடவுள் நமக்கு விளக்கத்தைச் செய்கிறாராகையால், நமக்கு உற்சாகத்தை விளைவிக்கும் ஜோதி சொரூபியாகிய இறைவன் மங்களப்பொருள்களுள் பிரதானமானதென்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆகையால் கடவுள் சொரூபத்தின் அறிகுறியாகக் கருதப்படும் தீபமானது திருமண ஆரம்பத்திலிருந்து கங்கணம் அவிழ்க்கும்வரைப் பழுதுபடாது எரிய வேண்டுமென ஆயிரம் நூலைக்கொண்டு செய்த பெருந்திரி போட்டு ஆயிரம் பெருந்திரி விளக்கு வைக்கிறோம். இதுவே பெரியோர்களது கொள்கை. இவற்றை நானும் சரியென்றே ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆகையால், இத்தகைய நல்ல அர்த்தங்கள் பொருந்திய மங்களச் சடங்குகளை அர்த்தமற்ற மூடச் சடங்குகள் என்று அவற்றின் உண்மையை அறிந்து கொள்ள முடியாததினாலேயே நிந்திப்பது நியாயமல்ல. இம்மாதிரியான் சடங்குகளின் உண்மைக் கருத்துகளை அறிவதே அறிவாகும்.

குற்றம் பொறுத்தருள்க.

கூ. அ. சு. அருணசல முதலியார்,
திருச்செங்கோடு.

குறிப்பு:—திரு. முதலியார் அவர்கள் ஒப்புக்கொள்வதுபோல திருமணங்கள் சம்பந்தமாகச் சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியந்தான். காலத்தாலும், தேசத்தாலும் நம் நாட்டுத் திருமணச் சடங்குகள் சிறுபான்மை வித்தியாசப்பட்டும் இருக்கின்றன. முக்கியமான திருமணச் சடங்குகளுக்கு அர்த்தமில்லாமற் போகவில்லை என்றாலும், அவற்றின் உட்கருத்துக்களைப் பெரும்பாலும் மக்களுக்குக் கல்வி இன்மையாலும், அறிந்து விளக்கிக்கூறுவோர் இன்மையாலும் மணமக்களும் பிறரும் அறிந்து கொள்ளாதவர்களாகவே இருந்து வருகிறார்கள் என்பதையும் மறக்க இயலாது. ஆகையால் ஆங்காங்குள்ள பெரியோர்கள் மணவினைக் காலங்களில் நடைபெறும் சடங்குகளின் உண்மைத் தத்துவங்களை யாவரும் உணருமாறு நன்கு விளக்கிக் கூறுவது நல்லது. (ப-ர்.)

---

### பள்ளிக்கூடத்திலும் ஜாதி வித்தியாசமா!

ஷை தலையங்கமிட்ட நிருபம் ஆனிமாத மித்திரன் 222-ம் பக்கத்தில் பிரசுரிக்கப் பெற்றிருப்பதைக் கோயம்புத்தூர் ஜில்லாவைச் சார்ந்த ஒரு கிராமச் செங்குந்தச் சிறுவர்கள் கண்ணுற்று, மனங்கொதிப் பெய்தித் தங்களுக்குள் கிளர்ச்சிசெய்து பாடசாலைக்குச்சென்று, உபாத்தியாயரைக்கண்டு மாதாந்தரக் கணக்கு முதலியவற்றில் தங்களைத் தாழ்ந்த ஜாதியார் என்ற பிரிவில் பதிவு செய்திருப்பது பொருந்தாதென்றும், அறிவை வளர்ப்பதற்குரிய பள்ளிக்கூடங்களில், அதிலும் இளமைப்பருவத்தில் காரணமின்றித் தாங்கள் தாழ்ந்தவர்கள் என்ற அபிப்பிரா

யத்தை உண்டாக்குவது, 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்றபடி ஆயுள் பரியந்தம் தங்களைத் தாழ்ந்தவர்கள் என்றே எண்ணும்படிச் செய்யுமாகையால், அதை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்றும் மன்றாடிக் கேட்டுக்கொண்டதாகவும், அதற்கு உபாத்தியாயர் அது என்னிஷ்டமல்ல மேலதிகாரிகள் உத்தரவு என்று கூறிப் பலவித சமாதானங்கள் சொன்னதாகவும், பிள்ளைகள் சமாதானங்களை ஏற்றுக்கொள்ளாது தாழ்ந்த என்ற பிரிவிலிருந்து தங்கள் பெயரை நீக்குவது தான் தங்களுக்குத் திருப்தியை உண்டாக்கும் எனக் கூறி எல்லாப்பிள்ளைகளும் ஒற்றுமையாகப் பள்ளியை விட்டுப் பாவடிக்குச் சென்று தங்களைத் தாழ்ந்த என்ற பிரிவில் பள்ளியில் பதிவு செய்யுமாறு இடங்கொடுத்த பெற்றோரை நிந்தித்ததாகவும், இதையறிந்த பெரியோர்கள் பள்ளிக்குச்சென்று மன்றாடியும் பயனின்றிப்போனதாகவும், பின்னர் பரீக்ஷாதிகாரி வந்து பிள்ளைகளைத் தருவித்துக் கேட்டபோது, பிள்ளைகள் தங்கள் குறைபாட்டை முறையிட, அவரும் அது மேலதிகாரிகள உத்தரவென்று சொல்லி, 'இது புதிதா? தாழ்ந்தவர்கள் என்றால் பரீக்ஷையில் தேறியவர்களை மேல் வகுப்புக்கு அனுப்பமாட்டார்களா? எதைச் சென்னாலும் உங்களுக்கு வேண்டியது படிப்புத்தானே' என்பவை போன்ற சமாதானங்கள் கூற, அதனாலும் பிள்ளைகள் திருப்தி யடையாததைக் கண்ட நாட்டாண்மைக்காரர் முதலிய செங்குந்தப் பெரியோர்கள் பரீக்ஷாதிகாரியின் உத்தரவின்படி கல்வி இலாகா அதிகாரிகளுக்கு 'எங்கள்பிள்ளைகளைக் காரணமின்றித் தாழ்ந்த ஜாதியாரெனப் பள்ளிக்கூடங்களில் பதிவு செய்திருப்பதைக் கண்டு பள்ளிக்குப் போக மறுக்கிறார்களாகையால், அக்குறையைக் கூடிய சீக்கிரம் நிவர்த்திக்கக் கோருகிறோம்' என்னும் பொருள்பட ஒரு மனு தயார் செய்து அனுப்பியதாகவும், சென்னை கல்வி இலாகா அதிகாரிகள் அக்கொள்கையை ஒப்புக்கொண்டு உபாத்தியாயர்களுக்கு மனுதார் அபிப்பிராயத்திற் கிணங்க உத்தரவு அனுப்பியதாகவும், வித்தியாசக் கொள்கையைப் பிடிவாதஞ் செய்து ஆதரித்த உபாத்தியாயர் நீக்கப்பட்டதாகவும், அது முதல் நம் குலப்பிள்ளைகள் செவ்வனே வாசித்து வருவதாகவும் நாடகம் போன்ற வியாசம் ஒன்றை வீராவேசம் மிக்க ஒரு நிருபர் எழுதி எமக்கு அனுப்பியுள்ளார்.

குறிப்பு:—கல்வியில் பிற்போக்குள்ள ஜாதிகளுள் நமது ஜாதியும் ஒன்றென்பது உண்மையானாலும், தாழ்ந்த ஜாதியார் என நம்மைக் கூறுவது எவ்வகையிலும் பொருந்தாது. இந்நிரூபத்தால் கோவை ஜில்லாவிலுள்ள சில கிராமங்களில் இவ்விஷயமாக மனக்கொதிப்பும் கிளர்ச்சியும் இருந்து வருவதாகத் தெரிகிறது. நமது கிளைச்சங்கங்களும் ஏனைய செங்குந்த கிராமங்களும் இது விஷயமாய் முயற்சி எடுத்துக்கொள்ளுமாயின் நமது நிருபரது நோக்கம் நிறைவேறுமென எண்ணுகிறோம். (ப-ர்.)

## திருநெல்வேலியில் ஒரு செங்குந்தர் இலவச பெண் பாடசாலை

நமது செங்குந்த மித்திரன் ஜெனனமாகி மூன்றரை வருஷ காலமாகிறது. இது வரையும் அதில் நமது ஜாதியின் முன்னேற்றத்தைக் கருதி அநேக வியாசங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில் விசேஷமாய் நமது பெண் கல்வியின் அவசியத்தைப் பற்றிப் பலரும் பல வித அபிப்பிராயங்கள் கூறியிருக்கிறார்கள். பெண்கள் கல்வியறிவில் தேறி நாகரீக முடையவர்களா யிருப்பார்களாயின், அதுவே அந்த ஜாதியின் பெருமைக்கும் முன்னேற்றத்துக்கும் பெரிய அடையாள மென்பது யாவரும் ஏகமனதுடன் ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயம். அதற்காகவே நம்மவர்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமங்களிலும் பெண் பாடசாலைகள் ஸ்தாபித்துப் பெண்களைக் கட்டாயமாய் படிக்கச் செய்ய வேண்டுமென்பது நமது தலைச்சங்கத்தாரவர்களின் பிரதான நோக்கமாயிருக்கிறது.

அந்த நோக்கத்துக் கிணங்க இப்போது திருநெல்வேலி டவுன் செங்குந்தர் பெரிய தெருவில் மு. மு. சிதம்பரநாத முதலியாரவர்களுக்குப் பாத்தியப்பட்ட 52-ம் நம்பர் கட்டடத்தில் நானது 1930-ம் ஜுலைஃ 14-ம் உ திங்கள்கிழமை முதல் ஒரு பெண் பாடசாலை ஏற்படுத்தி அதில் ஷை பெரிய தெரு - நடுத்தெரு - வேம்படித் தெரு - என்ற நம்மவர்கள் குடியிருக்கும் மூன்று தெருக்களிலுமுள்ள பெண்களை யாதொரு சம்பளமுமின்றி இலவசமாய்க் கல்விபயிலும்படி ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். அதற்கு ஒரு கிறிஸ்தவ புருஷனும் மனைவியுமான உபாத்தியாயரையும் உபாத்தியாயினியையும் நியமித்திருக்கிறார்கள். அவ்விருவரும் போதனாமுறை பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்கள்.

அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளமும், மற்றும் அந்தப்பள்ளிக் கூடத்துக்கு வேண்டிய சாதல்வார் முதலிய சாமான்களின் செலவுமாகச் சகல செலவுகளையும் ஷை பெரிய தெரு - திரு. மு. மு. சிதம்பரநாத முதலியாரவர்களும் திரு. ப. ச. பழனியாண்டி முதலியாரவர்களும் அவர்களுடைய சொந்தத்திலிருந்து செய்து நடத்துகிறார்கள். அந்தச் செலவுகளுக்கு அவர்கள் மற்றவர்களுடைய உபகாரங்களைக் கிஞ்சித்தும் எதிர்நோக்காமலும் கல்வி பயிலும் பிள்ளைகளிடத்தில் யாதொரு சம்பளமும் வாங்காமலும் தங்கள் சொந்தச் செலவில் அந்தப் பெண் பாடசாலையை நடத்தத் தீர்மானித்திருப்பது அவர்களுடைய தர்ம சிந்தையை யாவருக்கும் வெளிப்படுத்துகிறது. அன்றியும் தர்மங்களிலெல்லாம் மேலான தர்மமாகிய வித்தியா தர்மத்தை அவர்கள் மனப்பூர்வமாய்ச் செய்கிறபடியால் அது மற்றும் அடுத்த கிராமங்களிலுள்ள நம்மவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவு மிருக்கிறது.



பாகங்களிலுமுள்ள நமது செங்குந்த கனவான்களுடைய இருதயங்களில் அந்த வித்தியா தர்மம் என்னும் அம்சம் வேரூன்றிப் பெண் கல்வி விஷயமாய் ஆங்காங்கே பாடசாலைகள் ஸ்தாபிக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

S. பாக்கியநாத முதலியார்,
பெரிய தெரு - திருநெல்வேலி

---

## தாடிச்சண்டையை நிறுத்த முயற்சி.

மலையாளச் செங்குந்தரிடையே பொருத்தமற்றதும் அநாகரீகமுமான சில வழக்கங்கள் இன்றும் இருந்து வருகின்றன. அவற்றுள் தாடி வளர்க்கும் பழக்கத்தை அடியோடு ஒழித்து விடவேண்டுமென்று வாலிபர்கள் பெரிதும் முயன்று வருகிறார்கள். தாடி வளர்க்கப் பிரியமில்லாமலும் ஜாதிக்கட்டுப்பாட்டுக்குப் பயந்துமுள்ள வாலிபர்களுக்குச் சிறிவயதிலேயே கலியாணம் செய்யவேண்டி இருக்கிறது. மிகச் சிறுவயதில் மணமுடிப்பதும் ஒரு துர்ப்பழக்க மென்பதை யாவரும் அறிவர். ஆயினும், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த வாலிபர்களுக்கு இளமையில் கல்யாணமாவதும் கூடாததாயிருக்கிறது. அவர்களுக்குத் தாடி வளர்க்கவும் இஷ்டமில்லை. ஆகையால், ஊர்ப்பிரதானிகளும் பெரியோர்களும் மனமிரங்கி இவ்வேண்டாப்பழக்கத்தை ஒழித்துவிட முன்வரவேண்டிய அவசியமாக இருக்கிறது.

இத்தாடிச் சண்டை எங்களூரிலும் (பாலப்புரத்தில்) நடந்து வந்தது. கழிந்த இரண்டு வருஷங்களுக்கு முன் இவ்வூர் வாலிபர்கள் ஒன்று சேர்ந்து ஒரே நாளில் தாடி மீசையை எடுத்து விட்டார்கள். ஊரில் இதனால் சண்டை சச்சரவுகள் உண்டாயின. ஊர்ப்பிரதானிகளும் பெரியோர்களும் எல்லா வாலிபர்களையும் ஒருங்கே ஜாதியை விட்டு விலக்க முடியாமை கருதி அவ்வாலிபர்களுக்குக் கலியாணமாகும் தருணத்தில் அரை ரூபாய் அபராதம் விதிப்பதாக முடிவு செய்து அவ்வாறே வசூல் செய்து வந்தனர். இவ்வழக்கமும் சரியல்லவென்று வாலிபர்கள் ஒன்று சேர்ந்து பெரியோர்களிடம் சென்று திருமண காலத்தில் அபராதம் வசூலிப்பதையும் ஒழித்து விடும்படிக் கேட்டுக் கொண்டார்கள். பெரியோர்கள் மனமிரங்கி அவ்வாறே ஒத்துக்கொண்டனர். இது இரண்டு மாதங்களுக்கு முன் நடந்தது. இதைப் போலவே மற்ற ஊர்களிலுள்ள பெரியோர்களையும் மனமிரங்கி இத்துர்ப்பழக்கத்தை அடியோடு ஒழித்துவிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

A. மந்திரி முதலியார்,
பாலப்புரம் செங்குந்தர்
சங்கக் காரியதரிசி.

---

செங்குந்த திலகர் கவிச்சக்கரவர்த்தி

# ஒட்டக்கூத்தர் திருநாள்

## (உத்திராட நக்ஷத்திரம்)

பிரமோதூதஸு ஆவணிமீ 19உ (4-9-'30) வியாழக்கிழமை

இத்திருநாள் செங்குந்தர்கள் வதியும் ஒவ்வொரு கிராமத்திலும் வெகு விமரிசையாக மேல் குறிப்பிட்டுள்ள தேதியில் நடைபெறுவதற்குக் குலாபிமானிகள் துணைபுரிவார்களாக. (ப-ர்.

ஒட்டக்கூத்தர் திருவுருவப்படம் தபால் செலவு உட்பட ரூ. 1-4-0

வேண்டுவோர் உடனே

'செங்குந்தமித்திரன் ஆபீஸ், கீழ்ப்பாக்கம், சென்னை'

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் உபகாரச்சம்பளத்தினை 1930—31 ௵த்தில் பெறவேண்டியவர்களின் ஜாபிதா

| எண் | மாணவர் பெயர். | படிக்கும் வகுப்பு | படிக்கும் பள்ளிக்கூடம் | சொந்தவூர் | அனுமதித்துள்ள உதவி |
|---|---|---|---|---|---|
| 1 | ஜெ. தங்கவேல் | சினியர் பி. ஏ. வகுப்பு | இராஜதானிக் கல்லூரி, சென்னை. | பனப்பாக்கம், வடஆற்காடு ஜில்லா | மாதம்பத்துரூ. |
| 2 | அ. தம்பிரான் | சினியர் இன்டர் மீடியட் வகுப்பு | பச்சையப்பன் கல்லூரி, சென்னை. | திருவத்திபுரம், வடஆற்காடு ஜில்லா | அரைச் சம்பளம் |
| 3 | தொ. இராமசாமி | 5 வது பாரம் | முத்தியாலுப்பேட்டைஹைஸ்கூல், சென்னை. | அய்யங்கார் குளம், செங்கல்பட்டு ஜில்லா. | ,, |
| 4 | மா. திருவேங்கடம் | ,, | சி. எஸ். எம். ஹை ஸ்கூல், காஞ்சிபுரம். | மாகுைம்பதி, செங்கல்பட்டு ஜில்லா | ,, |
| 5 | ஏ. சோமசுந்தரம் | 4 வது பாரம் | பச்சையப்பன் ஹை ஸ்கூல், காஞ்சீபுரம். | பிள்ளையார் பாளையம், செங்கல்பட்டு ஜில்லா. | ,, |
| 6 | வ. சு. வேதகிரி | 1 வது பாரம் | போர்ட் ஹைஸ்கூல், உத்திரன்மேரூர். | உத்திரன்மேரூர், செங்கல்பட்டு ஜில்லா. | ,, |
| 7 | மா. சிங்காரம் | 2 வது பாரம் | ஹிந்து ஹை ஸ்கூல், சென்னை. | ,, ,, | ,, |
| 8 | தா. சிங்காரவேல் | ,, | போர்ட் ஹைஸ்கூல், உத்திரன்மேரூர். | மாகுைம்பதி, செங்கல்பட்டு ஜில்லா. | ,, |
| 9 | பி. சி. வீராசாமி | சினியர் இன்டர் மீடியட் வகுப்பு | பச்சையப்பன் கல்லூரி, சென்னை. | பெருநகர், செங்கல்பட்டு ஜில்லா. | ,, |
| 10 | செ. பாலசுப்பிரமணியம் | 4 வது பாரம் | பென்னத்தூர் சுப்பிரமணிய அய்யர் ஹைஸ்கூல், மயிலாப்பூர், சென்னை. | மயிலாப்பூர், சென்னை. | மாதம் ஆறு ரூபாய் |
| 11 | கா. கஜவல்லி அம்மாள் | சினியர் செகண்டரி ட்ரெயினிங் வகுப்பு | லேடி வில்லிங்டன் டெரெயினிங் கல்லூரி, சென்னை. | சென்னை. | மாதம் ஆறு ரூபாயும் புத்தகச் செலவுக்குரூ.30ம் |
| 12 | ம. பத்மாவதி அம்மாள் | ஜுனியர் செகண்டரி ட்ரெயினிங் வகுப்பு. | ,, ,, ,, | ,, | ,, |
| 13 | சா. அருணாசலம் | 6 வது பாரம் | தீர்த்தபதி ஹை ஸ்கூல், அம்பாசமுத்திரம். | அம்பாசமுத்திரம் திருநெல்வேலி ஜில்லா. | அரைச் சம்பளம் |
| 14 | ரா. இலக்ஷ்மி அம்மாள் | 3 வது பாரம் | சரா டக்கர் செகண்டரி ஸ்கூல், பாளயங்கோட்டை. | பழைய பேட்டை, திருநெல்வேலி ஜில்லா. | மாதம் 3½ ரூ. |
| 15 | மு. ரா. பெருமாள் | பி. ஏ. ஹானர்ஸ் முதல் வருஷம் | செயின்ட் ஜோஸப் கல்லூரி, திருச்சி. | முத்திபாளையம், கோயம்புத்தூர் ஜில்லா. | மாதம் பத்து ரூபாய் |
| | இவ்வருஷம் புதிதாக உதவி பெறுபவர்கள் | | | | |
| 16 | கு. ஜெயராமன் | 1 வது பாரம் | தொண்டை மண்டலம் ஹைஸ்கூல், சென்னை | தென்மலி, வடஆற்காடு ஜில்லா. | அரைச் சம்பளம் |
| 17 | T. சொக்கலிங்கம் | ,, | போர்ட் ஹைஸ்கூல், ஆரணி. | முள்ளிப்பட்டு, வடஆற்காடு ஜில்லா | ,, |
| 18 | வே. இராமலிங்கம் | 6 வது பாரம் | முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம். | உளுந்தூர்பேட்டை, தென் ஆற்காடு ஜில்லா. | ,, |
| 19 | P. தண்டபாணி | ஜுனியர் இன்டர் மீடியட் வகுப்பு | பச்சையப்பன் கல்லூரி, சென்னை. | புதுவண்டி பாளையம், தென்னாற்காடு ஜில்லா. | புத்தகத்துக்கு ரூ 25 |
| 20 | மு. பாலசுப்பிரமணியம் | 5 வது பாரம் | பச்சையப்பன் ஹை ஸ்கூல், சென்னை. | முருகேசப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா | ,, ரூ 10 |
| 21 | P. பாலகிருஷ்ணன். | 3 வது பாரம் | ஹிந்து ஹை ஸ்கூல், மதுராந்தகம். | புளியரணங்கோட்டை, செங்கல்பட்டு ஜில்லா. | அரைச் சம்பளம் |
| 22 | A. முத்துச்சாமி | 3 வது பாரம் | போர்ட் ஹை ஸ்கூல், உத்திரன்மேரூர். | மாகுைம்பதி, செங்கல் பட்டு ஜில்லா. | ,, |
| 23 | K.V.M. வைத்தியலிங்கம் | 4 வது பாரம் | பச்சையப்பன் ஹை ஸ்கூல், காஞ்சீபுரம். | அய்யங்கார்குளம், செங்கல்பட்டு ஜில்லா | ,, |
| 24 | பா. கணேசன் | 4 வது பாரம் | சி. எஸ். எம். ஹை ஸ்கூல், காஞ்சிபுரம். | ,, ,, | ,, |
| 25 | ஞா. பொன்முகரி | ப்ரொபேஷனரி சபார்டினேட் வகுப்பு | எஞ்சினீயரிங் கல்லூரி. கிண்டி. | பிள்ளையார் பாளையம், செங்கல்பட்டு ஜில்லா | ,, |
| 26 | ர. சிவப்பிரகாசம் | 5 வதுபாரம் | சி. எஸ். எம். ஹை ஸ்கூல், காஞ்சிபுரம். | மாகுைம்பதி, செங்கல்பட்டு ஜில்லா. | அரைச் சம்பளம் |
| 27 | ப. கன்னியப்பன் | 4 வது பாரம் | சான்தோம் ஹை ஸ்கூல், மயிலாப்பூர். | மயிலாப்பூர், சென்னை. | ,, |
| 28 | K. R. சுப்பிரமணியம் | 3 வது பாரம் | இராஜா ஹை ஸ்கூல், கொல்லங்கோடு. | கொல்லங்கோடு, மலயாளம்ஜில்லா | ,, |
| 29 | M. அருணாசலம் | 1 வது பாரம் | ஹை ஸ்கூல், ஒத்தபாலம். | பாலப்புரம், மலையாளம் ஜில்லா. | ,, |
| 30 | ம. முத்து கிருஷ்ணன் | ஜுனியர் B. A. வகுப்பு | பிஷப் ஹெபர் கல்லூரி, திருச்சி. | மாப்பிள்ளைக்குப்பம், தஞ்சை ஜில்லா. | ,, |
| 31 | கா. அண்ணாமலை | ஜுனியர் இன்டர் மீடியட் வகுப்பு. | இராஜதானிக் கல்லூரி, சென்னை. | அவாரணி புதுச்சேரி, தஞ்சை ஜில்லா | மாதம் 12ரூ. |
| 32 | பா. பொன்னுசாமி | ஜுனியர் B.A. வகுப்பு. | ஹிந்து கல்லூரி, திருநெல்வேலி. | திருநெல்வேலி, திருநெல்வேலி ஜில்லா. | அரைச் சம்பளம் |
| 33 | மு. கருப்பன் | 8 வது வகுப்பு | போர்ட் எலிமெண்டரிஸ்கூல், பொன்பரப்பி. | பொன்பரப்பி, திருச்சி ஜில்லா | ,, |

உதவி பெறுவோர் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்:—

I. உபகாரம் பெறும் ஒவ்வொரு மாணவர்க்கும் அனுமதிக்கப்பெற்றுள்ள தொகை அக்டோபர் முடிவில் ஒன்றும், ஜனவரி முடிவில் ஒன்றும், மார்ச்சு முடிவில் ஒன்றுமாக மூன்று தவணைகளில் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பெறும்.

II. ஒவ்வொரு தவணைக்கும் ஒரு வாரம் முன்னதாகவே ஒவ்வொரு மாணவரும் தமது கலாசாலை அல்லது கல்லூரித் தலைவரிடமிருந்து தமது மார்க்குகளையும், தமது நடத்தையையும், தாம் படிப்பில் அடைந்துள்ள விருத்தியையும் குறித்து ஒரு நற்சாட்சிப் பத்திரம் வாங்கி அனுப்பவேண்டும். இந்த நற்சாட்சிப் பத்திரமின்றிப் பணமனுப்பலாகாது.

III. புத்தக செலவுக்கு உபகாரம் பெறுவோர் தாம் வாங்கிய புத்தகங்களின் பில்களைத் தமது கலாசாலைத் தலைவர்களது அங்கீகார கையெழுத்தோடு அனுப்பிய பிறகே பணங்கொடுக்கப்பெறுவர்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
கீழ்பாக்கம், சென்னை. 3-8-30

ம. சண்முகசுந்தர முதலியார்,
அமைச்சர்.

# அனுதாபம்

*நாளது 2-8-30-ல் திரு. S. குழந்தைவேலு முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய நமது தலைச்சங்கத்தின் நிருவாக சபைக்கூட்டத்தில் கீழ்க்கண்ட அனுதாப தீர்மானம் நிறைவேறியுள்ளது:—*

“ நமது சங்கத்தின் உபதலைவர்களுள் ஒருவரும், தென்னிந்திய செங்குந்தர் முதலாவது வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புச்சபையின் தலைவரும், ஷை மகாநாடு விமரிசையாக நடைபெறுதலுக்குக் காரண பூதர்களுள் ஒருவராயிருந்தவரும், சேலம் ஜில்லாவிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களிலெல்லாம் முக்கிய அங்கத்தினருள் ஒருவரும், குலத்தொண்டும் பொதுஜன ஊழியமுமே தமது வாழ்க்கைக்குரிய கடனென்று கருதி உழைத்தவரும், பிரபல வியாபாரியும் பெருந்தனிகருமான திருச்செங்கோடு தி. ரா. கந்தப்பமுதலியார் அவர்கள் சுரங் கண்டு அகால மரணமடைந்தமைக்கு ஆற்றொணுத் துக்கமடைவதோடு, அவரது மரணத்தினுல் செங்குந்தவுலகம் ஒரு சிறந்த குலாபிமான சிங்கத்தினை இழந்ததை யுன்னி மன நைந்து, காலஞ்சென்ற முதலியாரவர்களின் சகோதரர்களுக்கும், மைந்தர்களுக்கும், அவரது இதர உறவினர்க்கும் இச்சங்கம் மிக்க அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.”

*முதலியார் அவர்களின் ஜீவிய சரித்திரம் விபவஹுத்திய மார்கழி மித்திரனிலும் மகாநாட்டுமலரிலும் வெளியாயுள்ளது.*

ப. ர்.

### திரு. கந்தப்ப முதலியார்

### அவர்களுடைய தொண்டுகள்

### மக்கள் துயர்

*திருச்செங்கோடு வாசியும் பிரபல வியாபாரியும், மில் ஏஜண்டும், மிராசதாருமான திரு. டி. ஆர். கந்தப்ப முதலியார் டைபாயிட் ஜுரத்தால் திருச்செங்கோட்டிலிருந்து சேலம் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்து 29-7-30 செவ்வாய்க்கிழமை யன்றிரவு 12-25 மணிக்கு காலமானுர். திரு. முதலியார் மரணத்தைக் குறித்துத் துக்கம் காட்டும்பொருட்டு மறுநாள் (புதன்கிழமை) திருச்செங்கோடு போர்டு பாடசாலை முதல் எல்லா பள்ளிக்கூடங்களையும் மூடிவிட்டனர். திரு கந்தப்ப முதலியார் வெகு காலமாக திருச்செங்கோடு யூனியன் போர்டு தலைவராயிருந்து வருவதோடு, தாலுக்கா, ஜில்லாபோர்டுகளில் அங்கத்தினராயும், ஆலயக்கமிட்டி அங்கத்தினராயு மிருந்து வந்தார். மேலும் அவர் திருச்செங்கோடு போர்டு பாடசாலை ஆலோசனைக் கமிட்டித் தலைவராயும், பஞ்சாயத்துக் கோர்ட்டுத் தலைவராயும் கௌரவ ஜெயில் விசிட்டராயும், உப்பு இலாகா ஆலோசனைக்கமிட்டி அங்கத்தினராயும், திருச்செங்கோடு சிசு சம்ரக்ஷண சங்கத் தலைவராயும், பல ஹோதாக்களில் பொதுஜன சேவை புரிந்து வந்திருக்கின்றார்.*

*அன்றியும், ஸ்ரீ கந்தப்ப முதலியார், சமீபத்தில் ஈரோட்டில் நடந்த தென்னிந்திய செங்குந்தர் மாகாண முதல் மகாநாட்டுடன்நிகழ்ந்த வர்த்தக மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவராயிருந்து ஷை மகாநாட்டைச் சிறப்புற நடத்திவைத்திருக்கின்றார் திரு. முதலியார் தென்னிந்திய செங்குந்த சங்கத்து நிர்வாகசபை உபதலைவராயிருந்து ஷை சமூகத்தார். முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டு வந்திருப்பதும் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ கந்தப்ப முதலியாருக்குக் கைத்தொழில் முன்னேற்றத்தில் உள்ள ஊக்கத்திற்கு அவர் பீளமேடு பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் தர்ம ஸ்தாபன கைத்தொழில் பாடசாலை நிர்வாகசபை அங்கத்தினர்களுள் ஒருவராயிருந்து உழைத்து வந்திருப்பதே நன்கு விளக்கக்கூடும்.*

*திரு. முதலியார் அவர்கள் எதிர்பாராத மரணத்தால் செங்குந்த உலகம் பெரு நஷ்டத்தை அடைந்ததென்றே கூறலாம். நமது முதலாவது மகாநாடு சிறப்புற நடைபெறும்வண்ணம் இவர்கள் எடுத்துக்கொண்ட சிரமத்தை என்றும் மறக்க இயலாது. எந்தக் காரியத்தையும் வெ.. திறமையோடு யாவரும் வியக்குமாறு செய்துமுடிக்கும் பேராற்றல் வாய்ந்தவர். ஈரோட்டு மகாநாட்டிற்குப் பெரும்பாடுபட்ட இப்பெரியார் இரண்டாவது மகாநாட்டைக் கண்டுகளிக்கப்பெறுமை மிகவும் வருந்தத்தக்கது*

*நம் குலப்பெருந்தலைவர்களுள் ஒருவராகிய திரு. முதலியார் அவர்கள் நம்மவர்கள் கல்வி விஷயத்தில் கொண்டிருந்த ஆர்வம் ஈரோட்டு மகாநாடு பூர்த்தியான மறுநாள் அவர்கள் நம் பட்டதாரிகளுக்கும் ஏனையோருக்கும் அளித்த பெரு விருந்தினுல் நன்கு விளங்கும். மேலும் தமது இளைய சகோதரர் திரு. சுந்தரமுதலியார் அவர்களை உயர்தரக் கல்விக்காக இங்கிலாந்துக்கு அனுப்பியுள்ளார்.*

*நமது 72 கிளை நாடுகளுள் இன்றைக்கும் மிக்க திறமையோடு நடத்தப்பட்டுவரும் திருச்செங்கோட்டு நாட்டில் திரு. முதலியாரவர்கள் மிகுந்த செல்வாக்கு வாய்ந்தவர். இவரது அகால பிரிவால் திருச்செங்கோட்டு நாட்டுச் செங்குந்தர்களேயன்றி ஏனைய நாட்டாரும், சிறப்பாக நமது தலைச்சங்கமும் வருந்தாமலிருக்கமுடியாது.*

---



# செங்குந்தர் கிளர்ச்சி

## செங்கற்பட்டு ஜில்லா

### நாயக்கன் பேட்டை தணிகைவேலர் வாசக சாலை.

6-7-30உ *மாலை* 4-15*க்கு இவ் வாசகசாலையின் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் போர்டு பாடசாலையாசிரியரான உயர் திரு.* M. *முருகேச முதலியாரவர்களின் தலைமையில் நடைபெற்றது. தலைவர் சபைக்கு அறிமுகம் செய்யப்பட்டபின் கடவுள் வணக்கம் ஸ்ரீலஸ்ரீ தணிகாசல சுவாமிகள் அவர்களால் கூறப்பட்டது. தலைவர் தமது முன்னுரையில் வாசக சாலைக்கு ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றி எடுத்துக் கூறினுர். பிறகு* N. C. *இராஜமாணிக்கம் என்பவர் ‘நாயக்கன் பேட்டையும் அதன் மாணவர்களும்’ என்னும் விடயத்தைக் குறித்துத் தெளிவாகப் பேசி முடித்தனர். அதற்கடுத்து திரு.* K. C. *துரைசாமி என்பவர் ‘இந்தியாவும் அதன் நிலைமையும்’ என்பதைப்பற்றியும், திரு.* N. V. *துரைசாமி என்னும் மற்றொருவர் ‘ஒற்றுமை’ என்பதைப்பற்றியும், திரு.* N. P. *தணிகைராயன் என்பவர் ‘மதுவிலக்கு’ என்பது பற்றியும் பேசினுர்கள். உடன் தாங்கி திரு. வேதகிரி முதலியாரும் ‘வாசகசாலை’ என்பது பற்றிப் பேசினுர். கடைசியாக மேற்குறிக்கப்பட்ட சுவாமிகளால் ‘ஈசுவர பக்தி’ என்பது பற்றிப் பேசப்பட்டபின் தலைவர் தமது முடிவுரையைச் சொல்லி முடித்தனர்.*

*வந்தனோபசாரங் கூறப்பட்டு இரவு மணி* 7-15-*க்கு கூட்டம் இனிது நிறைவேறியது.*

N. P. **தணிகைராயன்.**

---

## தஞ்சை ஜில்லா

### காரைக்கால் செங்குந்த வாலிபர் சன்மார்க்க சங்கம்.

12-6-30உ *ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான் சிவபரஞ் சுடரில் கலந்து கொண்ட திருநாளாகிய வைகாசிமீ மூல தினத்தன்று எமது சங்கம் நிலைக்கப் பெற்றிருக்கும் செங்குந்த திரு மடத்தின் கண் இனிதே நடந்தேறியது.*

*பகலில் மடத்தில் பெருமானின் புராணபடனம் செய்யப்பட்டு நைவேதியத்துடன் தீபாராதனை நடந்ததுடன், வந்திருந்த அதிதிகளுக்கு அறுசுவை அன்னமளிக்கப்பட்டது.*

*இரவு பெருமான் திருவாய் மலர்ந்த பதிகங்களோதி ஐக்ய மஹோற்சவம் இனிதே நடந்தது.*

*பின்னர் சபையாரர்களுக்கு வீபூதிப் பிரசாதம் சந்தனம் தாம்பூலம் வழங்கப் பட்டு சமதிறைவனருளால் சுபமே நடை பெற்றது.*

30-6-30உ *மதாச்சாரிய மூர்த்திகள் ஸ்ரீ மாணிக்க வாசகப் பெருமான் சித்தாகாசப் பெருவெளியில் கலந்து கொண்ட திருநாள் எமது சங்கத்தலமாகிய செங்குந்தச் சிவ பஜனை மடத்தின்கண் மிக விமரிசையாய்ச் சங்க ஆதரவில் நடந்தேறியது.*

*பகலிலும் இரவிலும் மடத்தில் எழுந்தருளப் பெற்றிருக்கும் ஸ்ரீ நடராஜப் பெருமான் சமய குரவர்கள் முதலிய திருவுருவங்கள் அமைந்துள்ள அழகிய படத்திற்கு அலங்கார ஆராதனையும் புராண படனமும் செய்து அடிகளருளிய திருவாசகம் ஓதி அவர்கள் ஐக்ய மஹோற்சவம் நடைபெற்றதுடன், சபையார்க்கட்குச் சந்தனம் தாம்பூலம் வழங்கி இனிதே நிறைவேறியது.*

பொ. வைத்தியநாதன், *காரியதரிசி.*

---

## திருச்சி ஜில்லா

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்

### இரண்டாவது ஆண்டு விழா.

30-6-1930 *மாலை* 5½ *மணிக்கு உன்னியூர் செங்குந்தர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா திரு.* R. *மாணிக்க முதலியாரவர்களது தலைமையில் சுமார்* 500 *ஜனங்களுக்கு மேற்பட்ட பெருத்த கூட்டத்துடன் போர்டு பாடசாலையில் நடைபெற்றது. அவ்வமயம் காரியதரிசியால் ஆண்டு அறிக்கைப் பத்திரம் வாசித்ததும், ஷையாரால் ‘நமது சீர்திருத்தம்’ என்பது பற்றி உபந்யாசமும், திரு. ரு. சென்னியப்ப முதலியாரால் ‘ஒற்றுமை’ என்னும் பொருள் பற்றி ஓர் சொற்பெருக்கும் நடைபெற்றபின் சில சமூக சீர்திருத்த தீர்மானங்களும் அடியிற் கண்ட தீர்மானமும் நிறைவேறின.*

*முசிரித் தாலூகா, உன்னியூர் கிராமவாசிகள் முசிரித் தாலூகா போர்டு ஏற்பட்ட நாள் முதல் ரோட் செஸ் என்னும் வரி கொடுத்து வந்திருக்கிறுர்கள். அப்படி யிருந்தும், இந்தக் கிராமவாசிகள் பல முறை தாலூகா போர்டு திருச்சி ஜில்லா போர்டு முதலியவைகளுக்கு மஹஜர் மூலமாகக் காட்டுப்புத்தூரிலிருந்து உன்னியூர் வழியாக மோகனூருக்கு ரோட் போட்டுக் கொடுக்க வேண்டுமாய் விண்ணப்பித்துக் கொண்டும் நாளது வரை யாதொரு ஏற்பாடும் செய்யாமைக்கு இச்சங்கம் வருந்துவதோடு, கூடியசீக்கிரத்தில் காட்டுப் புத்தூரிலிருந்து உன்னியூர் வழியாக மோகனூருக்குப்போகும் பாதையைச் சீர்திருத்தி ரோட் போட்டுக் கொடுக்கக் காருண்ய மிகுந்த கவர்ன்மெண்டாரவர்களாவது இதில் பிரவேசித்து இக்குறையை நிவர்த்திக்க வேண்டுமாய் இச்சங்கம் வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறது.*

*மேற்கண்ட தீர்மானம் நிறை வேறியதும்,* (tea party) *தே நீர் விருந்தும் நடைபெற்ற பின்*

னர், செங்குந்தத் தலைவர்களுக்கு ஜே ! செங்குந்த மித்திரன் நீடூவாழ்க ! என்ற சப்தத்துடனும் கடவுள் வாழ்த்துடனும் இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது கலைவுற்றது.

P . மாரியப்ப முதலியார், காரியதரிசி.

## கோவை ஜில்லா

### விளாங்குரிச்சிச் செங்குந்த வாலிபர் கூட்டுறவு சங்கம்.

காளது ஆடிமீ 18உ மாலை 7 மணிக்கு இச் சங்கத்தின் கூட்டம் ஸ்ரீ காமாக்ஷியம்மன் ஆலயத்தில் திரு. அ. முனியப்ப முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. சுமார் 80 பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர் அவர்கள் குல முன்னேற்றத்தைப்பற்றியும், திரு. வை. பழனியப்ப முதலியார் கைத்தொழிலைப் பற்றியும், தலைவர் திரு V. A. பழனிச்சாமி முதலியார் ஒற்றுமையாலுண்டாகும் மேன்மையும் நன்மையும் என்பது பற்றியும், திரு. தெ. கு. அங்கப்ப முதலியார் வாலிபர் ஒழுக்கத்தைப் பற்றியும், காரியதரிசி திரு. V. S. முத்துச்சாமி முதலியார் ஒட்டக்கூத்தர் திருநாள் நடத்த வேண்டியதைப் பற்றியும் உபந்யாசம் செய்தார்கள். பின் திருவரளர்கள் நா. அலங்கார முதலியாரும் க. வெ. கிருஷ்ண முதலியாரும் கடவுள் வாழ்த்து கூறச் சந்தன தாம்பூலம் வழங்கி 9-3 0மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

## சேலம் ஜில்லா நாமக்கல் தாலுக்கா

### ஆனங்கூர் செங்குந்த வாலிபர் சன்மார்க்க சங்கம்.

26-7-30உ ஆனங்கூர் பாவடி விநாயகர் ஆலயத்தில் திரு. பு. ஆ. பழனியப்ப முதலியார் திரு. தெ. ப. பழனியப்ப முதலியார் இவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று அவ்வமயம் சென்னிமலை திரு. S. M. செங்கமல முதலியார் அவர்கள் 'கல்வி' 'சன்மார்க்க சபை' என்பவை பற்றி விரிவுரை செய்து, உறங்கிக் கிடந்த நம்மைத் தட்டி எழுப்பிய தலைச் சங்கத்திற்கு நன்றியறிதலாக நன்கொடை அளிக்க வேண்டு மென்று வற்புறுத்தினர். வேலப்பன் என்கிற மாணவன் 'நாம் ஒற்றுமைக்குத் தாழ்வு படாமல் ஒழுங்காக நடத்தல்' என்பது பற்றி விமரிசையாகப் பேசினான் மாணவரால் தேவாரமோதப்பட்டு திரு. பு. ஆ. பழனியப்ப முதலியார் பிரேரேபிக்கக் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச் சங்கமாக இங்கு ஆனங்கூர் செங்குந்த வாலிபர் சன்மார்க்க சங்கம் என ஒரு சங்கம் இன்று நிறுவப்படவேண்டும்.

2. இச்சங்கத்திலிருந்து பாவடிக்குத்தகையில் மாதாமாதம் ஒரு ரூபாயும் (1-0-0) திருமண விழாவில் எட்டணாவும் (0-8-0)வசூலித்துத் தலைச்சங்கத்திற்கு அனுப்பி மித்திரனில் பிரசுரிக்க வேண்டும். கடவுள் வாழ்த்துக் கூறி சந்தன முதலிய வழங்கி சபை இனிது கலைவுற்றது. நன்கொடை பின் வருமாறு.

தலைவர் பு. அ. பழனியப்ப முதலியார்.
பொக்கிஷதார். தெ. ப. பழனியப்பமுதலியார்.

## மதுரை ஜில்லா

### செங்குந்த இளைஞர் சங்கம் மதுரை.

27-7-30உ இரவு 7 மணிக்கு செங்குந்த விநாயகராலயத்தில் தல்லாகுளம் திரு. ச. பழனியப்ப முதலியாரவர்கள் தலைமையின் கீழ் கூட்டம் ஆரம்பிக்சப் பெற்றது.

கடவுள் வணக்கம் பாடியதும் திரு. P. V. முத்துக்கருப்ப முதலியார் அவர்கள் நமது சங்க முதலாவதாண்டு விழாவை அடுத்த செம்படம்பர்மீ முதல் வாரத்தில் நடத்துவதென்றும் அதற்கு கீழ் காணுபவர்களை மேற் பார்வையாளர்களாகக் கொண்ட ஓர் கமிட்டி நியமிக்க வேண்டு மெனவும் ஓர் தீர்மானம் கொண்டு வந்தார்.

கமிட்டி மெம்பர்கள்.

1. எஸ். ஆர். எம். சுந்தர முதலியார்
2. தி. ஆறுமுக முதலியார்
3. கொ. பழனிச்சாமி முதலியார்
4. கே. எஸ். முதலியார்
5. கே. வி. ராமசாமி முதலியார்
6. நா. ப. பழனிக்குமாறு முதலியார்
7. எஸ். பழனியப்ப முதலியார்
8. கே. வி. கேத்திரபால முதலியார்
9. பூ. மு. இருளாண்டி முதலியார்

இதை திரு. வீரபத்திரன் அவர்கள் ஆமோதிக்க யாவராலும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

அப்பால், "வாசகசாலைக்கு உண்டியல்." வாசகசாலை நிர்வாகம்,"சந்தா வசூல்,"என்பன குறித்து முறையே திருவாளர்கள் எம். அங்குஸாமி கே. எஸ். முதலியார் எஸ். மாணிக்கம் ஆகியோர் பேசினர். பின் கீழ்வரும் பத்திரிகைகளை வாசகசாலைக்குப் புதிதாக வரவழைத்துக் கொடுப்பதாக அவ்வவற்றிற்கு நேரில் குறிப்பிட்ட கனவான்கள் வாக்களித்தனர்.

1. தமிழ் நாடு வாரப்பதிப்பு—திரு. கே. எஸ். [முதலியார்
2. குடியரசு————திரு. K. சோணமுத்து [முதலியார்
3. ஆனந்தபோதினி வாரப்பதிப்பு—திரு. பி. எம். [இருளாண்டி முதலியார்
4. ஒற்றுமை————திரு. எஸ். பழனியப்ப முத [லியார்
5. ஜெகன் மோகினி—திரு. க. ஸி. ந. குருநாதன்

வந்தனோபசாரங் கூறியதும் இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

கே. வி. கனக சபாபதி. காரியதரிசி.

## ஆனங்கூர் திருமணவிழா நன்கொடை விபரம்

### பிரமோதூதஹு வைகாசிமீ 26உ

| திருமண ஊமீ உ | ஊரின் பெயர் | தகப்பன் பெயர் | மணமகன் பெயர் | ஊரின் பெயர் | தகப்பன் பெயர் | மணமகள் | தொகை. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1. ஆனங்கூர் | ரா. ஸரப முதலியார் | பழனியப்ப முதலியார் | சித்தோடு நடுப்பாளையம் | ராமசாமி முதலியார் | மாரியாயி அம்மாள் | 0 | 8 | 0 |
| | 2. ஷையூர் | குழந்தையுப்ப முதலியார் | ஆறுமுக முதலியார் | சித்தோடு கோட்டையகாடு | பழனியப்ப முதலியார் | கருப்பாயி அம்மாள் | 0 | 8 | 0 |
| | 3. ஷையூர் | பழனியப்ப முதலியார் | வையாபுரி முதலியார் | சென்னிமலை மேற்கு புதுப்பாளையம் | முத்தண்ண முதலியார் | பழனியம்மாள் | 0 | 8 | 0 |
| | 4. ஷையூர் | எ. செ. அங்கப்ப முதலியார் தமையனூர்மகன் | மருதையப்ப முதலியார் | மின்னப் பாளையம் | லக்ஷமண முதலியார் தங்கை | பழனியம்மாள் | 0 | 8 | 0 |
| | 5. வடகரையாத்தூர் | முத்தாமுதலியார் | பொன்னுசாமி முதலியார் | ஆனங்கூர் | ரா. பழனி முதலியார் | சுப்பாயி அம்மாள் | 0 | 8 | 0 |
| | 6. சித்தோடு நடுப்பாளையம் | ராமசாமி முதலியார் | நாச்சியப்ப முதலியார் | ஆனங்கூர் | அ. நாச்சி முதலியார் | பழனியம்மாள் | 0 | 8 | 0 |
| | | | | ஆனங்கூர் பாவடி குத்தகையில் தலைச்சங்கத்துக்கு வரவு | | | 2 | 0 | 0 |
| | | | | | | ஆக ரூபாய் ஐந்து மட்டும் | 5 | 0 | 0 |

தலைவர் : பு. ஆ. பழனியப்ப முதலியார்,
போக்கிஷதாரர் : தெ. ப. பழனியப்ப முதலியார்.

### கூத்தர் கவியின் புகழ்

துளைபடு மாமரமோ ரேழுமெய்தவன் றூது கவி
உளைபடு வாரிதியொன்றே கடந்ததொளிர் தரள
வளைபடு வாவி மணவைமன் கூத்தன் வகுத்த கவி
தளைபடு காலுடனே கடலேழையுந் தாண்டினதே.

கவியிரண்டில் முன்னது வானரம் (அநுமான்). பின்னது செய்யுள். தளை பிணிப்பு-கால், செய்யுளடி. ஒட்டக் கூத்தருடைய கவியின் புகழ் எழு கடலையும் கடந்து சென்று விளங்குகின்றது என்பது கருத்து.

இக்கவி சொக்காநாதப் புலவரால் பாடப் பெற்றது.

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

பிரமோதூதஹு ஆவணிமீ (1930ஹு ஆகஸ்ட்மீ—செப்டம்பர்மீ)

தக்ஷிணாயனம், வருஷரிது.

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | வாக்கிய சிரார்த்த திதி | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | ஞா | அஷ் 56-43 | ப※ 7-15 | சி 60 | 2 | ½ | ஷஷ்டி | தெகிழ | கிருத்திகை |
| 18 | 2 | திங் | நவ 54-10 | தி 8-0 | ம 8-0 அ | 1 | ½ | அஷ்டமி | தெமே | ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி |
| 19 | 3 | செ | தச 49-38 | ரோ 6-50 | அ 6-50 சி | 1 | ½ | தச | தெற்கு | ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி |
| 20 | 4 | புத | ஏகா 43-28 | மி 3-48<br>தி 59-8 | சி 60 | 1 | ½ | ஏகா | மேற்கு | [சில விடங்களில் |
| 21 | 5 | வியா | துவா 35-45 | பு 52-58 | அமி 60 | 0 | ½ | துவா | வடமே | |
| 22 | 6 | வெ | திர 26-55 | பூ 45-45 | ம 60 | 0 | ½ | திர | வடகிழ | |
| 23 | 7 | சனி | ச● 17-30 | ஆ 38-20 | ம 38-20 அ | 0 | 0 | சது | ஆகாசம் | சர்வ அமாவாசை |
| 24 | 8 | ஞா | அமா 7-45<br>பிர 58-20 | ம 30-40 | ம 30-40 சி | 0 | 0 | அமா | பூமி | |
| 25 | 9 | திங் | துதி 49-38 | பூ 23-8 | சி 60 | 0 | 0 | பிர | வடக்கு | சந்திர தரிசனம் |
| 26 | 10 | செ | திரி 41-58 | உத் 17-23 | அ 17-23 சி | 0 | ½ | துதி | தென்கி | |
| 27 | 11 | புத | சது 35-43 | அ 12-23 | ம 12-23 சி | 0 | ½ | திரி | தெமே | விநாயக சதுர்த்தி |
| 28 | 12 | வியா | பஞ் 31-15 | சித் 9-10 | சி 9-10 அ | 1 | ½ | சது | தெற்கு | |
| 29 | 13 | வெ | சஷ் 28-38 | சு 7-45 | சி 60 | 1 | ½ | பஞ் | மேற்கு | |
| 30 | 14 | சனி | சப் 28-13 | விசா 8-18 | சி 60 | 1 | ½ | சஷ் | வடமே | |
| 31 | 15 | ஞா | அஷ் 29-28 | அநு 10-40 | ம 60 | 1 | ½ | சப் | வடகிழ | |
| 1 | 16 | திங் | நவ 32-28 | கே 14-45 | சி 60 | 1 | ½ | அஷ் | ஆகாசம் | |
| 2 | 17 | செ | தச 36-45 | மூ 20-13 | அ 20-13 சி | 2 | ½ | நவ | பூமி | |
| 3 | 18 | புத | ஏகா 41-58 | பூர 26-38 | அமி 60 | 2 | 0 | தச | கிழக்கு | |
| 4 | 19 | வியா | துவா 47-48 | உத் 33-43 | சி 60 | 2 | 1 | ஏகா | வடக்கு | ஒட்டக்கூத்தர் |
| 5 | 20 | வெ | திர 53-53 | தி 41-23 | ம 41-23 சி | 2 | 1 | துவா | தெகிழ | திருநக்ஷத்திரம் |
| 6 | 21 | சனி | சது 59-50 | அ 48-30 | சி 48-30 அ | 2 | 1 | திர | தெமே | பௌர்ணமி |
| 7 | 22 | ஞா | ○ 60... | ச 55-43 | சி 60 | 2 | 1 | சது | தெற்கு | |
| 8 | 23 | திங் | பௌ 5-43 | பூர 60... | ம 60 | 2 | 1 | பௌ | தெற்கு | |
| 9 | 24 | செ | பிர 11-3 | பூர 3-23 | ம 3-23 அ | 2 | 1 | பிர | மேற்கு | |
| 10 | 25 | புத | துதி 15-43 | உத் 8-45 | சி 8-45 ம | 2 | 1 | துதி | வடமே | |
| 11 | 26 | வியா | திரி 19-35 | ரேவ 14-35 | சி 14-35 அ | 2 | 1 | திரி | வடகிழ | |
| 12 | 27 | வெ | சது 22-38 | அஸ் 18-43 | அ 18-43 சி | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 13 | 28 | சனி | பஞ் 24-10 | ப* 21-58 | சி 21-58 அ | 2 | 1 | பஞ் | பூமி | கிருத்திகை |
| 14 | 29 | ஞா | சஷ் [illegible]-23 | கி 23-53 | சி 60 | 2 | 0 | சஷ் | கிழக்கு | |
| 15 | 30 | திங் | சப் [illegible] | ரோ 24-13 | அமி 60 | 2 | ½ | சப் | வடக்கு | |
| 16 | 31 | செ | அஷ் 1[illegible] | மிரு 22-55 | ம 22-55 சி | 1 | ½ | அஷ்<br>நவ | தெகிழ | |

15889


## மின்சார ரசம்

சகல வியாதிகட்கும் தேவாம்ருதம் போன்றது.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.

**7 வருஷ பார்ச வாய்வு.**

* மின்சார ரசத்தை 2 நாள் சாப்பிட்டேன். எனக்கு 7 வருஷகாலமாய் இருந்த பார்ச வாய்வு உபாதி சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிச்சுகமடைந்ததைப் பற்றி நான் சந்தோஷமடைந்தேன்.

N. S. ராமசாமி ரெட்டியார், ஹெட்மாஸ்டர், எம். கரட்டிப்பட்டி. 17—10—29.

**25 வருஷ க்ஷயம்.**

** ஒருவர் சுமார் 25 வருஷ காலமாய் க்ஷயம், பெரும் சுவாசம், அதிக இருமல், இருமும்போது இரத்தம் கட்டி கட்டியாக வருவதுமாக மிக்க பாதை பட்டுக்கொண்டிருந்தார். மின்சார ரசத்தைக் கொடுத்துப் பூர்ண சௌக்கியமாய்ச் சுகமாக இருக்கிறது.

கிருஷ்ணசாமி முதலியார், வியாபாரம், 38/78, பிடாரியார்கோவில் தெரு, சென்னை. 15-4-29.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம். — ஒரேமுறை பரீக்ஷியுங்கள். — கேட்லாக் இனாம்.

புட்டி 1-க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

**மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்.**



## கற்பகத் தைலம்

குழந்தை வியாதிகட்கு அமிர்தம் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது.

பாக்கிங் தபால் செலவு உள்பட ஒரு புட்டியின் விலை ரூபா. 1—4—0.

3 புட்டி வாங்கினால் செலவின்றி அனுப்பப்படும். உபயோகிக்கும் முறை புட்டியின்மேல் காண்க. முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கபடமாட்டா.

எல்லா வியாதிகட்கும் ஏற்ற மருந்துகள் கிடைக்கும்.

**ப. அங்கமுத்து முதலியார்,** சிகிச்சாஞான பண்டிதர்,

கற்பக மெடிகல்ஹால், சத்தியமங்கலம். கோயம்புத்தூர்

(1)



## நமது தலைவர்களின் அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22-பேர் கொண்ட படம்) .... | 2 | 8 | 0 |
| ம. சண்முக சுந்தர. முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் .... | 1 | 8 | 0 |

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், பவழக்காரத்தெருவு, சென்னை.

# "செங்குந்த மித்திரன்"

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்ற மடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலக சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும். விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சீரிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக் கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ அ. பை. | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிக்கா ,, | 2—0—0 | ஒன்றுக்கு 0—2—6 |

# "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு"

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது,' 'எழுப்பெழுபது', மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப்போருபது, திருக்கை வழக்கம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிக்கை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை, செங்குந்த சிலாக்கிய மாலை, செங்குந்த வேற் பதிகம், செங்குந்த மரபு விளக்கம், தூறவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த குலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத்திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோ பயிண்டில் பொன் லிபிட் செய்தது. விலை ரூ. 2-8-0.
தபாற் கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்கும் இடம்:—

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,

சேத்துப்பட்டு, சென்னை

This Journal is published by T. N Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A Rangaswamy, at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.